# விவேக போதினி

"எப்பொரு ளெத்தன்மைத் தாயினு மப்பொருண்
மெய்ப்பொருள் காண்ப தறிவு."—திருவள்ளுவர்

தொகுதி VIII { ராக்ஷஸஸூ மார்கழிமீ : 1916-ஸூ ஜனவரிமீ } பகுதி 7

## பழமொழிப் போதம்

### PROVERBS EXPLAINED

'சஞ்சனரீ பூற்பொன் கடனுக் குதவுங்கொல்'
செஞ்சத் தெழுமகந்தை நீள்பிரமத்—தெஞ்சா
தயிக்கியமா மோஅவ் வகங்காரத்தின் சான்றாய்த்
தியக்கமில்கூ டத்தனலா தே. (27)

'தொத்திற்கு வந்தோன் றுரைத்தனஞ்செய் வான்
தத்தி விடயந் தமைச்சுடடும்—புத்தி [கொலே'
பிரமத் தபேதமாம் பெற்றியதோ ஆங்குத்
திரமுற்ற சாட்சியலா தே. (28)

'பூசைகண்ணை மூடிடிற் பூமியந்த காரமோ'
பாசமெய்யை யானெனும் பற்றுயிர்ச் சுழுத்தியால்
மூசுஞால மோடதன் மூலமாயை தீர்வதோ
தேசின்ஞான சிட்டையிற் றேய்தலாவ தன்றியே' (29)

கைசகத் திரளை நாளுமுண் டெனவே
தெய்துமிவ் வுடலை யானெனக் கருதி
மைமனந் துரிய வாழ்வினை யடையா
'பொய்நவில் வாய்க்குப் போனக மிலதே' (30)

கை'சி வைக்கிடம் நல்கிற் கிடைக்கிரு
மைகள் கேட்கும்' மனமொருக் காதுபோக்
கெய்த விட்டிடின் ஈரைம் பொறிவசத்
துய்வ றக்கவர்ந் தோர்வைச் சிதைக்குமால். (31)

'பெண்கள் உறையுள் பெருங்கலக காரண' மாம்
புண்கொள்சங் கற்பமெனும் பூவையர்சூழ்—பண்பில்
இதயம் பிரபஞ்சத் தேதுபழிப் பந்தம்
அதுசே ருயிர்ப்புருடற் காம். (32)

துளுமன தொன்றே, பளுமயல் என்றோர்,
'உளவினை யன்றிக், களவின ரின்றே.' (33)

சட்டு மாசையால் ஞானநன் னெறிசெலக் கருசாத்
திட்ட மெய்யையா னென்றுறு நெஞ்சமே துரிய
சிட்டை யாற்றிக மும்பர மாத்தும நிலைகொல்
'முட்டு காற்காம் பட்டவர்த் தனப்பரி யாமோ' (34)

'இயந்திரமில் லூருச் கிருப்பைப்பூக் கன்னவ'
வியந்த நிதித்தியினை மேவிப்—பயன்கொள்
விதியிலர்க்குப் புன்மை விடயானு போதங்
கதியிதனுற் றுன்பக் கடல். (35)

'உலோசனமில் கொக்கென்ன வுட்குளமே சான்றும்'
நலோய்சத் துவவிருத்தி'ஞானம்—நிலாவுகிலாச்
சித்தத் தினர்தாந் தெரிவைமயல் பூமிபுடன்
அத்தத் துழல்வா ரறி. (36)

நடிக்கு மெய்ப்பர ஞானம் விரும்பிடும்
படிக்கு வாரார் படர்கற் பணப்பொருள்
பிடிக்கு மாற்றிற் பெரிது மகிழ்ந்திடல்
'கொடிக்குத் தன்னது குஞ்சுபொற் குஞ்சரோ.' (37)

'சுண்டைக்காய் காற்பொன் சுமைகூலி முக்காற்
பொன்', கண்டமயக் கச்சகஞ்செய் காலேயினும்—
மண்டுதுயர், ஆகும் விடயகசை யாலறிவோர் பாச
மதன், போகமுற முப்பாகம் போம். (38)

'காணியிலா பங்கோடி நட்டமெனல்' விடயத்திற்
கலத்த லோடும்
பேணுறுசாத் திகவிருத் தியிற்பிரம சுகலேசப்
பிரதி விம்பம்
பூணுமெனி னும்பிரமா னந்தசமுத் திரமூழ்கும்
போத மார்க்கம் [தின்
வீணின்மனற் தொழியுமலா வினையன்றே ஞானத்
விரோதி தானே. (39)

# ராக்ஷஸ வருஷ தைமீ CALENDAR—பஞ்சாங்கம்

| யோ. | ஆங் | இக | தமிழ் | வார | ராக்ஷஸ வருஷ தை மீ / சாலிவாகன சகம் 1837 / கலியுகாப்தம் 5016 / பசலி 1325 / கொல்லம்-1091 / ஹிஜரி 1334 / 1916 வருஷம் ஜனவரி மீ — பிப்ரவரி மீ |
|---|---|---|---|---|---|
| ர | 8 | 14 | 1 | வெ | தச 55-26, பா 34-54. சா 17-30, தை 23-40, சே 0-17, அக 28-32, மகரரவி 3-8, மக 6 நாழிகை உத்திராயணம் பொங்கல்பண்டிகை கரிநாள் குன்யார்சம். [ம சார் உப கரிநாள். |
| பு | 9 | 15 | 2 | சனி | ஏகா 59-53, ✻ தா 40-14, சப 17-30, வ ஸி 27-30, திவி 7-31, திரு 3 புத 51-19, சர்வ ஏகா கோபூஜை வைவத |
| சு | 10 | 16 | 3 | ஞா | துவா 60-0, ரோ 46-14, சுப 18-15, பவ 29-56, திவி 24 14, கும்பசுக் 15-20, வஞ்சனத்துவா கரிநாள். |
| ர. | 11 | 17 | 4 | திங் | துவா 4-59, மிரு 5[illegible]-35, பிரா [illegible]-18, பா 4-59, திவி 1-13, உத்தி 3 ரவி 18-41, பிரதோ மழை 6-க்குன். |
| சு | 12 | 18 | 5 | செ | திர 10-17, திரு 58-59, மா 20-30, வை 10-17, திவி 15-49 அக 28-35, அவி 4 சக் 60-0. |
| | 13 | 19 | 6 | புத | சது 15-29, புன 6-0, வை 21-36, வணி 15-29, சா 3-23, பூர்ணமாநதி வைரா. [ஸ்நா ஆ குருதைபுஷ்யம். |
| ர | 14 | 20 | 7 | வியா | ◯ பௌ 20-11, புன 4-58, விஷ் 22-17, பவ 0-11, திவி 16-4[illegible], உத்தி 4 ரவி 34-35, அதிதி வணசங்கரி பூ மா |
| புசு | 15 | 21 | 8 | வெ | பிர 23-58, பூச 10-10, பிரி 22-18, கௌ 3-58, சா 15-46, புஷ்ய டகு கும்பாயன 1-6, புஷவக்ரம் 10-38, சத 1 |
| | 16 | 22 | 9 | சனி | துதி 26 41, ஆயி 11-22, ஆயு 21-31, கர 26-41, சா 17-14, அக 28-9. [சுக் 50-30, பிரதமாதிதி இஷ்டி. |
| ரபுகு | 17 | 23 | 10 | ஞா | திரு 28-8, மக 17-25, வௌ 19-49, பத் 28-8, சா 8-21, திரு 1 ரவி 50-8 திரு 2 வக்புத 13-39, உத்தி 1 குரு 27-0, |
| செசு | 18 | 24 | 11 | திங் | சது 28-18, பூர 19-13, சோ 17-6, பா 28-18, சா 7-41, கடகவக்ரசெ 60-0, சத 2 சுக் 2-50, கரிநாள். சங் சது. |
| | 19 | 25 | 12 | செ | பஞ் 27-11, உத்தி 17-47, அதி 13-25, தை 27-11, சா 11-51, பஞ்சமிதிதி மழை 5-க்குன் |
| பு | 20 | 26 | 13 | புத | சஷ் 24-53, அஸ் 19-11, சுக 8-47, வணி 24-53, சா 9-54, அக 28,41, பச்சா சப்தபுத 10-38, சஷ்டிதிதி. |
| ரக | 21 | 27 | 14 | வியா | சப் 21-33, சித் 17-33, திரு 3-19, குல 53-49, பவ 21-33, சா 2-12, திரு 2 ரவி 6-28, சத 3 சுக் 25-24, திதித்வயம் சானாவ்டமி திஸ்ரோவஷ்டி |
| பு | 22 | 28 | 15 | வெ | அஷ் 17-21, சுவா 15-3, சுண 5[illegible]-15, கௌ 17-21, திவி 28-19, திரு 1 வக்புத 5-0, நவமிதிதி. |
| சு | 23 | 29 | 16 | சனி | நவ 1[illegible]-0, விசா 11-54, விர 42-59, கர 12-30, திவி 21-17, சத 4 சுக் 51-30, பனி மருதியில் ஜனங்களுக்கு பிணி அதிகரிக்கும். [மா ஏகா கரிநாள். |
| ர | 24 | 30 | 17 | ஞா | தச 7-9, அனு 8-15, துரு 35-22, பத் 7-9, திவி 21-19, அக 28-8, திரு 3 ரவி 22-48. |
| | 25 | 31 | 18 | திங் | ஏகா 1-21, தவா 54-8, சே 4-15, வியா 27-35, பா 1-21, திவி 2[illegible]-5[illegible], பா 27-16, வைவதா. |
| புசு | 26 | 1 | 19 | செ | திர 49-15, மூல 0-8, பூரா 55-57, ஹர் 19-47, சா 22-38, திவி 22-31, உத்தி 4 வக்புத 26-0, பூரட் 1 சுக் 30 [illegible], பிரதோ. |
| ர | 27 | 2 | 20 | புத | சது 44-16, உத்தி 52-21, வஜ் 12-7, பச 17-0, திவி 14-45, திரு 4 ரவி 39-31, மாசிமழை 11-க்குன். [அக 28-52, தை அமாவாசை சிர உப விய சிரா புண்யகாலம். |
| | 28 | 3 | 21 | வியா | ● அமா 39-15, திரு 9-8, ஸித் 4-3, வ்ய 5[illegible]-59, சது 11-45, திவி 1-50, சா 9-51 |
| சு | 29 | 4 | 22 | வெ | பிர 34-55, அவி 41-37, வரி 51-22, கிம் 7-5, சே 2 43, யாக சுத பூரட் 2 சுக் 12-40, இஷ்டி. |
| | 30 | 5 | 23 | சனி | துதி 31-22, சத 44-54, பரி 45-40, பா 3-8, தவி 4-6, சந் தரி. [சுக் 53-43. |
| ரபுசு | 1 | 6 | 24 | ஞா | திரு 28-4, பூரட் 44-41, சிவ 40-49, கர 28-48, திவி 0-43, அவி 1 ரவி 55-14, உத் 3 வக்புத 44-0, பூரட் 3 |
| செ | 2 | 7 | 25 | திங் | சது 27-22, உத்தி 4-35, சித் 36-51, பச 27-22, திவி 8-21, அக 28-57, ஆயி 3 மகரசெ 59-0, சது விரு. |
| | 3 | 8 | 26 | செ | பஞ் 26-19, ரேவ 45-28, சா 33-9, பா 26-19, திவி 15-1, வஸந்தபஞ்சமி மழை 3-க்குன். |
| புசு | 4 | 9 | 27 | புத | சஷ் 28-16, அசு 49-8, சுப் 31-53, தை 28-16, சா 8-33, பிராகுதய பத 10-38, மீனசுக் 34-40, சஷ் உப. |
| ரகு | 5 | 10 | 28 | வியா | சப் 30-38, பர 53-15, சுப் 10-51, கர 30-38, திவ 14-46, அவி 2 ரவி 13-14, உதிரட் 2, குரு 35-0, ரதசப்தமி வைவ மகுரி சக் விரு (கார் உப. |
| பு | 6 | 11 | 29 | வெ | அஷ் 34-8, ✻ கார் 58-19, பிரா 29-56, பத் 2-23, திவி 25-46, அக 29-3, புதவக்ர சிவர் 10-38, பீஷ்மாஷ்டமி |
| ரசு | 7 | 12 | 30 | சனி | நவ 38-37, ரோ 60-0, மா 31-15, பா 6-32, சா 13-17, கும்பரவி 30-24, உத்தி 1 சுக் 26-30, மக 6 நவமிதிதி விஷ்ணுபதி. |

| | | | |
|---|---|---|---|
| குரு | | | சனி |
| | 3 கும சுக 11 கடக | | சே |
| ர ரா / சு பு | வக் செ 27 மீனசுக் | | செ |
| | | | |

# விவேக போதினி

தொ. 8] ராக்ஷஸ வருஷ : மார்கழீ [பகுதி 7


## மோக்ஷ ஸோபாநம்

### THE STEPS TO THE GOAL

ராஜயோகம் (ஆராய்ச்சி)

### 6 ஈச்வர உபாஸனை

வைதிக வழிப்படி ஈச்வரன் தன்மை இன்னது என்பதை முன்னர் எடுத்து விளக்கியாகி விட்டது எல்லா தனுகரண புவனபோகங்களையும் ப்ராணிகள் கர்மாதிகளுக்கு ஏற்ப அளந்துவிடும் ஸர்வக்ஞனும், ஸர்வவ்யாபியாயும், ஸர்வசக்திமானும், அருபியாயும், எந்த உருவம் வேண்டுமானாலும் எடுத்து அநுக்ரஹிக்கக் கூடிய ஆற்றலுடையவனும் உள்ள ஈச்வரன் என்ற பேரறிவுப் பொருளை எப்படி வழிபட்டு நற்கதி அடைவது என்பதை இங்கு எடுத்து ஆராயப் புகுவோம்.

ஈச்வரன் அருபப் பொருளாயும், எங்கும் வ்யாபித்துள்ளவனும், எந்த உருவத்தின் வழியும் தோற்றி அருளும் ஆற்றலுடையவனும் இருத்தலால், அவனுக்கும் ப்ரபஞ்சப் பொருள்கள் எல்லாவற்றிற்கும் அங்க, அங்கி பாவம் உண்டென்பது வெளிப்படை. இந்தத் தன்மையை நாம் நன்குணர நமது உடலையும் உயிரையுந்தான் எடுத்துப் பார்க்க வேண்டும். உயிர், உடலெல்லாம் பரவியுள்ள அருப வஸ்து: அதற்கு உடல் எல்லாம் அங்கம்தான். அந்த உயிரைத் திருப்திப்படுத்த நேரிட முடியாது. அதற்கு அதன் உடலின் எதாவது ஒரு அங்கத்தைத் திருப்திப்படுத்தித்தான் ஆகவேண்டும். உதாரணமாக, அழும் குழந்தையைத் திருப்திப்படுத்த வேண்டுமாகில் அதன் கையில் ஒரு பொம்மையையோ, ஒரு பழத்தையோதான் கொடுத்தாகவேண்டும். இதனுல் அதன் கையும், கண்ணும், வாயும் தான் நேரிட திருப்தி செய்யப்பட்டன. ஆனுல் திருப்தி அடைந்தது அந்த அங்கங்களே யல்ல; உள்ளே அருபியாக இருக்கும் ஜீவாத்மாதான். இப்படியே நாம் பழகி வரும் பெரியோர் சிறியோர்கள் எல்லோர் விஷயத்திலும் ஆகும். நமக்கு நேரிடத் தெரிந்தவர்களாகிய அற்ப அறிவு வ்யாபகம் உடையவர் விஷயத்திலேயே நெருங்கிப் பழகி நாம செய்ய வேண்டியதை அவர்களுக்குச் செய்ய அவர்களது ஜடமான அங்கங்களின் உதவி வேண்டியிருக்கிறது. இப்படி இருக்க, பேரறிவாகிய ஈசனை வழிபடவா அவன் அங்க உதவியில்லாது முடியும்? நமது மனம் ஈசனை நாட, அவன் வ்யாபகத்தின் லேசத்தில் அடங்கிவிடும் ப்ரபஞ்சத்துள்ளிருக்கும் ஒரு பொருளை உதவியாகக் கொண்டுதான் ஆகவேண்டும். இப்படி அங்கத்தின் வழியாக அங்கத்தை நாடுவதற்கு, வைதிக விக்ரஹாராதனம் என்று பெயர். ஆகவே விக்ரஹாராதனமில்லாது ஈச்வரனை அணுகவே முடியாது. சிலரது விக்ரஹம் ஸ்தூலமாக இருக்கும்; சிலரது ஸூக்ஷ்மமாக இருக்கும். பின்னவரில் சிலர் முன்னவர்களை மூடர்கள் மந்தர்கள் என்னலாம். இப்படிக்கூறும் கற்றறி மூடர்களது பேரறிவை என்னென்று கூறுவது!

இப்பொழுது எந்த ப்ரபஞ்ச வஸ்துக்களை எடுத்துக்கொண்டு அவைகளின் வழி ஈச்வ

ரனை ஆராதிப்பது என்ற கேள்வி வரும். உடல் உயிர் திருஷ்டாந்தத்தையே மறுபடி ஆராய்வோம். உடலிலுள்ள அங்கங்கள் எல்லாவற்றிலும் உயிரின் இயக்கம் ஸமமே. எதில் ஸுகம் ஏற்பட்டாலும் உயிருக்கு ஸுகம்தான்; எதில் வ்யாதி முதலிய துயரம் வந்தாலும் உயிருக்குத் துக்கந்தான். இப்படி இருப்பினும், பிறர் உயிரைத் திருப்திப்படுத்துங்கால் ஒழுங்குக்கு மீறியும், தமது சுத்தாசுத்த புத்திக்கு மீறியும், நடக்கமுடியாதாதலால், ஒருவனது சுத்தமாயுள்ள அங்கங்களை ஒழுங்குக்கு மீறாது நல்வழிகளிலேயே உபசரிக்க முடியும். இதுபோல ஈசன் எங்கும் வ்யாபகமாயிருந்தும், எதன் வழியாகவும் வெளிப்படும் சக்தி உடையவனாக இருப்பினும், அவன் மாத்திரமாக நாம் ஏகாக்ரமாக நின்ற பின்னர்தான், கருதப்படும் அவன் உருவபாவனையின் வழியே வெளிப்பட்டு அனுக்ரஹிப்பன். ஆதலால் நமது மனது எளிதில் ஏகாக்ரப்பட, சுத்தமாயும் ஒழுங்காயும் உள்ள ஈசன் அங்கங்களே உபாஸிக்கப்படவேண்டும். இந்த ஈசன் அங்கங்கள் ப்ரபஞ்சத்தில் பொதுவாக இரண்டு விதமாகக் காணப்படும். அவையாவன சித்து ஜடம் ஆகிய இவைகளே. இவைகளுள் ஜடப்பொருள்கள் எல்லாம் ப்ருதிவி(மண்), அப்பு (நீர்) தேஜஸ் (ஒளி), வாயு, ஆகாசம் ஆகிய இவை ஐந்தனுள் அடங்கும். சேதனங்கள் ஸூர்ய, சந்திர, மஹா புருஷர் இவர்களுள் அடக்கம். ஆகவே ஈச்வரனுக்கு அஷ்ட மூர்த்தங்களுண்டு. இவைகளைக்கொண்டு வழிபடும் ஈச்வரனைப் பன்னிரண்டு மூர்த்தி பேதங்களாக வேதங்களில் வெளிப்படையாகக் கூறப்பட்டுள்ளன. அவையாவன, ருத்ரர் (ஈச்வரன்), ருத்ரன் (சிவன்), தந்தி (பிள்ளையார்), நந்தி, ஷண்முகன், கருடன், பிரஹ்மா, விஷ்ணு, நரஸிம்ஹம், ஆதித்யன் (ஸூர்யன்), அக்நி, துர்க்கி (அம்பிகை) ஆகிய இவைகளே. இப்பன்னிரண்டு மூர்த்திகளைக் கொண்டு முன்னர் கூறிய எட்டு விக்ரஹங்கள் வழியே ராஜயோகத்தில் கூறப்படும் ஈச்வரப்ரநிதானமாகிய உபாஸனை பண்ணலாம். ஆனால் ஈச்வர மூர்த்தியையே எல்லா மூர்த்திகள் வழியாகக்கருதி உபாஸிப்பதே இந்த யோகத்திற்கு மிகவும் முக்கியம்.

இம்மூர்த்திகள் வழியாக ஈச்வரனை வழிபடுவதற்கு மூன்று வழிகள் வேதங்களில் கூறப்பட்டுள்ளன. அவைகளை கிருஷ்ணபரமாத்மா கீதை 9-ம் அத்யாயம் 15-ம் ச்லோகத்தில்:—

ஞானமெனும் வேள்வியினால் நன்குநினைந்து தொழும்
வினையோர்கள் எங்கும் இலங்குமுகம்—தானுடைய
என்னையே ஏகமா, வேறாக, பல்வகையா
உன்னி இறைஞ்சுவர்காண் உற்று.

எனக்குறித்திருக்கிறார். இதில் ஏகமா என்று மொழிபெயர்த்துள்ள ஏகத்வேன என்ற பதத்திற்கு வேதம் ஞானகாண்டபாகத்தில் கூறப்படும் 'ஈசனே நான்' என்று செய்யப்படும் அபேத அகங்கிரஹோபாஸனைதான் பொருள். ப்ருதக்த்வேன என்பது வேறாக என்று மொழிபெயர்க்கப்பட்டுள்ளது; இதற்கு உபாஸனாகாண்ட வழியான பேதப்ரதீகோபாஸனைதான் பொருள். இதில் ஈசனை நம்மைவிட வேறாகக் கருதி வழிபட்டு முதல் உபாஸனை நிலைப்பதற்கு வேண்டிய முயற்சியே காணப்படும். இதனுள்தான் ஸாதாரண விக்ரஹாராதனைகளான ப்ரதிமோபாஸனை அடக்கம். பல்வகையா என்று மொழிபெயர்க்கப்பட்டுள்ள பகுதா என்பது கர்மகாண்ட வழியாகிய அங்காவபத்த உபாஸனையே. இதில் ஈசன் கட்டளையாகிய ஸத்கர்மா

னுஷ்டானமே முக்கியம். அதில் அங்கமாக ஈச்வரன் உபாஸனை அமைந்து காணப்படும். இவைகள் மூன்றிலும் வர்ணாச்ரம தர்மத்திற்கு உட்பட்ட வைதிகர்களாகிய நாம் எல்லோரும் கட்டுப்பட்டுத்தான் கடவுள் வழிபாட்டை நடத்தவேண்டும். இவைகளில் ஞானகாண்ட உபாஸனை, முதல் இரண்டின் முதிர்ச்சியில் நமது அற்பமுயற்சியால் ஏற்பட வேண்டியதாதலால் மற்றைய இரண்டிலும் தான் நாம் முயன்று வரமுடியும். ஆகவே, ஈச்வரன் கட்டளைகளாகிய வர்ணாச்ரமாதி ஒழுங்குப்படி நமது சிறப்புப் பொது தர்மங்களை அனுஷ்டித்துக்கொண்டே, அவைகளில் ஈசன் உபாஸனையின் பொருத்தத்தைக் கண்டு தெளிந்து, ஏதாவது ஒரு ஈச்வர விக்ரஹத்தைக் கைப்பற்றி ப்ரதிகோபாஸனையும் செய்துகொண்டே வரவேண்டும். இந்த அங்காவபத்த, ப்ரதிகோபாஸனைக் கலப்பிற்கே பொதுவாக ஈச்வர உபாஸனை என்றுபெயர். மற்றொன்றான அகங்க்ரஹோபாஸனைக்கு ஈச்வரத்யான ஸமாதி என்று பெயர். அதில் தேறிவருங்கால்தான் ஈச்வர ப்ரத்யக்ஷம், மோக்ஷாபேக்ஷை, ஸாக்ஷாத்காரம் இவைகள் முறையே ஏற்படும்.

முன்னர் கூறப்பட்ட ஈச்வர ஸ்வரூப உணர்வும், திடமான கர்மானுஷ்டானச்சேர்க்கையும் இல்லாது, பிடிவாதமாகக் கீழ்வருணத்தாருக்கும், சிரழிந்த சில மேல்வருணத்தாருக்கும், ஈச்வரன் உருவங்கள் ஒன்றில் 'எல்லோருக்கும் ஹிதம் செய்பவனாயுள்ள பெரிய பிரபுவான ஈச்வரன் இங்கு அமர்ந்திருக்கிறான்' நாம் கடைத்தேற அவரை வழிபட வேண்டியது அவசியம் என்ற திட உணர்வுடன் ஈச்வரத்யான நிலைவரை மூர்த்தியினது சிலாதிபாவனை இழந்து, தம் மனதிலுள்ள கடவுள் பாவனையாக நின்று, ஈச்வரன் அநுக்ரஹம் பெறும் ஆற்றல் வந்துவிடலாம். மேல் அவர்களுக்கு மாறான வழிகளிலேயே மனம் போகாமல் தடைபட்டுவிடும். இந்த வழிக்கு மூடபக்தி என்று பெயர். இதன் விஷயமும், இதன் திருஷ்டாந்தமும், முன்னரே பக்தியோக பாகத்தில் விளக்கியாகி விட்டன. இந்த ராஜயோகத்தில் செய்யப்படும் ஈச்வர உபாஸனைக்கு விவேக பக்தி என்றுபெயர். இதற்கு ஈச்வர ஸ்வரூப உணர்வு, பற்று, அவன் கட்டளையான ஸ்வதர்மானுஷ்டானம் எல்லாம் அவசியம் வேண்டும். இதற்கு உதாரணமாகிய ப்ரஹ்லாதரது சரித்திரத்தை ராஜயோகமுடிவில் விஸ்தாரமாக எடுத்து ஆராய்வோம்.

இதுவரையில் வாசித்து வந்த சிலருக்கு ஒருவித சங்கை உண்டாகலாம். 'ஈச்வரனை உடலிலுள்ள உயிருக்கு நிகராகக்கொண்டு விக்ரஹாராதனையை அங்க அங்கிபாவத்தில் விதிப்பது முற்றிலும் பொருந்தாது. உயிருக்கு உடலில் அபிமானம் இருப்பதால் உடல்உபசரிக்கப்பட, உயிர் திருப்திபெற்று நற்பாவனையுடனிருக்கும். ஈச்வரனுக்கும், ப்ரபஞ்சத்திற்கும் அப்படி என்ன பொருத்தமிருக்கிறது?' என்பதுதான் அந்தச் சங்கை. ஈச்வரனுக்கு ப்ரபஞ்சத்தினிடம் ஒருவித அபிமானமில்லாவிடினும், ஜீவர்கள் கடைத்தேறவே ப்ரபஞ்சத்தைத் தன் தாக்கின்றியே விரியச்செய்திருப்பதால் தன் வ்யாபக லேசத்தில் அடங்கிய ப்ரபஞ்சத்திலுள்ள வஸ்துக்கள் வழி தன்னை அணுகி ஈடேறமுயலும் ஸத்துக்களை அவைகளின்வழி அபிமானத்தை முன்னிடாமலே அநுக்ரஹிக்கும் ஆற்றலுண்டு ஈசவரனுக்கு. இதை விளக்க மஹாத்மாக்களான ஜீவன் முக்தர்களைத் திருஷ்டாந்தமாக எடுத்துக்கொள்ளுவோம். அவர்களிடம் உபதேசம் பெற்று ஈடேற

அவர்கள் தேஹத்தை உபசரித்தும், அவர்கள் வாக்கைக் கேட்டும்தான் ஆகவேண்டியிருக்கிறது. அவர்களுக்குத் தேஹாபிமானமே யில்லை. அவர்களும் நமது வழிபாடுகளைத் தேஹத்தாலேயே ஏற்று நம்மை அநுக்ரஹிக்கும் ஆற்றலுடையவர்களல்லவா? இப்படித் தேறிய மானிடர்களாலேயே முடியுமாயின், ப்ரபஞ்சவஸ்து வழி, யோகியின் வழிபாடுகளை நன்கு ஏற்று அதன் வழியே அவனுக்கு அநுக்ரஹிக்க ஈச்வரனுக்கா ப்ரபஞ்ச அபிமானம் வேண்டும்? நம் உபாஸனை பலிக்க அது வேண்டியதேயில்லை.

முன் காட்டப்பட்ட படி ஈச்வர உபாஸனையான விவேகபக்தி செய்வதற்கு உபயோகமான சித் ஜட உருவங்கள் உலகில் எத்தனையோ இருக்கின்றன. இவைகளைப் பலவாறாக எடுத்து, வேதம் ருத்ரம் மூலமாக வெளியிடுகிறது: வேறு பல இடங்களிலும் கூறியுள்ளது வேதம். இவைகளைத் தழுவியே, கிருஷ்ண பரமாத்மாவும், கீதை 10-ம் அத்யாயமாகிய விபூதியோகத்தில் முக்யமான விக்ரஹங்களை விளக்கிக் காட்டியிருக்கிறார். இப்படி எல்லாம் பலவாறாக இருப்பினும், இக்கலிகாலக் கலக்கத்திற்கு ஏற்ப ஜடவஸ்து மூலமாக ஈச்வரனை உபாஸிப்பதே மிகச் சிறந்தது. முதல்படியாகிய அங்காவபத்த உபாஸனையான வைதிகஜாக்ரத் அவஸ்தையென்ற கர்மானுஷ்டானமே, ஸரிவர நடைபெற இடமில்லாக்காலம் இது. இதில் பலவிதமான ப்ரதிகோபாஸனை எல்லாம் எப்படி ஸரிவர உதவியாகவிருக்கும்? ஜீவர்களின் குறைகுணங்கள் மறைந்தே யிருக்கும் காலம் இது. அன்னை, பிதா, குரு, பெரியோர் இவர்களிடம் உள்ள வழிபாடு முதலியன குறைந்து வருகிறது. இதில் எவரையும் மஹானென திடமாகக் கடைப்பிடித்து ஆராதிப்பது, இருதிறத்தார் இயல்பாலும் முடியாத காரியம். சித்விக்ரஹ வழியாக உள்ள விக்ரஹாராதனம் பெரும்பாலும் இக்காலத்தில் நீடித்து நடத்தமுடியாது. மேலும் பெரியோரை ஆராதிப்பதற்கும் ஜடமான அவர் சரீர வழியாகத்தான் ஆகவேண்டியிருக்கிறது. சரீரமோ பொதுவாக மஹா அசுத்தமான வஸ்து. இவைகளை எல்லாம் ஈசனது அங்கஅங்கிபாவ ப்ரபஞ்ச ஸம்பந்தத்துடன் பொருத்திப்பார்த்தால், சுத்தமான ஜடப் பொருள்களான பஞ்சபூதங்களை விக்ரஹமாகக்கொண்டு ஆராதிப்பதுதான் இக்காலத்தில் நன்றாக நீடித்து நடைபெறக்கூடியது என்பது நன்கு விளங்கும். வேதத்தில் எட்டு மூர்த்தங்களும் துதிக்கப்பட்டிருப்பினும், பஞ்சபூதத் துதிகளைத்தான் நாம் நமது விக்ரஹாராதன மூலமாகக் கொள்ளவேண்டும். வெளி நாட்டாரும், அவர்களை ஆட்டுக்குட்டிபோலப்பற்றி ஓடும் நம் நாட்டார் பலரும், இந்த மூலவாக்யங்களின் நுட்பம் உணராது, வெறும் உணவுதரும் மண், வெப்பம் தணிக்கும் தண்ணீர், குளிர் தீர்த்து ப்ரகாசம் தரும் நெருப்பு, ஸுகம் தரும் காற்று இதுபோன்ற ப்ரபஞ்ச ஜடங்களையே அறியாமையால் ஈசனெனக் கருதித்தடுமாறிய மூடக்காட்டாளர்கள் பேரானந்தக் கொதிப்பே அவை என்று குணவிமர்சை செய்து குதூஹலிக்கின்றனர்! இவர் அறியாமையை ஆழம் பார்ப்பது எப்படி?

இந்தப் பஞ்சபூத விக்ரஹாராதனம்கூட முற்றிலும் எல்லோராலும் பின்பற்ற முடியாது. இவைகளில் ஆகாயமும், வாயுவும் அருபமாதலால் அவைகளை யோகிகள்தான் எடுத்தாள முடியும். அக்னியையும், அப்புவையும் இருபிறப்பாளரால்தான் தம் ஸ்வதர்மங்களுக்கேற்ப நன்றாகப் பின்பற்றி வழிபட

முடியும். ஆகவே, எல்லோருக்கும் பொதுவாக ப்ருதிவி பூதம் ஒன்றுதான் உள்ளது மேலும், ப்ருதிவியில் ஸ்ருஷ்டிக்ரமப்படி மற்றை நான்கு பூதங்களின் தன்மையும் இருப்பதால் இந்த ஆராதனை மிக ஸ்தூலமாக இருப்பினும், அதன்வழி ஈச்வரனை ஆராதிப்பதில் தாழ்வு ஒன்றுமில்லை. இப்பொழுது நாமெல்லோரும் ஆராதித்துவரும் சிலை, பாணலிங்கம், ஸாளக்ராமம், பஞ்சலோகங்கள், மரம் முதலியவைகளாகிய விக்ரஹங்கள் எல்லாம் பார்த்திவ விக்ரஹாராதனங்களே.

எங்கும் பரவியுள்ள ஈசன் ஒரு விக்ரஹத்தில் ஏற்படும் ஏகாக்ர பாவனைவழி வெளிப்படுவதெப்படி? அவன் ஸர்வாந்தர்யாமித்வத்திற்கு குறைவு வாராதா என்ற சங்கை இப்பொழுது ஏற்படலாம். இதற்குக் கட்டையின் திருஷ்டாந்தத்தை எடுத்துக்கொள்ளுவோம். கட்டைகளுக்குள்ளெல்லாம் நெருப்பு மறைந்து பரவியுள்ளது. ஏதாவது ஒரு கட்டையில் கடைதல் என்ற சிறப்புத்தொழிலைச் செய்தால் அதில் மறைந்துகிடக்கும் நெருப்பு விளங்கிக்கொண்டு வெளிப்படும். இப்படி வெளிப்பட்டு வருவதால், மற்றையக் கட்டைகளுள் இருக்கும் நெருப்பு குறைந்து போகுமா? இதுபோலவேதான், ஈச்வரன் எங்கும் பரவியிருப்பினும், பெரியோர்கள் செய்யும் ஸம்ஸ்கார விசேஷத்தால் எந்த உருவத்தில் வேண்டுமானாலும் தமது சக்தியை ஸ்தாபித்து ஏகாக்ரமாக வழிபடப்பட்ட மூர்த்திபாவனைகள் வழியாகத் தமது ஸர்வாந்தர்யாமித்வத்திற்குக் குறைவின்றியே தமது சக்தியை ஈச்வரன் காட்டலாம். அப்படி ஸம்ஸ்காரம்பெற்ற உருவங்கள் வெறும் கல்சிலைகளாயினும், வெளியிலுள்ள கற்கள் முதலியவைகளைவிட மிகச் சிறந்தவையே. முன்னுள்ள சுத்தர்களின் த்யானச் சிறப்பு அவைகளுடன் ஸம்பந்தப்பட்டிருப்பதால் அவைகள் வழி, ஈச்வரனை வழிபடுபவர்மனதை அவை எளிதில் ஏகாக்ர நிலைக்குக் கொண்டுவரும் ஆற்றலுடையவை.

விக்ரஹங்களை ஸ்தாபித்து ஈச்வரனை வழிபடும் வைதிக வழியை நன்கு ஆராய்ந்து பார்த்தால், ஈச்வரனைத் தவிர மற்றையவர்கள் எவ்வளவு பெரியோர்களாயினும், ஈசன் உருவங்கள் மூலமாயல்லது நேரிடத் தனி உருவங்கள் மூலமாக வழிபடத் தகுந்தவர்களல்லர் என்பது விளங்கும். அங்க அங்கி பாவமுள்ள பொருள்களைத்தான் அதன் அங்கத்தின் வழி அங்கியாகக்கொண்டு ஆராதிக்கலாம். நமது ஆசார்ய புருஷாள், தாய் தந்தையர் முதலிய பூஜ்யர்கள் எவ்வளவு சிறந்தவர்களாயிருப்பினும் தனி விக்ரஹங்கள் மூலமாக அவர்களை ஆராதிக்க வேதம் இடங்கொடுக்கவே இல்லை. அவர்களுக்கு விக்ரஹங்களுள் எல்லாம் வ்யாபகமில்லை. அவர்களுக்கு விட்ட சரீரங்களிலேயே வ்யாபகம் இல்லையே. அவைகளுக்குக்கூட பிணம் என்று வ்யவஹாரம் ஏற்படும்போது அவர்கள் விக்ரஹங்கள் எப்படி ஆராதனயோக்யமாகும்? இப்படிப்பட்ட பூஜ்யர்களை ஆராதிக்க வேண்டுமாகில், அவர்களை உத்தேசித்து ஈச்வரன் விக்ரஹம் ஒன்றையோ அல்லது சிறப்பாக ஏற்பட்ட ச்ராத்தாதிகள் போன்ற அங்காவபத்த உபாஸனை மூலமாகவோதான் செய்யவேண்டியது. இவைகளைவிட்டு, இக்காலத்தில் கிளம்பியுள்ள போட்டோ சித்திரங்கள் பதுமைகள் முதலியவைகளது ஆராதனத்திற்கும், ப்ரேத ஆராதனத்திற்கும் பேதமே இல்லை. மனுஷ்யர் படங்களை வெறும் அறிகுறிகளாக வைத்துக் கொள்ளலாமே ஒழிய, வைதிக விக்ரஹாராதன பூஜைக்கு அவை

தகுந்தவையேயல்ல. இதுபற்றித்தான் நமது பெரியோர்கள் தம்மைப் படமெடுக்க இடங்கொடுப்பதும் இல்லை; அவர்கள் சிஷ்யர்கள் ஆசாரியன் திருமேனியைப் பதுமைகளாகச் செய்து வைத்துக்கொள்ள விரும்புவதுமில்லை. கலிகாலக் கொடுமைக்கேற்ப இந்தப் படாதி ஆராதனமான அவைதிகவழி திடப்பட்டுக்கொண்டும் ஈச்வரன் விக்ரஹாராதனை குறைந்துகொண்டும் வருகிறது. ஈச்வரன் ஸம்ஸ்கார விசேஷத்தால் ஒரு மூர்த்திபாவனையின்வழி, வழிபடுபவரைத் தமது ஸர்வாந்தர்யாமித்வத்திற்குக் குறையின்றி அநுக்ரஹிப்பார். அப்படி ஏகதேசிகளான மஹா புருஷரால் முடியாது. அவர்கள் ஆற்றலை விக்ரஹங்களுள் இழுத்து நிறுத்தச் செய்யும் நமது முயற்சி அவர்களுக்கும் நமக்கும் ஒருவித நன்மையையும் பயக்காது. இது முழு அவைதிகமே.

ஈச்வரனை விக்ரஹமூலமாக ஆராதிக்க வேண்டியதில்லை என்று பெரும் பேரிகை அடித்துவந்த மஹான்கள் ஒவ்வொருவரும் தமது திரு உருவபப்படத்தை சிஷ்யர் எடுத்து வழிபட இடங்கொடுக்கவில்லையா? இவர்கள் உபதேசமொழியை ஸத்யமென்று நம்பும் அறிவிலிகளுக்குத் தாமஸமான ப்ரேதாராதனமாகிய உயிர் நீங்கிய உருவ வழிபாடேதான் கைகூடும். பொதுவாக, ஒரு குருவின் உருவத்தை ஆராதிப்பது மேன்மையா, அல்லது அந்த குருபோன்ற பல குருக்கள் ஆராதித்துக் கடைத்தேறிய ஈச்வரனது திவ்யமங்கள விக்ரஹத்தை ஆராதிப்பது மேன்மையா? இப்படி உண்மை இருந்தும் நமது மதத்தில் விக்ரஹாராதனைப் பழிப்பு இருக்கிறதே அதற்கு என்ன ஸமாதானம் சொல்வது என்ற கேள்வி வரலாம். இவை இங்கு நாம் எடுத்துக் காட்டப்புகுந்த வைதிக அங்க அங்கி பாவம் மறந்துபோன மஹான்கள் அறியாக் கூற்றாயும் இருக்கலாம்; அல்லது புத்தி நுட்பமுடையவர்கள் மூடபக்தி வழிபோவதைவிட விவேகபக்தி வழிபோவது நலம் என்று கூறவந்த எச்சரிக்கைகளாக இருக்கலாம். விக்ரஹாராதனத்தையே விட்டுவிட வேண்டும் என்று தடுக்க வந்த வாக்யங்களாக அவைகளைக் கொள்ளக்கூடாது. விக்ரஹாராதனத்திற்கு விரோதமாகக் கூறப்படும் 'நட்டகல்லை' என்ற சிவவாக்கியர் பாடலிலும் கூட 'சுட்டசட்டி சட்டுவங்கரிச்சுவை அறியுமோ?' என்ற பாகத்தில் விக்ரஹமே நேரிடப் பயன்கொடுப்பதல்ல, அதன் விஷயமாக நமக்கு ஏற்படும் ஏகாக்ர ஈச்வர பாவனையே. இப்படி இருப்பினும், சட்டிசட்டுவமின்றி கரி சமைக்கமுடியாதது போல, விக்ரஹங்களன்றி ஈச்வர பாவனை நமக்குதிடப்பட வழியும் இல்லை என்பது குறிக்கப்படுகிறது. ஆகவே மூடபக்தியை முன்னிட்டு ஏகாக்ரம் வருவதற்குமுன் உலக வழிகளில் ஒழுங்கு தவறி இறுமாப்பால் நடந்து கெட்டுப்போவதைவிட, விவேகபக்தியைக் கடைப்பிடிப்பது நலம் என்பதைப் பொது ஜனங்களுக்கு ஸ்தாபிக்கவந்தவைகள் இந்தக் கண்டனங்கள். இதுபோல உள்ள வெளிநாட்டார்கள் கண்டனம் இப்படிப்பட்டதல்ல. அவர்கள் முழுமூட விக்ரஹாரானதம் செய்து பூசாரிகள் திருட்டுத்தனத்திற் காளாகித் திண்டாடிய திருவாழ்த்தான் பூனைகளே. விக்ரஹம் என்றால் அவர்களுக்கு நடுக்கமும் வெறுப்பும் உண்டாகும். வைதிக விக்ரஹாராதனமோ அவர்களுக்குத் தெரிய இடமேயில்லை. ஆகவே அவர்களும் அவர்கள் வாக்கை வேதவாக்கென்று நம்பும் நம்மவரும் நமது மதத்தில் காணப்படும் விக்ரஹாராதன விஷய எச்சரிக்கைகளைக் கொடிய கண்டனமெனக் காட்டி நம்முள் மந்தர்களைக்கெடுத்துத் தாம் விழுந்துள்ள படுகுழியில் வீழ்த்தி வருகின்றனர். இவர்கள் வாக்கை நம்பி மோசம் போகலாகாது.

'விக்ரஹாராதனை, வழிபடுபவன் பாவனை மாத்திரமே. உண்மை வஸ்துவை உணரும் ஆற்றலில்லாதவர் செய்யும் குருட்டு முயற்சியே. அந்தப் பாவனையைவிட பாவிப்பவன் மேல். ஆதலால் தன்னையே ஈசன் என்று உணர்ந்து அமர்ந்து விடவேண்டும் விக்ரஹாராதனையை விட்டு' என்பவர் இக்காலத்திய ஆபாஸ வேதாந்திகள். இவர்கள் உபயோகிக்கும் பாவனை என்ற சொல், இல்லாததை உள்ளதாகக் கருதுவது என்ற பொருளில் உபயோகப்படுத்தப்பட்டுள்ளது. விக்ரஹத்தில் ஈசன் இல்லை என்று கூற வேதாந்தியால்தான் முடியுமா? ஆகவே எங்கும்

# ஐக்கிய சங்கங்கள்

## CO-OPERATIVE SOCIETIES*

இம்மாதிரியான மஹாநாடு கூடுவதால் ஒருவரோடு ஒருவர் கலந்து பேசிக்கொள்ளவும், ஒரு சங்கத்தார், அநுபோகத்தால் தெரிந்துகொண்ட விஷயங்களை மற்ற சங்கத்தாரும் கேட்டுத்தெரிந்துகொண்டு பயனடையவும் ஒரு சமயம் ஏற்படுகிறது. ஆதலால், அவரவர் சங்கங்களில் உண்டான சிரமங்களையும், ஏற்பட்ட இடையூறுகளையும், அவைகளை நீக்கிய விதத்தையும்பற்றி இச்சபைக்கு முன்பாகச் சொல்லுவீர்களென்று நம்புகிறேன்.

இம்மஹாநாட்டிற்கு வருவதால், நமக்கு ஒரு ஊக்கமும் உற்சாகமும் உண்டாகி, அவரவர் சம்பந்தப்பட்டிருக்கும் சங்கமானது அடுத்த வருஷத்துக்குள் சிறிதேனும் விருத்தியடையும்படி முயற்சிசெய்யத் தூண்டுதல் ஏற்படுகிறது. சங்க அங்கத்தினர்களின் சங்கியையை அதிகரிப்பதும், டிபாஸிட்டுகளும் மூலதனமும் பெருகுவதும் மாத்திரமே சங்கம் விருத்தியடைந்ததற்கு அடையாளமன்று. எந்தக் காரியத்துக்காகக் கடன் வாங்கப்பட்டதோ, அந்தக் காரியத்திற்கே அந்தப்பணம் செலவாகும்படிக் கவனித்து, ஒவ்வொருவனும், சொன்ன சொல்லுக்கு மாறாக நடக்காதபடிச் செய்யவேண்டும்; குறித்த தவணையில் வட்டியையும்,முதல் முழுமையும் அல்லது ஒரு பாகத்தையும் செலுத்தும்படிச் செய்வதால் காலந்தவறாது காரியங்கள் செய்யும் பழக்கத்தை உறுதிப்படுத்தவேண்டும்; தகுந்த காரணங்களின்றி கெடுத் தள்ளிக்கொடுக்காமல், எல்லோருக்கும் ஒழுங்கான பழக்கங்கள் படியும்படிச் செய்யவேண்டும். கடன் வாங்கிக் கடனடைக்காமல், கஷ்டப்பட்டு சம்பாதித்ததிலிருந்து மீத்து ஒவ்வொருவனும் தனது கடனடைக்கும்படிச் செய்து செட்டை விருத்திசெய்யவேண்டும். உங்களில் ஒவ்வொருவருக்கும் சங்கத்துடன் ஐக்கியபாவம் உண்டாகி, சங்கத்தினது லாபநஷ்டங்களை உங்களுடைய சொந்த லாபநஷ்டம் போல் உணரவேண்டும். தவறாமல் சங்கத்தின் கூட்டங்களிற்குச் செல்வதாலும், நடவடிக்கைகளைக் கவனத்துடனும் ஒற்றுமையுடனும் நடத்துவதாலும், அவ்வுணர்ச்சியைக் காட்டலாம். ஒவவொரு மெம்பரும், மற்ற ஒவ்வொரு மெம்பரின் க்ஷேமத்தைத் கருதவேண்டும். மனஸ்தாப முண்டாகும்படிக் குறுக்கிடாமல், நல்ல வார்த்தை சொல்லி ஒருவரையொருவர் நேர் வழிகளில் செலுத்தவேண்டும். அவசியமானால், பஞ்சாயத்தாருடைய உதவியினாலாவது அவ்விதம் திருப்பவேண்டும். பஞ்சாயத்தாரை நியமிப்பதில் திறமையும், பிறர் நன்மையைத்தேடும் குணமும், நிர்வாக சாமர்த்தியமும் உள்ளவர்களைத் தேர்ந்தெடுக்கவேண்டும். நானிப்பொழுது கூறியவைகள் உங்கள் மனதிற்பதிந்து உங்கள் சுபாவமாய் அமைந்து விடவேண்டும். உங்களுடைய தினசரி வாழ்க்கையில் அவைகள் வெளியாகவேண்டும். ஐக்கியம் பரப்ப விரும்பும் ஒவ்வொருவனுக்கும் நான் சொன்னவை இன்றியமையாதவை; அதிலும், இக்காரியத்தில் முதல் செல்பவர்களாயிருக்கும் உங்களுக்கு அவைகள் அத்தியாவசியம்.

உங்களருகில் வசிப்பவர்கள் தங்களுக்கும் உங்களதுபோல் ஒரு சங்கம் ஏற்படுத்திக் கொடுக்கவேண்டுமென்று தாமாகக் கேட்டுக் கொள்ளுதலே, உங்கள் முயற்சி பலித்ததற்கு அடையாளம். ஐக்கிய உணர்ச்சி இவ்விதமே பரவவேண்டும். அதிகாரிகளின் நிர்பந்தத்தாலேயோ, ஆத்திரக்காரர்களுடைய தூண்டுதலாலேயோ இங்கு ஒரு சங்கம் அங்கு ஒரு சங்கமாகக் கிளப்புவது பிரயோஜனமில்லையென்பது எனது அபிப்பிராயம். ஒவ்வொரு சங்கமும் தன்னைப்போல் இன்னும் ஒருசங்கம் ஏற்படக்காரணமாய் நின்றால், இப்பொழுதிருக்கிற 68 சங்கங்கள் அடுத்த வருஷம் இரண்டு மடங்காய்விடும். இந்தக் கணக்குப்படி நான்கு வருஷங்களில் 1,000 சங்கங்கள் ஏற்பட்டுவிடும். பின்பு செண்ட்ரல் பாங்கி புரட்டக்கூடிய பணத்தின் வரம்பினாலேயே,புதுச்சங்கங்கள் உண்டாவதற்கும் வரம்பு ஏற்படும்.

* Translation of a speech by the Hon'ble Rao Bahadur V. K. Ramanujachariar, at the Tanjore District Co-operators' Conference.

போட்டியிட்டு முன் செல்லுவதையே இலக்கியமாகக் கொண்டது தற்கால நாகரீகம்: ஆனால், இப்பொழுது நடக்கும் மஹா யுத்தம் முடிந்தபிறகு, இனி எழப்போகும் நாகரீகத்தில் ஐக்கிய உணர்ச்சியே வாழ்க்கையின் தர்மமாக ஏற்படும். எடுத்த கருமம் முடித்தல், மனதை ஒருவழி நிறுத்தல், பெருங்காரியங்களைத் தொகுத்துச் சீராயும் செம்மையாயும் செய்துமுடித்தல், இது போன்ற இதுவரைக் கற்றதான குணங்கள் நிற்கும்; ஆனால் அவ்விதத் திறமைகள் பலரை நசுக்கிச் சிலர் ஐசுவரியத்தில் புரளும் வண்ணம் உபயோகப்படாது, இன்னும் மேன்மையான வழிகளில் பயனளிக்கும். வலியுள்ளோர் வலியற்றவர்களைத் தாங்குவர்; அறிவினர் அறிவில்லாதவர்களுக்கு அறிவுபுகட்டி நடத்துவர்; தனமுள்ளவர்கள் ஏழைகளை இரட்சித்து அவர்கள் துன்பத்தைக் குறைப்பர். இவ்விதக் கொள்கைகளை முதலில் ஏற்றவர்களாதலால் நீங்கள் அவைகளை அனுபோகத்திற்குக் கொண்டு வருவதற்கு இடையறாது முயலவேண்டும். ஐக்கிய உணர்ச்சி எல்லாப்பக்கமும் பரவும் படிப் பாடுபடவேண்டும். உங்கள் சங்க மெம்பர்கள் எல்லோரும் ஒருமாதத்துக்கு வேண்டிய பொருள்களை அண்டைப் பட்டணத்திலிருந்து மொத்தத்தில் வாங்கி, சிறுகச் சிறுக மெம்பர்களுக்குக் கொடுக்கலாம். ஒரு கிராமத்தில் பலசரக்குக் கிடங்கு ஒன்று ஸ்தாபிப்பதைக் காட்டிலும், இது சுலபமாயிருக்கும். திருத்துறைப்பூண்டியிலுள்ள நமது நண்பர்கள் இம்மாதிரி மொத்தத்தில் வாங்கிப் பிரித்து எடுத்துக்கொள்ளும் ஒரு ஏற்பாடு செய்திருக்கிறார்கள். நிலம் வைத்துக்கொண்டிருக்கும் மெம்பர்களின் உபயோகத்துக்காக இம்மாதிரியே, விதை, எரு, கலப்பை முதலிய ஆயுதங்கள், இவைகளும் வாங்கலாம். இதுவே பலர்கூடிப் பொது வாய்ப் பயனடையும் வழி.

மேற்சொன்ன விஷயங்களைக்காட்டிலும், பிள்ளைகள் பெண்களின் கல்வி, இன்னும் அதிகமாய்க் கவனிக்கத்தக்கது. அதற்குப் பணம்பெற்ற கட்டிடம் வேண்டாம்; நமது பண்டைக்கால வழக்கப்படி ஒரு திண்ணையிலேயே பள்ளிக்கூடம் இருக்கலாம். சம்பளமுள்ள உபாத்தியாயர்கூட வேண்டாம்; நீங்களே ஒழிந்த வேளைகளில் ஒரு நாழிகை இரண்டு நாழிகை பிள்ளைகளுக்குக் கற்பிக்கலாம். உங்கள் வீட்டு ஸ்திரீகளுக்குக் கல்விப் பயிற்சி யிருக்கும்படிச் செய்திருந்தால், இக்காரியத்தை அவர்கள் வெகு சந்தோஷத்துடன் செய்வார்கள். உபாத்திமைத் தொழில் உங்களுக்குத் தகாததென்று எண்ணுகிறீர்கள். அதைக்காட்டிலும் மேன்மையான தொழில் வேறொன்றில்லை. அதுவே மநுநூல்படிப் பிராமணனுக் குரித்தாய் ஏற்பட்ட வேலை. நமது கிராம விவசாயிகளுக்கு விட்டுவிட்டுத்தான் வேலையிருக்கிறது. தங்கள் குடும்பத்துக்கு வேண்டிய சாதாரண மோட்டாத் துணிகளைத் தாங்களே ஒழிந்த நேரங்களில் நெய்யக் கற்றுக் கொண்டால், அவர்களுக்கு எவ்வளவு லாபமாயிருக்கும்? விவசாயிகள் வகுப்பைச் சேர்ந்த ஒவ்வொரு பையனுக்கும், சாதாரண ஆயுதங்களை உபயோகிக்கத் தெரியவேண்டும். அப்படிக் கையாடத் தெரிந்தால், சிறு காரியங்களுக்குக்கூடத் தச்சனுக்கும் கொல்லனுக்கும் காத்துக்கொண்டிராது, தாங்களே செய்துகொள்ள முடியும். வாய்க்கால்வெட்டு, கிராம வேலைக்காரர்களிடம் வேலை வாங்குதல், முதலிய சமுதாயக் காரியங்கள் சரிவர நடைபெறும்படிச் செய்யுங்கள். எதையும் கூட்டுக்காரியமாகச் செய்வது மேன்மையென நினையுங்கள். கூடியமட்டில் கிராமத்திலுண்டாகும் விவஹாரங்கள் வெளியில் செல்லாது பஞ்சாயத்தார்களே தீர்த்துவிடும்படியான முயற்சி செய்யுங்கள். சிறிது, பெரிது எல்லாவற்றிற்கும் கோர்ட்டுக்குப் போய் கட்சியாடும் துர்க்குணமே நம் தேசத்தைப் பாழாக்குகிறது; அது அடியோடு தொலைய வேண்டும். யோக்கியதையுள்ள எவனையும், அவன் பஞ்சமனாயிருந்தாலும் சரி, உங்கள் சங்கத்துக் கழையுங்கள். எல்லாருக்குள்ளும் மேல் கீழின்றிச் சகோதர பாவம் இவ்விதமே பரவவேண்டும். உங்களில் படித்தவர்கள், இரவில் படுக்கைக்குப் போகுமுன், படிக்காதவர்களுக்கு இரண்டு நாழிகையாவது ஏதாவது ஒரு நல்ல விஷயத்தைப்பற்றிச் சொல்லுகிறதென்று வைத்துக்கொண்டால், தாழ்ந்த ஜனங்கள்

எவ்வளவு நன்மையடைவார்கள்? அதுவும் சாத்தியமா என்று பாருங்கள்.

நான் ஏதோ சிறிது காட்டிய மார்க்கங்களில் நீங்கள் ஐக்கியச் செய்கைகளைக் கைக்கொண்டால், பிரஹ்மம் ஜகத்தை வியாபித்திருப்பது போல், உங்கள் வாழ்க்கையில் ஐக்கிய உணர்ச்சியும் வியாபித்திருக்கும். உங்களைச் சூழ்ந்துள்ள காற்றிற்கூட அவ்வுணர்ச்சியும் நிரம்பியிருக்கும். உங்கள் நினைப்பு, பேச்சு, செய்கை எல்லாவற்றிலும் அது கலந்திருக்கும். பின்பு உங்கள் கிராமம் பலரும் கொண்டாடக்கூடிய நிலைமையையடையும். இப்படிப்பட்ட கிராமங்கள் பல ஏற்பட, தாலுகாவும் ஜில்லாவுமே அவ்வுணர்ச்சி பரவிப் பரிமளிக்கும். நமது மாகாணமும் தன் காரியத்தைத் தானே நடத்திக்கொள்ளும் பெருமையை அடையும். நம் இந்தியாவும், பிரிட்டிஷ் அரசின் கீழுள்ள ஸ்வாதிபத்தியம் பெற்றுள்ள மற்ற நாடுகளுக்குச் சரிசமனான ஸ்தானத்தையடைந்து கௌரவம்பெற்று விளங்கும். இது சாத்தியமில்லையென்று நினைக்கிறீர்கள்?

நண்பர்காள்! முடிப்பதற்குமுன் சந்தோஷக்காரியம் நான் செய்ய வேண்டியதொன்றிருக்கிறது. அநேக சங்கங்களுக்கு வேண்டிய பொருளுதவி செய்தல் சிரமசாத்தியமென்றுணர்ந்து, இந்த ஜில்லாவில் தனிகர்களான வாத்திமர்களிடம் பொருட்சகாயம் விரும்பி, அவர்கள் செய்வதாக ஒப்புக்கொண்டதன்பேரில், செண்ட்ரல் ஜில்லா பாங்கியொன்று ஸ்தாபித்தோம். அந்தப் பக்கத்திலிருந்து நாங்கள் எதிர்பார்த்தபடி நிறைவேறவில்லை; ஆயினும் நான் ஒருவர் பேரிலும் குற்றங்கூறவில்லை. அவர்கள் லேவாதேவி செய்தலில் சமர்த்தர்கள்; பாங்கி நடக்கும் விதத்தைக் கொஞ்சகாலம் பார்த்துத் தெளிந்துகொண்டு பின்புதான் புகுவார்கள். பாங்கி இரண்டு வயதுதான் ஆன ஒரு குழந்தை; காலக்கிரமத்தில் நாங்கள் முதலில் எதிர்பார்த்த உதவி வருமென்றே நம்புகிறேன். இதற்குள் இவ்வூர் யூனியன் பாங்கியும், தஞ்சாவூர் டிஸ்ட்ரிக்ட் போர்டும், நம்மைத் தாங்க முன் வந்திருக்கின்றன. யூனியன் பாங்கி, நாங்கள் போட்டிருக்கிற பணத்திற்குமேல் ஐம்பதினாயிரம் ரூபாய் வரையில் அதிகப்படியாக கேட்டு வாங்கிக்கொள்ள சம்மதித்திருக்கின்றனர். டிஸ்டிரிக்டு போர்டார் ஸ்திரமான டிபாஸிட்டாக ஒரு லட்சம் ரூபாய் எங்களிடம் வைத்திருக்கின்றது. யூனியன் பாங்கி டைரக்டர்களுக்கும், டிஸ்டிரிக்ட் போர்டு மெம்பர்களுக்கும் நாம் நன்றிசெலுத்தப் பெரிதும் கடமைப்பட்டிருக்கிறோம். ஜன நன்மையைத் தேடுபவரும், ஜனங்களால் வாழ்த்தப்படுபவருமான நமது கலக்டரவர்கள் இங்கு விஜயம் செய்திருப்பது, உங்களுக்கு முன்னிலையில் அவருக்கு நான் வந்தனம் செய்யவும் இந்த சந்தோஷகரமான வேலையில் நீங்களும் சேர்ந்துகொள்ளவும் இடங்கொடுக்கிறது.

---

**வங்காளத்தில் கல்வியபிவிருத்தி.**—1913-14-ம் வருஷத்தில் லோயர் ப்ரைமரி பாடசாலைகளின் தொகை 31,105 குழந்தைகளின் தொகை 10,06,981. 1914—15-ம் வருஷத்திலோ, அப்பாடசாலைகளின் தொகை 32,728; குழந்தைகளின் தொகை 10,45,948 அப்பாடசாலைகளின் அபிவிருத்திக்காக உபாத்தியாயர்களின் சம்பளத்தை உயர்த்தினதில் செலவானது ரூ.5,07,832. பெண் கல்வியும், பல வழிகளில் விருத்தியடைந்திருக்கிறது. 1913—14-ம் வருஷத்தில் 7,573 பாடசாலைகள் இருந்திருக்க, 1914—15 வருஷத்தில் 8,268 பாடசாலைகளிருக்கின்றன. 1913-14-ம் வருஷத்தில் 2,30,729 பெண்கள் படித்திருக்கிறார்கள். 1914-15-ம் வருஷத்திலோ 2,47,971 பெண்கள் படித்து வருகின்றனர். பாடசாலைகளில் படிக்கும் மகம்மதியப் பெண்களின் தொகையும் அதிகரித்திருக்கிறது. சில பெண் பாடசாலைகளை, வித்தியா இலாகா அதிகாரிகள் தங்களுடைய செலவில் பஞ்சாயத்து சபைகளின் மேற்பார்வையிலும், சில பாடசாலைகளை வீடுகளுக்குள்ளேயே படுதா ஸ்திரீகளின் மேற் பார்வையிலும் வைத்து பரீக்ஷார்த்தமாகப் பார்த்து வருகிறார்கள். கீழ் வங்காளத்தில், பெண்பாடசாலைகளில் பெண்களின் தையல் வேலை, மிகவும் விருத்தியடைந்திருக்கிறது.

***

**திருப்பனந்தாள்.**—காவிரியின் வடகரையிலுள்ள ஒரு சிவஸ்தலம். சிவபக்தியிற் சிறந்த ஒரு பெண்மணியார் தாம் தொடுத்த மாலையை இங்குள்ள சிவபெருமானுக்குச் சாத்தப்போனபோது தமது ஆடை நெகிழ, அதனை இரண்டு முழங்கைகளாலும் இடுக்கிக்கொண்டு திருமாலைத் தொண்டுக்கு இடையூறு நேர்ந்ததே யென்ற கவலை, சிவபெருமான் தமது திருமுடியைச் சாய்த்து மாலை யேற்றுக்கொண்ட ஸ்தலம். குங்கலியக்கலயநாயனார் தமது கழுத்திற் கயிறு பூட்டியிழுக்க நிமிர்ந்தது இந்த லிங்கமே.

# ஸ்நேஹலதா

## SNEHALATHA

தொல்லா விரதம் குவலயமெல்லாம் ஓங்க
எல்லார்க்குஞ் சொல்லுவதென னிச்சை பராபரமே.

ஆ! இவ்விஷயம் நடந்து எவ்வளவோ நாட்கள் ஆகின்றன. ஆயினும் இப்பொழுதுதான் நடந்ததுபோல் என் மனத்தின்கண் ஒரு வீராவேசமும் அடக்க முடியாத கோபமும் உண்டாகின்றன. நண்பர்காள்! என்ன? தூங்குகின்றீர்களா? கண்ணைத்திறந்து விஷயத்தை நன்குய்ப் பார்த்ததியவில்லை போலும்!

நம்மில் ஒருத்தி நமக்குப் புத்தி புகட்டவென்றே செய்த காரியத்தைப் பெரிய பெரிய பரிக்ஷைகளில் தேர்ச்சியடைய வேண்டி அவைகளில் மனதைச் செலுத்தித் தேர்ச்சி யடையும் உங்களுக்கு இவ்விஷயத்தை அறிந்துகொள்ள முடியவில்லையா? ஊக்கமிருந்தாலல்லவோ மனது அதிற் செல்லும்?

நம் நாட்டை முன்னுக்குக் கொண்டு வர எண்ணங்கொள்ளாத உங்களுக்கு உங்கள் பெரிய பரிக்ஷைகள் எல்லாம் யாது பயனைத் தரப்போகின்றன? நம்மவர் படும் கஷ்டத்தைத் தீர்க்கவழி தேடுகின்றீர்கள் இல்லை. பெரிய பெரிய பரீக்ஷைகளில் தேறி மூட்டை மூட்டையாய்ப் பணம் தேட வழி தேடுகின்றீர்கள். உங்கள் பணம் உங்களுக்குப்பிறகு யாது பயனைத் தருமோ? உங்கள் பணமும் உங்கள் பட்டங்களும் உங்கள் பின்னோடு வருமா? புண்ணிய பாவந்தானே கூடவரும்.

நம் உத்தமி இறந்தான இரண்டு மூன்று தினங்கள், தினப் பத்திரிகைகளும், வாரப் பத்திரிகைகளும், மாதப் பத்திரிகைகளும் இம்மாதிரி இருக்கக்கூடாது, அம்மாதிரி இருக்கக்கூடாது என்று பற்பல விதமாய்ச் சரமாரி பொழிந்தாற்போற் பொழிந்தன. அதன் பிறகோ அவ்விஷயத்தைப் பற்றி ஏதேனும் நடைபெறும் என்று எண்ணி எண்ணி ஏமாந்தேன். பத்திரிகைகளைப் பார்த்துப்பார்த்துக் கண்களும் பூத்துப்போயின. ஒன்றும் நடைபெறவில்லை.

நம் சகோதரி தன் உயிரை மாய்த்தனளே வீணாகவா மாய்த்தனள்? நம்மிந்திய மாதா, தன்னொருத்தி மூலமாகவேனும் தன் மற்றைக் குழந்தைகளுக்குப் புத்தி புகட்டி அவர்களுக்குள்ள குறையைத்தெரிந்துகொள்ளும்படிச் செய்யட்டும் என்றுதானே செய்தனள். அவள் இறந்ததுதான் மீதி. வேறு ஒன்றுமே நடக்கவில்லை. மரித்தவர் அந்திமொழியை நிறை வேற்றுதல் இருப்பவர் கடமையல்லவா? இல்லாவிடில் பெருத்தபாபமாயிற்றே. அவள் மனத்திற்கொண்ட எண்ணம் நிறைவேறுமற்போனால் அவளுக்கென்ன கெடுதி. ஒன்றுமில்லை. விண்ணவா வாழ்த்த அங்கும் கியாதிபெற்றிருப்பாள். நமக்கோ? என்ன? பழி மலைபோலக் குவியும். பெண்வதை விண்போமா? எவ்விதக் கொலைகளிலும் ஸ்திரீ ஹத்தி மிகவும்கொடியதென்று நம்நாட்டு நூல்கள் ஏடுகளாகிய நாக்குகளால் முறையிடுகின்றனவே.

ஆ! நண்பர்களே! வெகுகாலமாக நம்மிடத்துக் குடிகொண்டிருந்து வந்த ஈச்வரபக்தியும் பழைய நூல்களில் வைத்திருந்த நம்பிக்கையும் குறைந்து இருள் மூடிக்கொண்டதோ? பல நாட்டார்களும் நாம் ஈச்வர பக்தியுடையவர்கள், சாஸ்திர நம்பிக்கை கொண்டவர்கள் என்று அடிக்கடி சொல்லக்கேட்டுக்கேட்டு இறுமாப்படைந்து அவைகளில் இருக்கும் நம்பிக்கை, தானாகவே பறந்தோடிப்போயிற்றோ? ஆ! தெய்வமே! இதுவும் என்ன? கலிகாலக்கொடுமைதானோ?

நண்பர்காள்! தூக்கத்தினின்றும் எழுந்திருங்கள்! கண்ணை விழித்துத் துடைத்துக்கொள்ளுங்கள். நம் ஸ்நேஹலதாவை உருவப் படுத்திக்கொள்ளுங்கள். இதோ லதா, ஒரு சிசுவாக இருந்து வளர்ந்து வருகிறாள். கோடி சூரியர்கள் சேர்ந்து உதயமானாற் போன்ற முகமும் செக்கச்செவேலென்று ரோஜா விதழ்போன்ற கன்னத்தின் கதுப்புக்களும், இருண்ட விழிகளும், மருண்ட பார்வையும், பற்றுக்கொம்பைத் தழுவும் லதைகளைப்போல் மூன்று பக்கங்களிலும் முகத்தைத்தழுவும் கேசமும், பால் மணமருவு வீசும் வாயும், கொவ்வைக்கனியைப்பழித்த உதடுகளும் எவ்வளவு கம்பீரமாய்ப் பிரகாசிக்கின்றன பாருங்கள்!

பக்கத்தில் யாரோ உட்கார்ந்து கொண்டிருக்கிறார்களே யார்? நம் சகோதரியின் தாயே. அவள் அச்சிசுவைக் கட்டியணைத்து முத்தமிட்டு உச்சிமோந்து தலைவாரித் திலகமிட்டு, பால் ஊட்டிவளர்ப்பதைப் பாருங்கள். அதோ பாருங்கள் அவள் தந்தையை. தன் குழந்தைக்கென்றே வெளியிலிருந்து விட்டுக்கு வருகையில் மிகவும் அபூர்வமான தின்பண்டங்களையும் நல்ல பரிமளமுள்ள புஷ்பங்களையும் வாங்கி மூட்டை கட்டிக்கொண்டு வருகிறார்.

இப்போது லதாவைப் பாருங்கள். அதிக விலையுயர்ந்ததா யில்லாமற் போனாலுங்கூட மிகவும் பரிசுத்தமான பாவாடை யொன்றைத் தரித்துக்கொண்டு ஸ்வர்ணவிக்கிரஹம்போல் விளங்குகின்றாள்.

இப்போதோ முன்னிலும்விட அதிக நேர்த்தியான உடை தரித்துஒரு தேவகன்னிகைபோலவே காணப்படுகின்றாள். இதோ வெளியில் போகின்றாளே, எங்கே போகின்றாள் என்று நீங்கள் கேட்கலாம். தங்கள் குலதெய்வமான அம்பிகையை தரிசனம் செய்ய வெண்ணிப் போகின்றாள். அவள் எவ்வளவு வணக்கத்தோடும், பயபக்தியோடும் போகின்றாள் என்பது அவள் முகத்தைப் பார்த்தளவில் நன்றாய்ப் புலப்படவில்லையா? அவள் அம்பிகை தரிசனம் செய்கையில் அவள் மார்பு படபடவென்று அடிப்பதையும், அவள் கண்களினின்றும் நீர்த்துளிகள் முத்து முத்தாய் அரும்புவதையும் நீங்கள் கவனிக்கவில்லையா? அவள் அவ்வித மாறுதல்களடையக் காரணம் என்ன? அவள் பக்தியோ? வேறு ஏதேனுமோ?

விட்டுக்குத் திரும்பின வுடனே அவள் எவ்வளவு சிரத்தையோடு விட்டுவேலைகளைத் தன் தாய்க்குதவியாகச் செய்கின்றாள்? எவ்வளவு ஒழுங்கு பெறவும் செய்து முடிக்கின்றாள்? விட்டு வேலை செய்து முடித்ததும், ஊரிலுள்ள பெரியவர்கள் சொல்லும் புராணங்களை எவ்வளவு ஊக்கத்தோடும் பயபக்தி யோடும் கேட்கின்றாள். சற்று உற்று நோக்குங்கள் அவள் முகத்தை. என்ன தேஜஸ் விளங்குகின்றது. அவ்விடத்தில் எவ்வளவோ பேர்கள் புராணங் கேட்கின்றார்களே, அவர்கள் முகத்தையும் பாருங்கள். அவர்களுக்கு மிவளுக்குமுள்ள வித்தியாஸம் நன்றாய் வெளிப்படும்.

ஆ! இப்போது பாருங்கள் லதாவை. முன்போலல்ல. யௌவன பருவமடைந்திருக்கின்றாள். இவளுக்குத் தகுந்த நாயகன் எவ்விடத்திலுள்ளானோ? சை! இவளை நரமனிதனா விவாகம் செய்துகொள்ளத் தக்கவன்? அவ்வளவு காந்தியோடிருப்பினும் அவள் முகத்தைப் பார்த்தளவில் ஏதோ வியாகூலம் அவள் மனத்திற் குடிகொண்டிருப்பதாகத் தோன்றுகிறது? அகத்திலுள்ளது முகத்தில் தெரியுமல்லவா? வரவர அவ்வியாகூலம் அதிகமாகிக்கொண்டே வருகிறதே. என்ன வியாகூலம்? அவளைப்போன்ற அவ்வளவு யௌவன பருவமுள்ள ஒரு கன்னிகைக்கு என்ன வியாகூலம் நேரிடலாம்? விவாகத்தைப்பற்றிய வியாகூலமே. தனக்குத் தக்க நாயகன் எவனோ? தாயும் தந்தையும் தரித்திரதசையை அடைந்தவர்களாயிற்றே. ஏற்கெனவே தன் தமக்கைகளையெல்லாம் விவாகம் செய்துகொடுத்து அதனால், கை சளைத்து நிற்கும் காலத்தில் அவர்கள் தனக்கும் ஏற்ற நாயகனைத் தேடியலைந்து கஷ்டப்பட தாய் தந்தையருக்கு இடம் வைத்துவிட்டனளே. பெற்றோர்களுக்குக் குழந்தைகள் உபகாரம் செய்யவிருக்கத், தான் அப்படிக்கின்றி அவர்களுக்குத் துன்பம் உண்டாக்க மூலாதாரமாய் வந்தனளே, என்று எண்ணி யெண்ணி அவள் அடைந்த வருத்தந்தான்.

தாய் தந்தையரோ, தம் பெண் லதா, தன் கண்களைப் பிசைந்துகொண்டு ஒருவனிடம் நிற்காதபடி தகுந்த இடத்தில் விவாகம் செய்து கொடுக்கவேண்டும் என்று எண்ணங் கொண்டு, தங்கள் சிரமத்தைக் கொஞ்சமும் பாராட்டாமலும் தங்கள் தரித்திர தசையை லதாவறியச் சொல்லாமலும், தகுந்த நாயகனைத் தேடி பலமாதங்கள் திரிந்தார்கள். ஒருவரும் அவளை மணந்து கொள்ள முன்வரவில்லை. அவளை யடையத் தக்க பாக்கியம் செய்திருந்தாலல்லவோ கிட்டுவர்? இவ்விஷயங்களனைத்தையும் தாய் தந்தையர்களுக்குத் தெரியாமலேயே உற்றுக் கேட்டறிந்த லதா, தாய் தந்தையர்

படும் துன்பத்திற்கு மிகவும் வருந்தி, அதை வெளிக்காட்டாமல், விட்டு வேலையைச் செய்வனே முடித்து, அம்பிகையைத் தரிசனம் செய்து,விட்டுக்குவந்து நல்ல உடை தரித்துப் பொழுது போகும்வரையும், சௌக்கியமாயிருந்தனள்.

யாரிட்ட சாபமோ? உலகத்தாருக்குப் புத்தி புகட்டத்தானே? வேறு யாது காரணமோ? பூவுலகில் வேறு ஒருவரும் மணக்காததினல் தேவருள் ஒருவரான அக்கினி பகவான் இவளிடம் இச்சை வைத்து, இவளை மணந்துகொண்டார்.

ஆ! சொல்லும்போதே வாய் பதறுகின்றது. நா குழறுகின்றது. கண்கள் நீரைப் பெருக்குகின்றன. நேரில் பார்த்தால் எப்படிச் சகிப்பதோ. நண்பீர்! கொஞ்சமேனும் இரக்கம் வரவில்லையா? உங்கள் மனம் என்ன? கல்லோ—கருங்கல்லோ—இரும்போ! அல்லது அதைவிட மிகவும் கடினமானவஸ்துவினல் ஆக்கப்பட்டிருக்கிறதோ? உஷ்ணத்தினல் உருகாத வஸ்துவும், இரக்கமுண்டாகிக் கரையாத மனமும் உண்டோ?

இது நிற்க, அவள் வீணுகவா இறந்தனள்? தாய் தந்தையருக்கொரு நிருபம் எழுதிவிட் டகன்றனள். அக்கடிதம் தாய் தந்தையருக்கு விலாஸமாகியிருந்த போதிலும், அவர்களுக்கல்ல; உலகத்தாருக்கே. அதின் விஷயம் 'லதாவாகிய நான் என் தாய் தந்தையர்களைத் துன்பத்திற் காளாக்காதிருக்கவேண்டி உயிர்மாய்க்கின்றேன்.சகோதரர்காள்! இனிமேலாவது என் போன்ற உங்கள் சகோதரிகளைப் பெருத்த துன்பத்திற் காளாக்கி வருத்தித் தற்கொலை செய்துகொள்ளும்படிச் செய்யாதீர்கள். அப்படிச் செய்யின், பெரும் பழிக்காளாவீர்கள். இப்படி நான் சொல்லியதிலிருந்து நான் உங்கள் பேரில் கோபங் கொண்டதாக எண்ணவேண்டாம். நானே கொஞ்சமேனும் அதிருப்தியில்லாமல் என்னுயிரை மாய்க்கின்றேன். இனியேனும் நம்மிந்திய மாதா,தன்புத்திரிகளுக்குஉங்கள் மூலமாய்ச் சுகத்தைக் கொடுத்து விருத்திக்கு வந்து சுகமுறுவாள் என்று நம்பி அம்மாதிரியே நடத்தும்படி அம்பிகையைப் பிரார்த்தித்துப் பிராணத்தியாகம் செய்கின்றேன்."

தோழர்காள்! அவளை எரித்த அக்கினி உங்கள் மனத்தைச் சூடாக்கவில்லையா? அவளை எரித்த நெருப்புப்போல் உங்கள் மனமும் எரியவில்லையா? நான் சொல்லுவது அனுசிதமாயிருப்பினும்கூட, சற்று உற்றுக் கவனியுங்கள்.

இம்மாதிரி அவள் உயிர் மாய்த்ததற்குக் காரணம் அவள் கடிதத்திலிருந்தே நன்கு விளங்கும். அதை அநேகர் படித்தும், அநேகர் விஷயத்தை வாயால் மாத்திரம் பேசி செய்கைக்குக் கொண்டுவராமல் விட்டுவிடுவதுபோல, இதையும் விட்டு விடலாகாது.

செல்வத்தைத் திரணமாக மதித்து வந்த பெரியோர்களின் குலத்தினரே! இந்தச் செல்வத்திற்காசை கொண்டா மணம் புரிவது? அவ்வாறு செய்வது சான்றோரெனப் போற்றப்படும் நம்முன்னோருக்கு ஓர் வசைமொழியன்றோ? க்ருஹஸ்தாச்ரம தர்மத்தை நடத்துவதற்காக தர்ம பத்னியைக் கொள்ளுங்கள்.

வரதக்ஷிணை யென்பது இப்பொழுது உங்களில் சிலருக்கு விளங்காமலிருந்த போதிலும், அதைப் பெறுவதன்முன் சற்று யோசியுங்கள். மக்களுடன் கூடி வாழும் நீர், நம் கன்னிகைகளுக்காக கடன் வாங்கிப்பிறகு கடன் கொடுத்தவர்களிடம் கஷ்டப்படுதலில் ஸுகமுண்டோ? நம் மனைவிகளுக்கு "நம்மால் தாய் தந்தையரும் ஸகோதரர்களும் துன்பமடைந்து தரித்ரத்தால் வருந்துகின்றனர்" என்னும் எண்ணமுண்டாகாமலிருத்தல் அவசியமன்றென யார் கூறுர்?

கலாசாலைகளிற் பயிலும் நண்பர்காள்! இவ்விஷயத்தில் வங்காட்டு ஸஹோதரரின் உறுதியைக் கைக்கொள்ளுங்கள். "இராத்துயரையும் மனைவியாகூலத்தையுமுண்டாக்கும் இவ் வரதக்ஷிணை யென்னும் விலங்கிற்கு இரையான ஸஹோதரி ஸ்நேஹலதா! நீ கூறியதை நாங்கள் மறக்கமாட்டோம். எங்கள் விவாகத்தின்பொழுது அதன் காரணமாய் மாம்ஸ விற்பனைக் காசாகும் 'வரதக்ஷிணை' யைப் பெறோம்" என்று ப்ரதிக்ஞைசெய்து அப்படியே நடந்துவருவது இத் தைமாதத்தில்உங்களுக்கும் ஞாபகமிருக்கட்டும்!

## தற்செயலாய் நேரும் அபாய ஸம்பவங்களும், அவற்றின் ஆரம்ப சிகிச்சைகளும்

## ACCIDENTS & EMERGENCIES

### முன்னுரை

*"நோய்நாடி நோய்முதல் நாடி அதுதணிக்கும் வாய்நாடி வாய்ப்பச் செயல்."*

உயிரைக் காப்பாற்றும்படியாயும், கஷ்டமடைந்தவர்களுடைய வலியைப் போக்கவும் உதவிசெய்யக்கூடிய ஸம்பவங்கள், பன்முறை உண்டாகின்றன. பிறர்க்கு எதிர்பாராமல் தற்செயலாய் நேரும் அபாயங்களில் அவர்க்கு எவ்வாறு தாம் உதவக்கூடும் என்ற விஷயத்தை யறியவேண்டியது ஒவ்வொருவருடைய கடமையும் ஆகின்றது. அவ்வாறு செய்யுமுதவி தக்கதாயிருக்கும்படிச் செய்வதற்கு அவஸரமில்லாமையும், மன அமைதியும் அத்யாவச்யகம். விசேஷமான வைத்யஞான மில்லாதவன், அவஸரமில்லாமல் மன அமைதிபெற்று இயற்கை அறிவுடன் நடப்பானானல், வைத்யஞானமுள்ளவன் அவஸரம் மயக்கம் கலவரம் இவற்றோடு வேலைசெய்வதைக் காட்டிலும் அதிகமாக உதவிசெய்யக்கூடும்.

தேக அபாயத்திற்கு ஆரம்பச் சிகித்ஸை செய்பவர் அதிகமாகச் செய்வதைக்காட்டிலும், கொஞ்சம் செய்து, அவ்வபாயம் தானாகவே ஆறும்படிச்செய்வது உத்தமம்.

வைத்யத்தொழிலில்லாதவர்கள் கடுமையான அபாயங்களில், அதாவது பிராணஹானி யுண்டாகக்கூடிய அபாயங்களில், எது எப்படி இருந்தாலும், வைத்யனை வரவழைக்கும்வரைதான் தாம் உதவிசெய்ய வேண்டுமேயல்லாது, தாங்களே முழு உதவியும் செய்யமுடியுமென்று அலக்ஷியமாக இருக்கக்கூடாது.

சாதாரணமாக, யாவராலும் அல்ப அபாயமாக எண்ணப்பட்டவை சில, மிக ஆபத்திற்கிடமாக விருந்திருக்கின்றன. அம்மாதிரி சில, உயர்ந்த வைத்யர்களையும் அவர்களது திறமையையும் மயங்கச் செய்திருக்கின்றன; அவர்க்கு மிக்க பிரயாசையையும் கொடுத்திருக்கின்றன.

ஆனல் அபாயங்கள் நேர்ந்த சில ஸமயங்களில் வைத்யர்களை அழைத்து வருவது முடியாததாயிருக்கும். அச்சமயங்களில் நேசர்கள் யாவரும், மனிதராகப் பிறந்தவர் எவரும், தம்மால் முடிந்த உதவிசெய்யத் தயாராயிருக்கவேண்டும். அச்சமயங்களில் அவ்விஷயங்களைப்பற்றி இந்தமாதிரி அந்தமாதிரி செய்யவேண்டும் என்று வீண் எண்ணமிடாது, சரீரத்தின் கூற்றையும், காயமடைந்த பாகத்தின் அமைப்பையும், காயத்தின் தன்மையையும், சிகித்ஸையின் வழியையும், நன்கு ஆய்ந்து ஓய்ந்து ஆலோசித்தல் வேண்டும். பின் செய்யவேண்டியதெது வெனப்புலப்படுகிறதோ, அதைச் செய்யவேண்டும். அவ்வாறு செய்வதால், நல்ல புத்திசாலியான ஒவ்வொருவனும் ஆபத்தடைந்தவர்க்குச் செய்யக்கூடிய உதவி அநந்தம். இனி மேற் சொல்லப்பட்ட ஸம்பவங்களும், அச்சம்பவங்களுண்டாகிய காலத்துச் செய்யக்கூடிய உதவியும் விவரித்து எழுதுவோமாக.

### 1. மூர்ச்சை—மயக்கம்

### Fainting

மூர்ச்சை அல்லது மயக்கம் ஸாதாரணமாக நேரும் ஸம்பவம். இதில் உதவி அத்யாவச்யகம். இது, ஹ்ருதயத்தின்வேலை இருந்தாற்போல விருந்து தடைபடுவதாலும், மூளைஸ்தானத்திற்குப் போகும் ரக்தம்குறைவதாலும் நேர்வது. இது, ஸாதாரண தேகஸ்திதியில் உண்டாவதானல், கவலைக்கிடமில்லை. ஏனென்றால், அவ்வாறு மயக்கமடைந்தவர்கள், உதவியில்லாமலேதெளிந்துவிடுகிறார்கள். துர்ப்பலமடைந்தவர்களும்,கேவலம் வ்யாதியால், அல்லது வேறு காரணத்தால் மெலிந்தவர்களும், மயக்கமடைந்தால் கவலைக்கிடந்தான்; சில ஸமயங்களில் அதனுல் உயிர்க்கே தீங்குண்டாகலாம்.

கூட்டத்திற்போவதினுல் ஒருவன் மயக்கமடைந்தால் அவனுக்குதவி அதிகம் வேண்டியதில்லை. ஆனல்இரத்தநஷ்டத்தாலாவது, அல்லது படுவியாதியாலாவது அடிபட்டுக் கேவலம் மெலிந்த சரீரத்தவனுக்கு மயக்கம் உண்டானல்,அவனுக்கு நல்ல வைத்ய உதவி இருந்தாற்கூட மரணம் நேரினும் நேரலாம். உணர்ச்சி யில்லாதிருப்பதாலே, மயக்கம்

என்று நம்பிவிடலாகாது. உணர்ச்சியில்லாமைக்குப் பலகாரணங்கள் உண்டு. மூளையில் இருக்கும் இரக்தக்கால்வாய்களின் முறிவு, ஈரலுள் இருக்கும் இரத்தக் கால்வாயின் உடைப்பு, வயிற்றில் அல்லது குடலிடம் இருக்கும் இரத்தக் கால்வாய்களின் வெடிப்பு இவைகளாலும் உணர்ச்சியில்லாமை யுண்டாகும். மயக்கத்தில் ஞாபகமாக கவனிக்கவேண்டிய முக்யவிஷயம் கீழ்வருமாறு. மயக்கம் வருவதற்குமுன், நல்ல தேகஸ்திதியிலிருக்கும் வாலிபனாவது, நடுப்பிராயமுள்ள மனிதனாவது கூட்டத்தில் நெருங்கினதினாலோ, பயத்தினாலோ, அல்லது ரக்தங் கொட்டுதலைக்கண்டு மனக்குழப்பத்தாலோ மயக்கங்கொண்டு உணர்ச்சியில்லாமலிருப்பானானால், முகம் வெளுத்துவிடும்; உதடுகள் நீலம் பாய்ந்து கிடக்கும்; நாடி அடங்கி ஒலிக்கும். இக்குறிகள் விளங்குமானால் மயக்கமாயிருக்கலாம் என்று நம்பலாம்.

மயக்கத்தில் ஆரம்பத்தில் காணக்கூடியன வர வர உடம்பதிமாக வெளுத்தலும், பலமுறை கொட்டாவி விடுதலுமே. இக்குறிகளைச் சடுதியில்கண்டால், இக்குறிகளுக்குட்பட்டவரைக் கலவரத்தை யுண்டாக்கிய அவ்விடத்திலிருந்து உடனே பிரித்து நல்ல காற்றுலாவுமிடத்தில் கொண்டுபோகவேண்டியது. ஒரு விசிறியை எடுத்து வெகு திவரமாக அவனுக்கெதிராக விசிறவும். அதே சமயத்தில் குளிர்ந்த தண்ணீரைக் குடிக்கச்செய்து முகத்தில் குளிர்ந்த ஜலத்தால் தடவவேண்டும். அவ்வாறு செய்வதால் மூர்ச்சையின் முழுவேகமும் பாவாமலிருக்கும்படித் தடுக்கலாம். மூர்ச்சையடைந்தவனை நிமிர்ந்தும், காலைக்காட்டிலும் உடம்பும், உடம்பைக் காட்டிலுந் தலையும் தாழ்ந்திருக்கும்படிப் படுக்கவைக்க முடியுமானால் அப்படிச் செய்யவும். பெரிய கூட்டங்களிலும், பொதுஜன ஸங்கங்களிலும், வேறெங்கும் கொண்டு செல்லாமல் தொந்தரையில்லாமலும், உதவி செய்வதற்கு உதவியற்று மயக்கமடைந்தவனுக்கு, இதனால் தெளிவடையும்படி செய்யலாம். அப்படிப் படுக்கவைக்க முடியாதானால், மூர்ச்சையடைந்தவன், உட்கார்ந்த நிலையிலிருந்தால், அவன் தலையை, முன் வந்து முழந்தாள்வரையுங்குனித்துத் தொங்கும்படிச் செய்யவும். இந்த நிலையில் வைத்தால் மூர்ச்சையடைந்த ஆள் எளிதில் தெளிவடைவான். இப்படிச் செய்வதால் மூர்ச்சையடைந்தவனுக்குக் கஷ்டங்கொடுப்பதை எவ்வளவு குறைக்கலாமோ, அவ்வளவு குறைக்கலாம். அசுத்தமான இடத்திலாவது, அழுக்குள்ள தரைமேலாவது அவ்வாளைப் படுக்கவைப்பதையுந் தடுக்கலாம்.

மூர்ச்சைக்கு உதவிசெய்யவேண்டி வந்தால், முடியுமானால், மயக்கமடைந்தவனை தரைமேல் முதுகு படும்படி நிமிரப்படுக்கவைத்து, நல்ல காற்று அவ்விடத்தில் உலாவும்படிச் செய்யவும்; அல்லது விசிறியைக் கொண்டு விசிறவும்; பின், சில்லென்றிருக்கும் நல்ல நீரை பானஞ்செய்யச்செய்யவும். மோப்புப்பிடிக்கும் உப்பை (Smelling Salt) யாவது, காரம் தணிக்கப்பட்ட அமோனியா என்னுங் காற்றையாவது லேசாக முகரும்படிச்செய்யலாம். சிறிது கற்பூர நீரையாவது, பிராண்டி என்னும் திராக்ஷா ரஸத்தையாவது உள்ளிற்குக்கொடுக்கலாம்; ஸாதாரணமாக இவை அவசியமில்லை.

இரத்த நஷ்டமான காலத்தில் மூர்ச்சையுண்டானால் மிக்க அபாயத்திற்கிடமுண்டு. வியாதியஸ்தர்கள் இருந்தாற்போல விருந்து சரேலென்று நிமிர்ந்த நிலையை யடையுங் காலத்து மூர்ச்சை நேர்ந்தாலுமப்படியே. இவ்விரண்டு ஸமயங்களிலும்மேல்சொன்ன உதவி போதாதிருக்கலாம். அந்த ஸமயங்களில் மூர்ச்சையடைந்த ஆளை உடனே தரையில் முதுகுபட படுக்கவைத்துத், தலையின் கீழ் இருக்கும் தலையணைகளை யெடுத்துவிடவேண்டும். படுக்கையின் கால் மாட்டை அவ்வாளின் கால்கள் அவனது தலைமட்டத்தைக்காட்டிலும் ஒன்றல்லது இரண்டடி உயரமிருக்கும்படி உயர்த்தவும்; கைகளையும் உயர்ந்த நிலையை அடையும்படி உயர்த்தலாம். அதே ஸமயத்தில் பிராண்டியைத் தண்ணீருடன் ஸமமாகக் கலந்து ஐந்தாறு உத்தரணியளவு கொடுக்கவும். இதை மூர்ச்சையடைந்த ஆளால், வாயால் உட்கொள்ளமுடியாதானால், இதைப்போன்ற இரட்டை அளவு ஆஸனவழியாகப் பீச்சாங்குழலால் உள் செலுத்தவும். எந்தக் காரணத்தால் நேரினும், இவ்விதமான அபாயத்

திற்கிடமான மூர்ச்சைகளில், தாமஸஞ்செய்யாது உடனே வைத்யனை அழைத்துக் காட்டவேண்டும். இல்லாவிடில் இங்கு விவரித்துச்சொல்லமுடியாத பலவிதமான உடற்சிக்குகளால் ஸாதாரணமான ஜனங்களுக்குப் புலப்படாத பெருமபாயம் உயிர்க்குண்டாகலாம். நடுப்பிராயத்தி லிருப்பவர்க்கும், விருத்ததசையி லிருப்பவர்க்கும், அங்கவிகிர்தஜன்னி நேருமிடத்தில் மயக்கமு மூர்ச்சையுமுண்டாகலாம்; ஆனால் இந்த வயதில்தான் நேருமென்று சொல்லமுடியாது. இரத்தக்கனப்பான உடம்புடையவர்க்குத்தான் வருமென்றும் சொல்லமுடியாது. இம்மாதிரிகாலத்தில் மயக்கமாவது மூர்ச்சையாவது நேர்ந்தால், கஷ்டத்துடனும் சப்தத்துடனும் மூச்சு வாங்கும்; இரத்தம் நிறைந்து முகம் சிவந்துவிடும்; கழுத்தின் இரத்தக் கால்வாய்கள் துடிக்கும்; நாடி நிறைந்து மெதுவாக ஒலிக்கும். ஒரு எச்சரிக்கை: மூளையிலிருந்து இரத்த இழிவை மூர்ச்சையாகப் பாவித்து உதவிசெய்வதைக் காட்டிலும் விபரீதம் வேண்டியதில்லை. மூர்ச்சையில் இரத்த ஓட்டத்தை அதிகப்படுத்தி மூளைக்கு இரத்தம் நிறையப் போகும்படிச் செய்யவேண்டியது; இது அங்கவிகிர்தஜன்னியில் செய்யவேண்டியதற்குத் தலைகீழாகும். நுரையீரலில் இரத்த இழிவினால் மயக்கமுண்டாயிருந்தால், இருமினால் இரத்தம் விழும். அன்னகோசத்துதிர இழிவால் மயக்கமானால் இரத்தவாந்தி ஆனாலுமாகும், ஆகாமலுமிருக்கும்; ஆனால் நல்ல தேஹஸ்திதியிலிருப்பவர்க்கு ஆகாது. குடலில் இரத்த இழிவு, விஷஜ்வரம், ஈரலைப்பற்றிய வியாதிகள் இவைகளால் மயக்கம் உண்டாகுங் காலங்களில் சிகிச்சை வழியே வேறு. அக்காலங்களில் வைத்யன் உதவி இருக்குமாகையால், அதைப்பற்றி நாம் இங்கு விவரிக்க வேண்டிய தவசியமில்லை.

மூர்ச்சைக்கும், ஸூர்ய வெப்பத்திலுண்டாகும் மூளைத் தாக்கலுக்கும் பேதங் கண்டுபிடிப்பது சில ஸமயங்களில் கஷ்டமாயிருக்கும். மேற்சொன்ன தாக்கல் ஸூர்யனுடைய கொடிய உஷ்ணத்தின் அதிர்ச்சியாலாவது, அல்லது அடைக்கப்பட்ட இடங்களிலாவது, அத்யுஷ்ணமான இடங்களி விருப்பதினாலாவது நேரும். அப்பொழுது உடம்பைத் தொட்டால் வெகு சூடாகவிருக்கும்; நாடி மெதுவாக விருப்பினும் படபடவென்று அடிக்கும்; அத்தாக்குத் திடீரென்று வராதிருக்குமாயின் வருவதற்குமுன் மூளையிலும் தலையிலும் அதிக வலியிருக்கும்.

# மாணவர் பக்கங்கள்

## STUDENTS' PAGES

### ஆத்திசூடி விளக்கம்

### 57. திருமாலுக்கடிமைசெய்

மஹாவிஷ்ணுவை பக்திசெய்து வழிபடு என்பது இந்த ஸூத்ரத்தின் பொருள். இது பொதுவாக சிவவிஷ்ணு பேதத்தை வேரறுக்க வந்த ஸூத்ரம். ஔவையார் சிவனைப் பரமாகக்கொண்டு வழிபடுபவள் என்பதற்கு ஆதாரம்:—

சிவாய நமவென்று சிந்தித் திருப்போர்க்
கபாய மொருநாளு மில்லை—உபாயம்
இதுவே மதியாகும் அல்லாத வெல்லாம்
விதியே மதியாய் விடும்.

என்ற ஔவையார் வாக்கியமாகிய நல்வழி 15-ம் செய்யுளே. இவ்வாறு சிவனையே வழிபடும் ஔவையார் இங்கு மஹாவிஷ்ணுவுக்குத் தொண்டு செலுத்த வேண்டியது என்றதன் கருத்து, ஒருவாறு அவளே கூறியுள்ள தெய்வமிகழேல் என்ற 61-வது ஆத்திசூடி வாக்கியத்தால் வெளியாகும். அங்கு இந்தப் பொருத்த விஷயத்தைப்பற்றி நன்கு ஆராய்வோம்.

மஹாவிஷ்ணு மாயைக்கு யஜமானர். அவருக்கு மாயன் என்ற பெயரும், அகட விகட கபட நாடக ஸூத்ரதாரி என்ற பெயரும் பொதுவாக உண்டு. உலக வாழ்க்கை எல்லாம் அவரது மாயாவிகாரமே. அந்த விகாரங்களுள் கர்மவாஸனை வசத்தால் அகப்பட்டுத் திண்டாடுபவர்களாகிய நம்போன்ற ஜீவராசிகள் அவைகளைவிட்டுக் கரையேற மாயைக்கு யஜமானரான விஷ்ணுவின் வழிபாடு வேண்டியது அவசியம். இதுபற்றியே கிருஷ்ண பரமாத்மா கீதையில் (IV-ம் அத்யாயம் 6-ம் ச்லோகத்தில்)

(இதன் தொடர்ச்சி 258 ம் பக்கம்.)

பிறப்பிலனாய்த் தேய்தலறு பெற்றியனாய் யார்க்கும்
சிறப்புமலி ஈசனாய்ச் சீர்மை—உறப்பெறினும்
என்ப்ரக்ருதி தன்னை வசப்படுத்தென் மாயையினால்
ஸம்பவிப்பேன் தானி திணர்

என்று தம் ஸ்வரூபத்தை விளக்கி, VII-ம் அத்யாயம் 14-ம் ச்லோகத்தில்:—

முக்குணத்தாம் தெய்வ மொழிதருமிம் மாயைதனைத்
தக்கபடி தானரிது தாண்டிடுதல்—புக்கெவர்கள்
என்னையே மிக்கடைவார் ஏதமற மற்றவரே
அன்னதனைத் தாண்டவலார் ஆர்ந்து.

என்று தமக்கு அடிமை பூண்டு ஒழுகுவதன் பலனை நன்றாகக் காட்டியிருக்கிறார். இக்காரணம் பற்றியே இங்கு திருமாலுக்கு அடிமை செய்யச் சொன்னாள் ஔவையார்.

ஆனால், காலகதியில் பரம்பொருளுக்கு விஷ்ணு என்ற பெயரை முக்கியமாகக் கொண்டு ஆராதனா த்யான ஆசார ஒழுங்குகளை ஏற்படுத்தியுள்ள ஆகமங்கள் ஏராளமாக ஏற்பட்டு, சிவத்வேஷத்திற்குக் கூட இடம் வெகுவாக அமைந்துவிட்டது. இப்படியே சிவன் என்ற பெயர் விஷயத்திலும் ஏற்பட்டுவிட்டது. ஆகவே சிவபக்தன் விஷ்ணுவை ஒழுங்காக வழிபடுவது என்பது இப்படிப்பட்ட ஆகமப் பின்னல்களுக்கு இடையில் சிக்கியுள்ள நமக்கு முடியாத காரியம். ஆதலால் திருமாலுக்கடிமை செய்யென்று எழுந்த வாக்கியத்திற்கு, வைஷ்ணவர்கள் விஷ்ணுவை எப்படி எல்லாம் வழிபடுகின்றனரோ, அப்படி எல்லாம் வழிபடவேண்டும் என்று விரிவாகப் பொருள் கூற முடியாது. ஆனால் திருமால் வழிபாடு செய்பவர்களைக்கண்டு த்வேஷம் கொள்ளாது சிவன் வழிபாடு செய்வதற்கு இந்த ஸூத்ரம் ஆதாரமாக விருக்கலாம். இதுவுமன்றி வேறு ஒரு விஷயம் இதனுள் அடங்கியுள்ளது. ஒவ்வொரு ஆகமமும் தம் மூர்த்தியான விஷ்ணு சிவர்களே பரம்பொருள் என்றும், அவரே ப்ரபஞ்சஸ்ருஷ்டி ஸ்திதி ஸம்ஹார அவஸரங்களுக்கேற்ப ப்ரஹ்ம, விஷ்ணு ருத்ரர்களாகத் தோற்றுகின்றனர் என்றும் கூறும். ஆகவே ஔவையார் சிவபக்தர்களை நோக்கி, அவர்களது பரம்பொருளான சிவத்தை, ப்ரபஞ்சஸ்திதி அவஸரத்தையும், பக்தர்களை அனுக்ரஹிக்கும் சிஷ்டபரிபாலனமான அவஸரத்தையும், ப்ரபஞ்சத் தோற்ற காரணமான மாயையை அடக்கி ஆளும் அவஸரத்தையும் கருதி, விஷ்ணுவாக எண்ணி மாயத்தோற்றங்களை விட்டு நீங்கவேண்டிய மோக்ஷ இச்சையை திருப்தி செய்ய வழிபடவேண்டும் என்பதாகத்தான் கொள்ளவேண்டும். இப்படிப்பார்த்தால் வைஷ்ணவர்களும் சிற்சில அவஸரங்களில் தமது பரம்பொருளைச் சிவனாகக் கருதி வழிபடவேண்டியது அவசியமாகும். ஆகவே, மதஸ்தர்கள் தமது ஆராதனை, ஆசாரம், ஸம்ஸ்காரம் இவைகளின் ஒழுங்குகளுக்கு விரோதமில்லாமலே தமது பரம்பொருளை வேறு மூர்த்திகளாகவும் கருதித் தமது நிலைகளுக்கேற்ப வழிபடலாம் என்க. இதனால் வைதிக மூர்த்திகளிடம் உள்ள த்வேஷம் எந்த ஆகமத்தாருக்கும் நீங்கிவிடவேண்டும் என்பதே ஔவையின் உட்கருத்து என்பது வெளிப்படும்.

இப்படிப்பட்ட மூர்த்திஸமரஸ ரஹஸ்யமுணர்ந்த பெரியோர்கள் எல்லோரும் த்வேஷம் ஒன்றுமின்றியேதான் தமது உபாஸனா மூர்த்தங்களுக்கு அடிமை செய்து வந்துள்ளார். உதாரணம்: அப்பைய தீக்ஷிதர், "ஜகத் அதீச்வரனாகிய ஜனார்த்தனனாலும் ஸரி (விஷ்ணு) ஜகத்முடிவை உண்டாக்கும் மஹேச்வரனாலும் ஸரி (சிவன்), இவர்களுக்குள் வஸ்து பேதம் என்பது எனக்கு இல்லவே இல்லை; ஆயினும் என் பக்தி,பிறைசூடியான பெருமானிடமே பாய்ந்தோடுகிறது" என்றும், கிருஷ்ணகர்ணாமிருதம் பாடிய லீலாசுகர் "நாங்களோ சைவர்கள், அதைக் கேட்க வேண்டியதேயில்லை; அதிலும் பஞ்சாக்ஷரத்தை மிகுதியாக ஜபிப்பவர்கள். ஆகிலும் என் மனம் காசாம்பூ நிறத்தராயும், கோபஸ்திரீகளிடம் குழந்தையாய்வளரும் புன்சிரிப்போடு விளங்கும் கிருஷ்ணமூர்த்தியையே நாடுகிறது" என்றும் கூறிய வாக்கியங்களே.

இதுவுமன்றி ஔவையார் இந்த வாக்கிய ஸாரபலத்தாலேயே சைவர்கள் விஷ்ணு கதைகளை உருக்கமாயும், வைஷ்ணவர்கள் சிவகதைகளை உருக்கமாயும் செய்துள்ளார்கள். பாரதம்பாடிய வில்லிபுத்தூரார் ஆரண்ய பர்வம், அர்ஜுனன் தவநிலைச் சருக்கத்தில் சிவபெருமான் வேட உருவுடன் அர்ச்சுனனை வதைக்கவந்த மூகாஸுரப் பன்றி

யைத் தேடிப் புறப்பட்டதை வர்ணிக்கையில்:—

*ஒரேனம் தனைத்தேட ஒளித்தருளும் இருபாதத் தொருவனைந்தப், போரேனம் தனைத் தேடிச் கணங்களுடன் புறப்பட்டான்.*

என்று பாடியதும், சைவராகிய கம்பர் இராமாயணம் பாடிய உருக்கமும், அருணாசலக் கவிராயர் அதை நாடகத் தமிழாக்கிய உருக்கமுமே இதற்கு உதாரணம். இந்த ஸமரஸப் பிடிப்பினாலேதான் இக்காலத்திலும் ஸ்மார்த்தர்கள் மூர்த்தி த்வேஷத்திற்கு இடமே கொடுக்காம விருப்பதும். ஆகவே, இப்படி பொதுப்படை வைதிகர்களாகவேதான் எல்லோரும் இருக்கவேண்டும் என்பது ஔவையார் கருத்து.

இன்னும் வைதிக மரபுப்படி இந்தஸூத்ரத்தை ஆராய்ந்து பார்க்கில், வேறு ஒரு அரிய நுட்பமும் வெளியாகும். மஹாவிஷ்ணுஅவதாரமாகியகிருஷ்ணபரமாத்மா வேதச்சுருக்கமாக வெளியிட்ட கீதையில் ஆகமவைஷ்ணவத்திற்கு இடமே தாராது, தன்னைவேதத்தில் கூறப்படும் ஸகுண ஈச்வரனென்றே கூறிவருகிறார். தன்னை வழிபட்டால் முக்குணங்களைத் தாண்ட, தன்னில் எந்தபரவஸ்து உலகத்தவருக்கு ஸகுணமாகவே மாத்திரம் விளங்குகிறதோ, அந்த வஸ்து உள்ளபடி நிர்க்குணமாகவே விளங்கிவிடும் என்றும் வற்புறுத்துகிறார். ஆகவே இந்த ஸூத்ரத்தில் கூறப்படும் திருமால் ஸகுண ஈச்வரனே. வைஷ்ணவ சைவ ஆகமங்கள் தமது பரம்பொருளுக்குக் கூறும் அனந்த கல்யாண குணவைபவ விசேஷங்கள் எல்லாம் வைதிக ஸகுண ஈச்வரனுக்குப் பொருத்தமுடையனவே. அவருக்கு அடிமை செய்வதாவது, அவர் உத்தரவுகளாகிய வேத சாஸ்திரங்களில் வெளியாகும் ஜாதி வர்ணாச்ரம தர்மங்களை மிகுந்த பற்றுடன் அனுஷ்டித்து, அவர் கோட்பாடுகளை மீறு திருத்தலும், அவரை ஆராதனை முதலியவைகளால் நேரிட வழிபடுதலும், அவர் ஸகுணரூபத்தில் ஈடுபட்டுத் தன்னை அவரைவிட்டுத் தனியாக உணராமலிருக்கப் பழகுவதுமே. இவைகளுள் முதல் பாகமான கர்மானுஷ்டானத்திற்குத்தான் அடிமை செய்வது என்ற சொல் நன்றாகப் பொருந்தும். இதில்தான் ஆண்டான் அடிமைச் சேர்க்கை நன்றாக அமையும். இதைச் செய்துவந்தால்தான் மற்றைய இரண்டுவித வழிபாட்டுக்கு வேண்டிய ஆற்றல்வரும். ஆகவே, வைதிகவழியில் முனைந்து பரம்பொருளை உள்ளபடி நிர்க்குணமாகக் கண்டு கலந்துவிட ப்ரபஞ்ச காரணமான மாயைக்கு யஜமானனான ஸகுண ஈச்வரனுக்கு, அவன் இட்ட வர்ணாச்ரம தர்ம வரம்புப்படி நடந்து அடிமைசெய்து அவரை வழிபட்டே தீர வேண்டும் என்ற ஆழ்ந்த வைதிகக்கருத்தை அடக்கியுள்ளது ஔவையாரின் சைவவிரோதம்போலக் காணப்படும் வைதிகப் பொருத்தமான இந்த ஸூத்ரம்.

சிறுவர், ஸ்திரீகளுக்கான பக்கங்கள்

## CHILDREN'S & LADIES' PAGES

# மாதவீகங்கணம்

### அத்யாயம் 8

(231-ம் பக்கத்தொடர்ச்சி.)

மந்த்ராலோசனை மண்டபம்

அக்பர் மஹா சக்கரவர்த்தியவர்கள் நாற்பத்தைந்து வருஷகாலம் எவ்விதக் குற்றங் குறையுமின்றி ஸர்வஜன ஸம்மதமாய் செங்கோல் நடத்திவந்தார். சண்டை சச்சரவுகள் என்பதே கிடையாது. எங்கு பார்த்தாலும் ஜனங்கள் மனஸ்ஸந்துஷ்டியடைந்திருந்தனர். இந்த நாற்பத்தைந்து வருஷங்களுக்குள் எத்தனையோ நூதன நாடுகள் சக்ரவர்த்தியவர்களுடைய ஆளுகையின் கீழ்க் கொண்டுவரப்பட்டன. மொகலாய ராஜபுத்ர ஸைந்யங்கள் அடுத்து இரண்டு வருஷங்கள் சண்டையிராமல் சும்மாவிருந்ததில்லை. இப்படி தமது ஸேனை புதிய புதிய ராஜ்யங்களை ஜயித்துக்கொண்டிருக்கையில், அக்பரவர்கள் ஜயிக்கப்பட்ட ராஜ்யங்களைச் சீரும் சிறப்புமாய் ப்ரஜைகள் அனைவரும் வாழ்த்த செங்கோல் முறைமையுடன் ஆண்டு வந்தார். காபூல், கந்தஹார், காஷ்மீர், ஸிந்து, குஜராத், வங்காளம் இந்த நாடுகள் கடும்போர்கள் காரணமாய் ஒன்றன்

(இதன் தொடர்ச்சி 260-ம் பக்கம்.)

பின் ஒன்ருய் மொகலாய ராஜ்யத்துடன் சேர்க்கப்பட்டன. அக்பரவர்களது அந்த்ய காலத்தில் அவருடைய ராஜ்யம் ஹிந்துகுஷ் பர்வதம் தொடங்கி, விந்திய பர்வதம் வரைக்கும், மேற்கில் குஜராத் மாகாணம் தொடங்கி கிழக்கில் வங்காளம் வரைக்கும் வ்யாபித்திருந்தது. இதனுடன் நிற்காமல் சிறிது காலத்துக்கு முன்னர் மொகலாய ராணுவப் படைகள் விந்திய பர்வதத்தைக் கடந்து தெற்கில் ஆமத்நகரத்தைக் கைப்பற்றின. இவ்வகண்ட ராஜ்யமானது பதினைந்துமண்டலங்களாகப் பிரிக்கப்பட்டது. ஒவ்வொரு மண்டலத்துக்கும் ஒவ்வொரு ராஜ ப்ரதிநிதி நியமிக்கப்பட்டிருந்தது. பலவேறு மதங்களையும், பலவேறு மதக்கோட்பாடுகளையும் அநுஸரித்து வரும் இருபது கோடி ஜனங்களைத் தனக்குள் அடக்கிக்கொண்டு நின்ற ராஜ்யத்தை, ஸர்வஜன ஸஹோதரப் பான்மையுடன் பரிவாயும் ஸ்நேஹமாகவும் அரசாட்சி செய்துவந்த மகிபனது பெருமை என்ன பெருமை! ஐரோப்பிய தேசங்களில் இங்க்லண்ட் நாட்டு எலிஜபெத் மஹாராணி, ப்ரான்ஸ் நாட்டு நாலாவது ஹென்றி மன்னர், ஸ்பெயின் நாட்டு இரண்டாவது பிலிப் மகிபர் முதலிய ராஜநிபுணர்கள் தழைத் தோங்கிய அக்காலத்தில் எண்ணிறந்த ஜாதி பேதங்களும் ஒன்றுடனென்று எவ்வளவோ முரண்படும் பல மதங்களும் கொண்டு விளங்கிய இருபது கோடி ப்ரஜைகளைக்கொண்ட அகண்டதொரு ராஜ்யத்தை அவ்வளவு விமர்சையாக ஆட்சிபுரிந்த நிகரில்லா ராஜாதி ராஜராகிய மொகலாய திலகத்தின் நாமதேயத்தைக் கேட்டிராதவர் கிடையாது.

ஆயினும், அவருடைய அந்த்ய காலம் அவர் மனதுக்கு அவ்வளவு த்ருப்திகரமாகயில்லை. ஒவ்வொன்ருகப் பல கவலைகள் ஏற்பட்டன; தான் அல்லும் பகலும் வேளை தவருமல் ஜலம் வார்த்து எருவிட்டு வளர்த்த மரம் நாளடைவில் உலர்ந்து போய்விடுமோ என்ற ஏக்கம் மேலிட்டது. காலையில் தர்பார் மண்டபத்தில் விளங்கிய ப்ரகாசமான சந்த்ரவதனத்தில்நெருங்கிப்பார்க்கும்போது துக்கக்குறிகள் சில தென்பட்டன. இந்த மனக் கவலைகளைப்பற்றிய யோசனை செய்யத்தான் அக்பர் இப்போது இம்மண்டபத்தில் தன் ஆப்த மித்ரர்களுடன் கூடியிருந்தது.

“கான்கானன், நீர் ஆமத்நகரத்தை ஜயித்தது ஒரு பெரிதன்று. இனி அந்நாட்டை ஸரிவரப் பரிபாலிப்பது உண்டே, அதுதான் நான் உம்மிடமிருந்து எதிர்பார்க்கும் பெரிய கார்யம். அத்தொழில் எளிதன்று, எனக்குத்தெரியும்; மிக்க கஷ்டஸாத்யமானது; ஸாமாந்ய உத்யோகஸ்தர்களை நம்பிவிடக்கூடிய தொழிலன்று அது. அந்த நாட்டை நீதியாய்ப் பரிபாலனம் செய்வது உமது பொறுப்பு. அவ்விஷயத்தில் உம்மைவிட நம்பிக்கையானவர்கள் எனக்கு வேறெவருங் கிடையாது.”

“அடியேன ஆமத்நகரத்தை ஜயித்து? தாங்கள் விந்தியபர்வதத்தைக் கடந்து எங்களுக்கு வழிகாட்டா திருந்திருந்தால், அப்புறம் தெரிந்திருக்கும் எங்களுடைய ஸாமர்த்யம்! ஸூர்யனின்றி இதர க்ரஹங்கள் ப்ரகாசிக்குமோ? தங்களுடைய மேல்பார்வையும் ஸமயோசித புத்திமதியும் இல்லாமல் என்ன கார்யம் நடக்கும். தாங்களன்ருே எல்லாவற்றிற்கும் மூலகாரணம்.”

கான்கானனுடைய முகஸ்துதியைக் கவனிக்காமல் அக்பரவர்கள் அவரைப்பார்த்து “ஆமத்நகரத்தில் நமக்கு இன்னும் எவ்வளவோ கஷ்டங்கள் இருக்கின்றன. அவ்விடத்தில் மஹா விரதீரம் பொருந்தி ஆவேசத்துடன் நம்மை எதிர்த்த அந்தப் பெண்ணரசியின் செயலை மறவாத போர்வீரர்கள் பலர் உயிருடனிருக்கின்றனர். அவர்களின் மீது நாம் எப்போதும் கண்ணுயிருக்கவேண்டும். அம்மாதினியின் சௌர்யமும் பௌருஷமும் அல்ப ஸ்வல்பமானதன்று” எனக் கூறினர்.

“தாங்கள் சொல்வது முற்றும் ஸரியே. சண்ட்ஸுல்தானவை ஆமத்நகரத்தார் எளிதில் மறப்பரோ? நாம்தான் மறந்துவிடுவோமோ? கொண்டவானு நாட்டு துர்க்கவதி ராணிக்குச் சற்றேனும் சளைத்தவள் அல்லள் ஸுல்தானு. தெய்வத்தன்மை பொருந்திவிளங்கிய இந்த இரண்டு வீரமாதர்களும் தங்களுடைய அரசாட்சியின் மகிமையை உலகத்தாருக்குக் கம்பீரமாய்

எடுத்துக்காட்ட அவதரித்த தேவஸ்த்ரீகள் போலும்."

எப்போதும் பகைவர்களின் சௌர்யத்தை ஸரிவர மதித்துப், புகழும் ஸ்வபாவமுடையவராயினும் அக்பர் பெருமான் இந்த ஸமயத்தில் வேறு விஷயத்தில் தன் மனதைச் செலுத்தியிருந்ததால் கான்கானன் பேசிய வார்த்தை இரண்டொன்றே அவர் காதில் விழுந்தது. தத்ஸமயம் அவருக்கு புத்தி அவற்றின்மீது செல்லவில்லை.

"கான்கானன், அந்த இரண்டு ஸ்த்ரீகளும் இப்போது உயிர்த்திருந்தால் எனக்கு நிரம்ப த்ருப்தியாயிருக்கும். தூர்க்கவதிக்கு நான் முதல்தரமான எனது ஜாகிர்களிலொன்றைக் கொடுத்து அவளை நல்ல அந்தஸ்தில் வைத்திருப்பேன். எனது புத்ரர்களில் ஒருவனுக்கு சண்ட் ஸுல்தானாவை மணம்புரிவித்து அவளை எனது செல்வப் புதல்வியாகப் பாவித்து வருவேன். தாங்களும்தான் இருந்தீரே, அவளவ்வளவு தீரமாய்ப் புருஷர்களில் எவராவது போர் புரிந்தனரா?"

"பல பராக்ரம ஸிம்ஹமே, இணையற்ற சுத்தவீரராகிய மூராது இளவரசரும் நானும் அவளுடன் நின்று போர்புரிய ஆண்மையற்றுப் பின்னடைந்துவிட்டோம். அன்றையதினம் கோதாவரி நதிதீரத்தில் நடந்த யுத்தத்தில் மடிந்த மொகலாய வீரர்களை எண்ணிக்கையிடுவது ஸாத்யமோ? அந்த இரண்டு நாள் யுத்தம் என்ன கோரயுத்தம்! என்ன கொலை! என்ன படுகளம்! டானியல் ராஜகுமாரர் சிறிது வெற்றியடைந்தார். அதையும் வெற்றியென்று சொல்லமுடியாது. கடைசியில் தாங்கள் நேரில் வந்து யுத்தத்தை நடத்திய பின்னர்தான் ஆமத்நகரம் நம் கைவசப்பட்டது."

தமது குமாரர்களுடைய நாமதேயங்களைக் கேட்கும்போது அக்பர் முகத்தில் துக்கக்குறிகள் தோன்றின. அவர் முகம் களங்கமடைந்தது. வ்யஸனத்தால் தொண்டையடைத்தது; பேச நாவெழவில்லை. கடைசியில் ஒருவாறு தமது துக்கத்தை யடக்கிக்கொண்டு அவர் நின்று நின்று பேசலானார். அவருடைய பார்வை ஒன்றின்மீதும் நிற்காமல் அலைந்துகொண்டிருந்தது.

"ரணசூரனாகிய எனது மகன் மூராது பால்ய ஆட்டங்களில் மிதமிஞ்சி உழன்று அகால மரணத்துக்கு ஆளானான். டானியலும் சிறிது துஷ்டவழியில் ப்ரவேசித்திருக்கிறதாகத் தெரிகிறது. வரவர, அவன் தனது வேலையில் சோம்பலாயிருக்கிறான். சிற்றின்ப அலுவல் அதிகமாகிக் கொண்டிருக்கிறது. கான்கானன், தாங்களும் அவனுக்குப் பிதா நிலைமையிலிருக்கிறீர். உமது தவப்புத்ரியை அவனுக்கு விவாஹம் செய்துவைத்திருக்கிறீர். அவனை ஒரு கண் பார்த்துக்கொள்ளும். அவனைப் பேருக்கு ஆமத்நகரத்துக் கவர்னராக நியமித்திருக்கிறேன். அவனிடம் எனக்கு நம்பிக்கையில்லை. ராஜ்ய நிர்வாகத்தை நீர் பார்த்துக்கொள்ளும். அவனை நம்பி இருந்துவிடாதீர்."

"அப்படியே, எஜமானர் அவர்களது சித்தம். நான் எவ்வளவோ அதிர்ஷ்டம் செய்து என் புத்ரியை டானியலுக்குக் கொடுக்கும் பாக்கியம் பெற்றேன். என்னைவிட பெரியவர்களெல்லாம் அந்த விசேஷ மரியாதையை நாடுகின்றனர். பீஜப்பூர் அரசர் தன்மகளைக் கொடுப்பதாக ப்ரஸ்தாபம். அவர் ஒரு பெரியவரைக் கொண்டு அந்த விவாஹத்தை முடிக்கச்சொல்லியிருக்கிறார்."

'யார் அந்தப் பெரியவர் ?"

"அவர் பெயர் பெரிஷ்டா. அவர் தத்காலம் முஹம்மது கஜினி படையெடுத்து வந்த காலந் தொட்டுத் நாளதுவரைக்குமான இந்திய தேச சரித்ரம் எழுதிக்கொண்டிருக்கிறார். அபுல் பாஸலுக்கு இணையானவரெனச் சொல்லிக்கொள்கிறார்கள்."

"அபுல்பாஸல்அப்பேர்ப்பட்ட க்ரந்தகர்த்தாவைப்பரிவுடன் வரவேற்றுஉபசரிப்பார். பாடோனிகூடத் தக்ஷணைத்துப் பண்டிதரை ஸ்நேஹத்துடன் அழைத்து மகிழ்வார். இப்பேர்ப்பட்ட நவரத்னங்கள் மூன்று பேருடைய உதவியால் பிற்காலத்தில் நமது நாமதேயம் இந்நாட்டில் அழியாமல் விளங்கிக்கொண்டிருக்கும் பாக்யம் பெறினும் பெறலாகும்"

"இந்நாட்டில் மட்டுமோ? இதர நாடுகள் எங்கே போயின? அபுல்பாஸல் சிறப்பு இந்தியாவில் மட்டுமன்று. வெளிநாடுகள் பலவற்

தில் தேர்ந்திருக்கிறது. பாரஸீ ஹு நாட்டரசர், தான் அக்பருடைய வாட்ப்ரதாபத்தை நேரில் கண்டறியாராயினும் அபுல்பாஸலுடைய க்ரந்தங்களைக் கண்டு பயமுறுவதாக ஒருமுறை எழுதியிருக்கிறார். நாமெல்லோரும் மண்ணுடன் மண்ணாய் நசித்துவிட்டபின்பும் அவருடைய க்ரந்தங்களின் மகிமை கொழுந்துவிட்டெரிந்து கொண்டிருக்கும்". இதைக்கேட்டு அபுல்பாஸல் உடனே "உமது க்ரந்தங்கள் மட்டும் என்ன, ஸாமான்யமானவைகளா, ஆனால் ஒன்று, நீங்கள் மாத்ரம் உமது பேனாவை யாசகர்களுக்குக் கொடுத்துவிடாதிருக்கவேண்டும்." சக்ரவர்த்தியவர்கள் மலர்ந்த முகத்துடன் அபுல் பாஸலைப் பார்த்து, "நண்பரே, நீர் நமக்குப் புரியும் உதவி சொல்லத்திறமன்று. உம்முடைய வீரத்தால் எத்தனையோ நாடுகள் நமது வசமாயின. உமது க்ரந்தங்களால் நம்முடைய ராஜ்ஜியத்தின் பெயரும் ப்ரதாபமும் உலகெங்கும் ப்ரஸித்தியடைந்து வருகின்றது. ஆனால் இப்போது இதரவிஷயங்கள் சிலவற்றில் உமது உதவி நமக்கு இன்றியமையாததாயிருக்கிறது. நமது மூத்த பிள்ளையின் நடத்தை வரவர, அத்ருப்தியாயிருக்கின்றது; நாளுக்கு நாள் அவனுடைய சேஷ்டை நமக்கு அளவிலா வருத்தத்தை உண்டு பண்ணுகின்றது. நமக்குப் பின்னர் அவன் சக்ரவர்த்தியாகப்போகிற விஷயத்தையும், தற்காலம் அவன் இருக்கும் நிலைமையையும் அவனுடைய நடவடிக்கைகளையும், ஒப்பிட்டுப்பார்த்தால் நமக்கு அதிக கவலையாயிருக்கிறது" என்றார். ஆரம்பத்திலிருந்த மலர்ந்தமுகம் மாறி, வரவர இருளடைந்து வந்தது.

"தாங்கள் தக்ஷிணம் சென்றிருந்தபோது ஸாலிம் இளவரசை ஆஜ்மீருக்குக் கவர்னராக நியமித்தீர்கள். அடியேனும் வங்காளத்திலிருந்து இளவரசருக்கு ஸஹாயமாக வந்தேன். வந்தவிடத்தில் வெகு நாள் தங்க ஸாத்யமில்லாமல் போயிற்று. வங்காளத்தில் கலகங்கள் உண்டாயின. அடியேன் வங்காளம் செல்லவேண்டியதாயிற்று. ஆனால் இப்போது ஆப்காநியர்களுடைய துஷ்டத்தனம் அடியோடு அடங்கிவிட்டது. இனி அவர்கள் தலையெடுப்பார்கள் என்ற பயமில்லை. வங்காளத்தைப்பற்றி இனி சிறிதும் கவலைப் படவேண்டிய அவசியமில்லை. எஜமானர் அவர்களுக்கு இஷ்டமானால், அடியேன் ஆஜ்மீர் சென்று மிகுந்திருக்கும் இரண்டொரு ராஜபுத்ர நாடுகளையும் ஜயித்து எல்லாவற்றையும் ஒழுங்கு படுத்திவைக்கிறேன்."

"ராஜபுத்ரனுக்கு ஏற்ற வேலை" என்று ப்ருத்வி ராஜர் தமக்குள் சொல்லிக்கொண்டார்.

ராஜாமான்ஸிங் ப்ருத்வி சொன்னதைக் கேட்காதவர் போலிருந்தார். ஆனால் அவர் முகத்தில் மாத்ரம் சிறிது கோபக்குறி தென்பட்டது. ப்ருத்வி ராஜரும் அறிந்து கொண்டார்.

"ராஜா மான்ஸிங்! நீர் வங்காளத்தை விட்டு வரவேண்டியதில்லை. நீர் அந்த மாகாணத்தைப் பத்து வருஷத்துக்கு மேலாக த்ருப்திகரமாய் ஆண்டுவருகிறீர். நானிருக்குமட்டும் நீர் அவ்விடத்திலேயே இருக்கலாம். நீர்தான் அந்த ஸ்தானத்துக்கு ஏற்றவர். ஆப்காநியர்களுக்குத் தகுந்த குரு உம்மைவிட வேறொருவருங் கிடையாது. மேலும் மீவாரைப்பற்றி நான் இப்போது கவலைப்படவில்லை. அவ்விடத்திய ஜயாபஜயத்தைப்பற்றி நான் நினைக்கவில்லை. என் கவனமெல்லாம் எனது மூத்தபிள்ளையிடம் சென்றிருக்கிறது. நீர் வங்காளம் திரும்பியவுடன், ஸாலிம் மீவாரை மறந்துவிட்டான். அவனுடைய எண்ணங்கள் வேறுபட்டன. ஆக்ராவுக்கு வந்து கோட்டையைப்பிடித்து ஸிம்ஹாஸனத்தில் உட்காரும் அவா அதிகமாய்விட்டது. அசட்டுப்பையன். ராஜ்யபாரம் செய்வதென்றால் அவனுக்கு என்னமோ வாய்ப்பேச்சாயிருக்கிறது. ஏதோ குதிரைப்பந்தயம் என்று அவன் எண்ணுகிறான். ராஜ்யபாரம் தெய்விகமானது. அதை வஹிப்பது கஷ்டஸாத்யம். அது காலக்ரமத்தில் பகவானது அருளால் வரவேண்டியது என்னும் விஷயங்களை யொன்றும் அவன் அறிந்திலன். ராஜ்யபாரம் என்றால் நல்ல ஆடையாபரணங்கள் தரித்து தர்பாரில் விற்றிருந்து களிப்பதுதான் என்று அவன் கருதுகிறான். அதன் உள்கஷ்டங்களை அவன் சிறிதும் அறியவில்லை. இளவர

சர்கள் இவ்வாறெல்லாம் ஆத்ரப்பட்டுத் தங்கள் தகப்பன்மார்களுடைய அந்த்ய காலத்தில் அவர்களுக்குப் பலவித மனோவேதனைகளை உண்டுபண்ணுகிறார்கள்" என்று சொல்லும்போது அக்பர் புன்சிரிப்பு சிரித்தாராயினும், அவருடைய மனோநிலைமையை மான்ஸிங் உள்ளவாறு அறிந்தான்.

"மஹாராஜா அவர்கள், ஸாலிம் பட்டத்துக்கு அருகனல்லன் என்று எண்ணினால் நமக்குப் பின்னர் ராஜ்யத்துக்குத் தகுந்த ஏற்பாடு செய்துவைக்க வேண்டாமா? ஸாலிமுடைய பிள்ளைகள் எல்லோரும் ஸமர்த்தர்கள். ஸாலிம் ஸிம்ஹாஸனத்துக்கு யோக்யதையற்றிருப்பதால், அவருடைய பிள்ளைகளிலொருவரைத் தெரிந்தெடுத்தலாகாதா"

மான்ஸிங்குடைய கள்ளயோசனை அக்பருக்குத் தெரியாதா? எத்தனையோ மான்ஸிங்குகளைப் பார்த்திருக்கிறாரே அவர்! ஸமாசாரமென்னவென்றால், மான்ஸிங்கின் ஸஹோதரி ஸாலிமுடைய மனைவிமார்களில் ஒருத்தி. அவளுடைய மகன் குஸ்ருகான்தான் இளவரசருடைய மூத்தமகன். அவன் நல்ல புத்திசாலி; ராஜாங்கவிஷயங்களில் நல்ல பயிற்சியுடையவன்.

தன் மருமகனிடத்துள்ள ஆசையொரு காரணம், ராஜ்யம் நாசமுறாமல் பத்ரமாயிருப்பது ஒரு காரணம். கடைசியில் ஹிந்துக்கள் முஸல்மான்களிடம் துன்பமுறாதிருத்தல் ஆகிய இம்மூவித காரணங்களை உத்தேசித்துத்தான் மான்ஸிங் ஸாலிமைத் தள்ளிவிட்டுக் குஸ்ருவுக்குப் பட்டாபிஷேகம் செய்யலாம் என்று கூறியது. அக்பர் மனதுக்கு இந்த ஏற்பாடு ஸம்மதமில்லை. இவ்வித ஏற்பாட்டினால் அநேக கெடுதிகள் உண்டாகும். ராஜ்யம் நிலையற்றுச் சின்னாபின்னமாகும் என்றெண்ணினார் அக்பர். கடைசியில் அவர் மரண காலத்தில், மான்ஸிங்கும் அவருடைய நண்பர்களும் தங்களாலானமட்டும் அவருடைய எண்ணத்தை மாற்ற முயன்றனர். ஒன்றும் பயன்படவில்லை. அக்பரது எண்ணமே முடிவில் நிறைவேறிற்று.

"ராஜா மான்ஸிங், நீர் சொல்லும் யோசனை ஸரியன்று. அது என் மனதுக்கு ஒவ்வாது. உமது ஸஹோதரி மகன் ஸமர்த்தன்தான். எனக்குத் தெரியும். அவனிடம்தான் எனக்கு அளவிறந்த ப்ரேமை. ஆனால் தகப்பனைத் தள்ளி மகனுக்கு மகுடம் சூட்டுவதென்பது அடாத கார்யம். அதனால் பின்னாடி, பல தீமைகள் உண்டாகும். ஒருதரம் இவ்வாறு செய்துவிட்டால், இதுவே வழக்கமாகிவிடும். ராஜ்ய முழுவதும் சண்டை சச்சரவுகள் கிளம்பி நாடெல்லாம் படுகளமாகி ரக்த ப்ரவாகமாய்விடும். ஸாலிம் எனக்கு த்ரோஹம் நினைத்தான் என்பது உண்மையே. ஆனால் அவனை இம்முறை மன்னித்துவிட்டேன். இனி அவனை நல்ல வழிக்குக் கொண்டு வரவேண்டிய ப்ரயத்னங்கள் செய்யவேண்டும். நமது நண்பர் அபுல்பாஸலின் உதவியைக்கொண்டு நான் ஸாலிமைச் சீர்திருத்த உத்தேசித்திருக்கிறேன்" என்றார் அக்பர்.

"எஜமானரவர்கள் ஆஜ்ஞைப்படி நடக்க அடியேன் ஸித்தமாயிருக்கிறேன்."

"நாம் தக்ஷிணத்திலிருந்தபோது ஸாலிம் ஆக்ராவுக்கு வந்தான். கோட்டைக்குள் ப்ரவேசிக்க முடியவில்லை. அங்கிருந்து அல்லஹாபாத் சென்றான். பீஹார் நாட்டுக் கஜானாவிலிருந்த பணத்தையெல்லாம் எடுத்துக்கொண்டான். வேண்டிய ஏற்பாடுகளெல்லாம் மும்முரமாய்ச் செய்துகொண்டிருந்தான். அப்புறம் தன் தாயாரைப் பார்ப்பதாகச் சொல்லிக்கொண்டு அவன் ரஹஸ்யமாய் இந்த அரண்மனைக்குள் வந்துபோனான். என் ஸேவகர்களும் என் உத்தரவின்பேரில் அவனைத் தடங்கல் செய்யவில்லை. அவன், தாயாரைப் பார்க்க வந்தவனாகத் தோற்றவில்லை. வேறு ஏதோ விசேஷ காரணம் இருந்ததாகத் தெரிகிறது. ஆற்றண்டை அவனுடைய குதிரையாட்கள் ஆயுததாரிகளாய் நின்றிருந்தனர். கோட்டைக்குள் பேடிகள் சிலர் அவனுடன் நுழைந்தனர். அவன் அந்தரங்க ஏற்பாடுகள் என்னமோ, எனக்குத் தெரிந்துகொள்ளவேண்டிய அவச்யமில்லை. என்னவானாலும் அவைகளால் ஒரு தீங்கும் நேரிடவில்லை. அதனுடன் போகட்டும். இன்றைய காலை அவனைத் தர்பாருக்கு அழைத்து மரியாதை செய்து அனுப்பினேன். அவன் அல்லஹாபாத் சென்றிருக்கிறான். அபுல்பாஸல்! நீர் ஒரு

பெரிய ஸைந்யத்துடன் அவ்விடம் சென்று அவனை நல்ல வழிக்குக் கொண்டுவர ப்ரயத்னம் செய்யவேண்டும். அபுல் பாஸல், நீர் அவ்விடம் செல்வது ஒரு ராஜத்ரோஹியைத் தண்டிக்கும் ஸேனாதிபதி முறையிலன்று; துஷ்ட ஸகவாஸம் செய்யும் ஒரு அசட்டுப் பையனுக்கு ஸன்மார்க்கம் போதனை செய்யும்படி அவனது தகப்பனார் தம் அன்பின் மிகுதியால் அனுப்புவித்த குருவாவீர் தாங்கள்.’

“அப்படியே செய்கிறேன்.” என்றார் அபுல்பாஸல்.

“அபுல்பாஸல், நீர் மஹா ஸமர்த்தர். அவரவர்களுடைய குணாதிசயங்களை யறிந்து அவற்றிற் கேற்றவாறு நடக்கும் வல்லமையுடையவர் தாங்கள். ஸன்மார்க்கபோதனை செய்வதற்கு ஸரியானவர் நீர்தான். ஸாம பேததானம் முதலிய உபாயங்கள் உமக்கு நன்றாய்த் தெரியும். ஸாலீமை நல்வழிக்குக் கொண்டுவர வேண்டியது உங்களுடைய பொறுப்பு. தக்ஷிணத்திலிருக்கும் நம[illegible] மகன் இன்னொருவனுடைய அபிவ்ருத்தியைப்பற்றிக் கான்கானன் கவனித்துவருகிறார். அதுபோல் நமது மூத்த மகன் ஸாலீமை உமதுவசம் ஒப்புவித்திருக்கிறேன்.”

அபுல்பாஸல் வணங்கித் தலைகுனிந்து சக்ரவர்த்தியவர்களுடைய கட்டளையை நிறைவேற்றுவதாக வாக்களித்தார். அந்த அலுவலில் போனவர் போனவர்தான். திரும்பவேயில்லை. ஸாலிம் இளவரசர் சில ஆட்களைத் தயார்செய்து அவரைக் கொலை செய்வித்ததாக அக்காலத்துச் சரித்ராசிரியர்கள் எழுதியிருக்கிறார்கள்.

அப்புறம் வங்காளத்தைப்பற்றிய ப்ரஸ்தாபம் உண்டாயிற்று. அந்த விஷயத்தில் மான்ஸிங்தான் அதிகமாய்த் தெரிந்தவர். கான்கானனைப்போல் அவ்வளவு வாக்சாலகம் போதாது. அவர் தனக்குத் தெரிந்த மட்டும் வங்காளத்து நிலைமையை உள்ளங்கை நெல்லிக்கனிபோல் தெளிவாய் ஸ்வல்ப வார்த்தைகளில் எடுத்துரைத்தார். ஆப்கானியர்களுடைய ப்ரயத்னங்களெல்லாம், விளக்கின் அந்த்யகால ப்ரகாசத்தை யொத்தன. வங்காளம் முழுவதும் மொகலாயர் வசமாய்விட்டது; அந்நாட்டுச் சிற்றரசர்களெல்லாம் அக்பருக்குக்கீழ்ப்படிந்து அவரைத் தம்தெய்வமாகக் கொண்டாடுகின்றனர். ஹிந்து அரசர்கள் யாவரும் சக்ரவர்த்தியவர்களுக்குத் தங்களாலான உதவியை த்ருப்தியாய்ச் செய்யத் தயாராயிருக்கின்றனர். கடைசியில் நரேந்த்ரனுடைய ஜமீன்பெயரும் ப்ரஸ்தாபத்துக்கு வந்தது. மான்ஸிங் நரேந்த்ரனது பாட்டனாருடைய வீர தீரத்தைப் பற்றியும், அவர் மொகலாயருக்குப் புரிந்துள்ள உதவியைப்பற்றியும், கடைசியில் தோடர்மால் வங்காளத்தில் கஷ்டநிலையிலிருந்தபோது அவரொருவரே மொகலாயர் பக்கமிருந்து போர்புரிந்த விஷயத்தைப் பற்றியும் ஆதியோடந்தமாய் எடுத்துச் சொன்னார். முடிவாக நரேந்த்ரன் மொகலாயருடைய தண்டைச்சேர்ந்து கடும்போர்கள் பலவற்றில் அஞ்சிப் பின்வாங்காமல் முன்னின்று ஸேனாதிபதிகள் மெச்சும்படி சமர் புரிந்த விஷயத்தையும் கூறினார்.

ராஜாமான்ஸிங் அவர்கள் தன்னை இவ்வளவு புகழ்ந்து பேசியதையும் அவற்றையெல்லாம் சக்ரவர்தியவர்கள் செவிகொடுத்துக் கேட்டதையும் கண்டு, நரேந்த்ரன் ஆனந்த ஸாகரத்தில் ஆழ்ந்தான். அக்பரவர்கள் நரேந்த்ரனைப் புகழ்ந்து இரண்டொரு வார்த்தை பதில் சொன்னார். நரேந்த்ரனுடைய தேகம் புளகாங்கிதமெய்தியது. அவன் ஆனந்தபாஷ்பஞ்சொரிந்தான். பேச நா வெழவில்லை. சக்ரவர்த்தியவர்களுக்கு ஸாஷ்டாங்கமாக நமஸ்காரஞ் செய்தான்.

“அமைச்சர்களே, இன்னொரு விஷயம் உங்களிடம் சொல்லவேண்டும். அதிக நாழிகையாய்விட்டது. இரண்டொரு வார்த்தைகளில் சொல்லி முடித்துவிடுகிறேன். தன் ஜன்மநாடாகிய மீவார் நாட்டில் இருபது வருஷகாலம் புறங்காட்டாமல் என்னுடன் போர்புரிந்த ராணா ப்ரதாபஸிங் சிறிதுகால முன்னர் வீரஸ்வர்க்கமடைந்தனர். அவரைப்போன்ற திடசித்தமுள்ள பகைவரை நான் இது வரைக்கும் கண்டதில்லை. சமர் புரிவதென்றால், அத்தகைய சத்ருவுடன் சமர்புரியவேண்டும். அவரன்றோ சுத்தவீரர். மான்ஸிங், நீர் அவருடன் போர்புரிந்ததில்லையா, அவர் எப்பேர்ப்பட்டவர்?”

ராஜாமான்ஸிங்குக்குக் கோபம் ஒரு பக்கம்வர, அதைக் கூடியமட்டும் அடக்கிக்கொண்டு "ஆம், சமர் புரிந்திருக்கிறேன். இருபத்தைந்து வருஷத்துக்கு முன் ஹால்டிகடம் கணவாயில் ஸந்தித்திருக்கிறோம். அன்றைய தினம் மாலைக்குள் கணவாயெல்லாம் பிணக்குவியல்தான். அவர் இறப்பதற்கு முன் இன்னொருமுறை ஸந்தித்துப் பழிக்குப் பழி வாங்கவேண்டுமென்று நான் வைரிகொண்டிருந்தேன். ஆனால் இப்போது ப்ரதாபஸிங் மாண்டுவிட்டார். இனி போனதைப்பற்றி நினைப்பானேன்? சுத்தவீரர் அவர் பித்ருலோகத்தில் ஸுகமாயிருக்கட்டும்."

ராஜபுத்ர வீரம் மாத்ரமல்லாமல், ராஜபுத்ர வைரிகளும் மனஸ்தாபங்களும் அக்பருக்கு நன்றாய்த்தெரியுமாதலால் அவர் ராஜா மான்ஸிங் வார்த்தைகளின் உட்கருத்தை நன்றாக உணர்ந்தார். ஆனால் அவர் தன்னால் முடிந்தமட்டும் இந்த வைரிகளையும் விரோதங்களையும் ஒழிக்க முயன்றார். ராஜபுத்ரத் தலைவர்களைத் தனக்குக் கீழ்ப்படியும்படிச்செய்து அவர்களுடைய ஸ்வதந்த்ரத்தை ஸாத்யமானமட்டும் தொந்தரவு செய்யாமல் சீராய்ப் பாதுகாத்துவரவேண்டுமென்பது அவருடைய முக்ய கோரிக்கை.

க்ஷத்ரியர்களுக்குள் ப்ரதாபஸிங் ஒருவர்தான் அக்பருக்குக் கீழ்ப்படியாதவர். ஆயினும் அக்பர் அவருடைய தைர்யத்தையும் சௌர்யத்தையும் புகழ்ந்தார். கூட, அக்பருக்கு ராஜ்யத்தின் வேறு பாகங்களில், தொல்லைகள் ஏற்பட்டன. இவ்வளவு காலமும் பின் வாங்காமல் தன்னை எதிர்த்த ரணவீரரைப் பின்னும் ஹிம்ஸிப்பதால் தன்னுடைய ஹிந்து ப்ரஜைகள் அத்ருப்தியடைவார்கள் என்று அக்பர் சில ஸந்தர்ப்பங்களில் எண்ணினார். இக்காரணங்களைக்கொண்டு சில வருஷங்களாக அக்பர் மீவார் ராணாவுடன் மும்முரமாய்ப் போர் புரிவதை நிறுத்திவிட்டார்.

"மீவார் நாட்டு ப்ரதான நகராகிய சித்தூர் என் கையிலிருக்கிறது. ப்ரதாபஸிங்கின் புத்ரர் உதயபுரி என்னும் பட்டணத்தில் இருந்துவருகிறார். அந்நகரம் நல்ல மலை ப்ரதேசத்தின் நடுவிலுள்ளது. எளிதில் வெல்லக்கூடியதன்று. இனி நாம் அவரைத் தொந்தரவு செய்யவேண்டாம். அவர் ஸுகமே அவ்விடம் இருக்கட்டும்."

மான்ஸிங்குக்குக் கோபத்தால் கண்கள் சிவந்தன. ப்ருத்வி ராஜரோ அக்பருடைய சொற்களைக் கேட்டு ஸந்தோஷமெய்தினார்.

"இதுவுமன்றி மீவார் அரசருக்கு ஓர் அநுதாப நிருபம் அனுப்ப உத்தேசிக்கிறேன். அவர் ஒரு நாளில்லாவிட்டால் ஒரு நாள் தன் தகப்பனாருடைய செய்கை யுக்தமற்றதென்று உணர்ந்து இதர ராஜபுத்ரர்களைப்போல் என்னைச் சேர்ந்து இந்த அகண்ட ராஜ்யத்து அரசாட்சியில் எனக்கு உதவிசெய்வார் என்பது நிச்சயம். நாளைய தினமே என்னைச் சேரும்படி அவரை நிர்ப்பந்திக்க எனக்கு இஷ்டமில்லை. அவருக்கே அது என்றைக்கு யுக்தமெனப் படுகிறதோ அன்றைக்குச் சேரட்டும்; அவஸரமில்லை. அதுவரைக்கும், அவர் சண்டைகளின்றி ஸந்தோஷமாயிருக்கட்டும்."

மந்த்ரிகளனைவரும் அக்பரது ஏற்பாட்டை ஆமோதித்தனர். மான்ஸிங் மாத்ரம் வெறுப்புடன் மௌனமாயிருந்தான். அவனுடன் சேர்ந்தவர்கள் இரண்டொரு முல்லாக்கள் இருந்தனர். அவர்களுக்கு அந்நிய மதஸ்தனுடன் உடன்படிக்கை யென்பது கர்ணகடூரமா யிருந்தது. மந்த்ரிகளெல்லாம் வாயை மூடிக்கொண்டு இருக்கவேண்டிய காலத்துங்கூட முல்லாக்கள் பேசத் துணிவார்கள்.

முல்லாக்கள் அத்ருப்தியடைவார்களென்பதை யறிந்த அக்பர், உடனே முல்லாக்களைப் பார்த்து "நண்பர்களே, உங்களுடன் பின்னர் சாவகாசமாய் வார்த்தையாடுகிறேன்" என்று சொல்லிவிட்டு இதரர்களைப் பார்த்து ப்ரதாபஸிங் குமாரராகிய அமார் ஸிங்குக்கு எனது அநுதாபக் கடிதத்தையும் உடன்படிக்கைச் சீட்டையும் எடுத்துப்போக இஷ்டமுடையவர் யார்?" எனக் கேட்டார்.

---

ஸர் லாரேன்ஸ் ஜென்கின்ஸ்:—கல்கத்தா ஹைகோர்ட்டில் சீப் ஜஸ்டிஸ் ஸ்தானத்தை மிகுந்த கியாதியுடன் வெகு காலம் வகித்துவந்த இவர், லண்டன் பிரிவி கவுன்ஸிலில் நியமனம் பெற்றிருக்கிறார்.

# உலக ஸம்பவங்கள்

# How the World moves

ராக்ஷஸவருஷம் முடிவடையப் போகிறது. ஆனால் அந்த ராக்ஷஸப்பூண்டு இன்னும் அழிந்தபாடில்லை. இராவணன் தலை போல் வளர்ந்துகொண்டே இருக்கிறது. ஐரோப்பிய நாடுமுழுதும், விஷக்காற்றும் நெருப்பு மழையுமாகவே இருக்கிறது. 1915-ம் வருஷம் ஆரம்பத்தில், சில நாளில் ஜர்மனிநாடு பெருங்காடாய்விடும் என்று எண்ணப்பட்டது. ஆனால் அவ்வாறு எண்ணியது முற்றும் சரியல்லவெனத் தெரியும்படி செயயும் சென்ற வருஷம் நடந்த யுத்தப்போக்கைச் சற்றுக் கவனிப்போம்.

மேல் அரங்கத்தில், சென்ற வருஷாரம்பத்தில், எல்லாம் நல்லதாகவேயிருந்தது. மார்ன் நதியண்டைச் சண்டையில், பிரான்ஸில் மேல் ஜர்மர்னியரது எற்றம் தடுக்கப்பட்டது. சென்றவிடமெல்லாம் ஜெயித்தல், ஜெயித்த நாட்டைக் கவர்தல் என்னும் ஜர்மானிய ராணுவ அபிப்பிராயமும் முறியடிக்கப்பட்டது. அப்பெரிய சண்டையின்பிறகு, அவர்களும் தங்கள் அபிப்பிராயம் தவறு என்று கண் விழித்துக் கொண்டுவிட்டனர். பின் தமது ஜாலக்கால், தம்மைத் தோற்கச் செய்வது அசாத்தியம் என்ற பெருமெண்ணம் நமது நேசப் படையாரது மனத்தில் தோன்றும்படிச் செய்யவேண்டுமென்றே நடந்து வந்தனர். அவ்விதஞ் செய்தால் கௌரவத்தை இழக்காமல் ஸமாதானஞ் செய்ய இடமேற்படும் என்று எண்ணினர்கள். இவ்வாறு இவர் நடந்துகொள்வது முடியாது போயிற்று. யீப்ரிஸ் அருகுநடந்த சண்டையில் கேலே என்னுங் கோட்டையைக் கவரவந்த ஜர்மானியர், மனமழிந்து பின்வாங்கினர். ஆக, இந்தப் பாகத்திய சண்டையில் அவர் தங்களால் எவ்வளவு செய்யமுடியுமோ அவ்வளவும் செய்துபார்த்தனர். ஆனால் காரியம் பலித்தபாடில்லை; நேசப்படையின் முனையைத் தாக்கியுடைக்க முடியவில்லை. இந்த ஸமயத்தில் ஜர்மனிநாட்டில் யுத்தஸாமான்கள் குறைந்துவிட்டனவென்று ஒரு வதந்தி உண்டாயது; யுத்தத்தில் 1,200,000-க்கு மேல் விரர்கள் சேதமாய்விட்டனரெனவும் மதிக்கப்பட்டது. ஆகையால் மழைக்காலம் வருவதற்குள் ஜர்மானிய வீரியம் முதுகொடிந்து விழுமென்று யாவராலும் எண்ணப்பட்டது; உத்தியோக முறையிலும், இவ்வாறே கருதப்பட்டது. ஆகையால் இவ்வருஷம் பிறப்பதற்குள் ஜர்மனி பதராய்ப் பறக்குமெனத் திடமாக நம்பப்பட்டது.

கிழக்கரங்கத்தில், வார்ஸா என்னும் பெருங்கோட்டையை முற்றுகைசெய்த ஜர்மானியரை இருமுறை ருஷியர்கள் தோற்கடித்து ஓடும்படிச் செய்தனர்; டாநங்பர்க் என்னுமிடத்துப் பெருந்தோல்வியை யடைந்திருப்பினும், அதைப்போன்ற பெருந்தோல்வியை அகஸ்டவோ என்னுமிடத்து ஜர்மானியர்க் குண்டாக்கினர்; கலிஷியாவென்னும் பகைவரது நாட்டை ஏறக்குறைய முழுதும் ருஷியர் கவர்ந்தனர்; அந்நாட்டு முக்கியபட்டணமாகிய க்ராகோ என்னுந் தலைநகரை முற்றுகை செய்துகொண்டிருந்தனர்; புகோவியா என்னும் பகைவரது நாட்டையும் கைப்பற்றினர்; கார்பேதியன் மலையைத் தாண்டி ஹங்கரி நாட்டின்மேல் படையெடுத்தனர்; கணக்குமிதமில்லாமல் ஆஸ்ட்ரியர்களை அநேகமுறை நொறுக்கித் தோல்வியடையும்படிச் செய்தனர். இவ்வகைய ருஷியரது ஆற்றலால் ஆஸ்ட்ரியநாடு முற்றும் ஒழிக்கப்பட்டதென்று கருதப்பட்டது.

ஆசிய துருக்கியின் (Asiatic Turkey) வடக்கெல்லையாகிய காகஸஸ் மலையிடம் 1,00,000 துருக்கரைப்பலிகொண்டு, சென்றவிடத்தையெல்லாம் கவர்ந்து ருஷியர் கர்நா என்னும் நகர்மேற் படையெடுத்து அதையுங் கவர்ந்தனர். பால்கன் மலையிடம் செர்விய நாட்டார்

ஆஸ்ட்ரியரது இரண்டாவது படையெடுப்பைத் தடுத்து, 40,000 பகைவரைக் கைதியாக்கினர். நமது இராஜங்கத்தாரது நாவாய்ப் பெரும்படை, பகைவரது நாட்டம் கடல்மேல் எட்ட முடியாது பகைவர்களது நாட்டைச் சுற்றிலுமுற்றுகையிட்டு, கடல்மேல் போக்குவரவுக்குப் பகைவர் விளைக்கும் பயத்தை ஒழித்துத் துடைத்துவிட்டது.

இவ்வாறு நமது நேசப்படையின் கலந்த செயலால், ஜர்மானியர் அடிவைத்த இடமெல்லாம் அபஜெயமாகவேயிருந்தது; அவர்களுடைய ஆட்கள் சேதமோ அளவிலடங்காது. அச்சேனையின் நன்னடத்தை கெடவாரம்பித்துவிட்டது. ஆஸ்ட்ரியர்கள் தோல்விமேல் தோல்வியாய் முதுகொடிந்து காலொய்ந்துவிட்டனர்; அவரது பெரும் பீரங்கிகள் ஸதா உபயோகித்ததால் மழுங்கிவிட்டனவென யாவராலும் மதிக்கப்பட்டன; அவரது சண்டைச்சாமான்கள் குறைந்துவிட்டனவென்றும் கருதப்பட்டது; குடிப்பதற்குக் கூழுமில்லா நிலையை அவர் அடைந்துவிட்டனரெனவு மதிக்கப்பட்டனர்; அவரது நாணயவாரி ஏற்பாடுகள் மனப்பாலாய் விட்டனவென்றே நினைக்கப்பட்டது. நிற்க, நமது நேசராஜாங்கங்களின் நிலையோ இதற்கு நேர் விரோதமாக இருந்தது. போக்குவரவுக்குத் தடையே கிடையாது. யுத்த ஸாமான்கள் வரவர அதிகமாக விருத்தி பெற்றுவந்தன. உணவுப் பொருள்களுக்கோ பயமே இல்லை; சேனையின் ஆட்களுக்கோ குறைவே கிடையாது; தேசங்கள் ஒன்றோடொன்று போட்டியிட்டுச் சேனைக்கு ஆட்களை அனுப்புகின்றன. நாணய நடமாட்டத்தைக் குறித்தோ சிறிதும் கவலைக்கிடமில்லை; ஆங்கிலேய நாவாய்ப்படையிருக்கும்வரை அதற்கேன் குறைவரும்?

இவ்வாறு இருந்தபடியால் நேசப்படைகள் கலந்து ஜர்மானியப் படையைச் சின்னபின்னமாக்கிவிடலாம் என்று யோசித்தார்கள். அது தவறல்ல. ஆங்கிலேயரும், ப்ரெஞ்சுக்காரருமாகக் கலந்து மேலரங்கத்தில் பகைவனைத் தொலைத்துவிடுதல் என்றும், கீழ் அரங்கத்தில் ருஷியப்படை, பகைவரை மிதித்துத் தேய்த்துவிடும் என்றும் நேசராஜாங்கங்களால் கருதப்பட்டது.

ஆனால் 1915௵ முடிவில் யுத்தநிலை எப்படி இருக்கிறது? ஆஸ்ட்ரியா ஹங்கேரி நாடுகளிலிருந்து ருஷியர்கள் வெளியேற்றப்பட்டதல்லாமல், கலீஷியா நாட்டிலிருந்தும் வெளியாக்கப்பட்டனர். அம்மட்டோடிருக்கவில்லை. ருஷ்ய நாடாகிய போலண்ட், ஜர்மானியரால் கவரப்பட்டது. ஸெர்வியா நாடு முழுதும் பகைவர்பாலாகியது. துருக்கி தேசத்தின்மேல் படையெடுப்பாகிய டார்ட்னல்ஸ் செயல்கள் முற்றும் பின்வாங்கின. நம் துருப்புகள் தங்குவதற்குக் கிரீஸ் நாட்டில் இடம்பெற்று விளங்குகின்றன. ஆஸ்ட்ரியர்கள் தமது நாட்டில் இட்டாலியர் ஏறுதிருக்கும்படி வெகு கஷ்டத்துடன் ஜாக்கிரதையாக இருக்கிறார்கள். மெஸபடோமியாவிற்கருகாமையில் நமது இந்தியத் துருப்புகள் குட்-எல்-அமாரா என்னுமிடம்வரை பின்வாங்கும்படி நேர்ந்தது. என்ன நினைத்ததென்னவாகியது?

இம்மாதிரியான நிலையைக்கண்டு சிலர் பயப்படுகிறதாகத் தெரியவருகிறது. பயப்படுவதற்கென்ன நிஜமான காரணமிருக்கின்றது? வெளிக்குத் தடபுடலாக ஜர்மானியர் செய்தது பெருஞ்செயலாகத் தோன்றினும், ஆழ்ந்து யோசித்தால்தான் அதன் நுட்பம் தெரியும். மேற்சொன்ன நிலைக்கு நமது நேசராஜாங்கத்தாரின் முற்றுப்பெறாத எண்ணம் சிறிதுகாரணமாயிருக்கலாம். ஆயினும், அது அவ்வளவு பிரபலமான காரணமல்ல. முதலில் கொஞ்சம் அச்ரத்தை. இனி அவ்வாறு ஜர்மானியரால் ஏமாற்ற முடியாது. நமது படை, இப்பொழுது வரவர ஜர்மானியரைக் காட்டிலும் வன்மையிலும், பெருமையிலும் சிறந்ததாகிக்கொண்டே வருகிறது; வெடிகுண்டுகளின் தன்மையும் உயர்ந்துவிட்டது; ஆட்களும் வரவர அதிகமாகின்றனர்.

நிற்க, முன் சொன்னவாறு முடிந்ததற்குக் காரணம் ருஷ்ய தேசத்து நிலையைப்பற்றிய நம் தப்பு அபிப்பிராயமே. நாம் எண்ணாதபடி அவரது யுத்த ஸாமான்கள் குறைந்துவிட்டன. 'பகைவர்களால் தாக்குப் பிடிக்க முடியாது; நமக்குப் பலம் அதிகம்' என்று கொண்ட வரம்புகடந்த நம்பிக்கையுமிதற்குக்கொஞ்சமாதாரமாயிருக்கலாம். இப்படியிருக்க, ஜர்மனியோ பிடிவாதமாய் உணவுப்

பொருள்கள் முதலிய எல்லாவற்றையும், நிறைய விருத்தபோதிலும், கட்டுக்குள் கொண்டுவந்து, அதிகஞ் செலவாகா திருக்கும்படி ராஜாங்கதிட்டம் செய்தது. ருஷியர்களது நிலேமையை யுணர்ந்து, அவர்களை ஒரு கை பார்த்துத் தம்மைச் சிறிய நாடுகள் மதிக்கும்படியாகச் செய்யவேண்டுமென்ற ஒரே எண்ணத்துடன் வேலை செய்து, ஆஸ்ட்ரிய ரது முறிந்த சேனையையும் ஒன்றுகூட்டிப் பலப்படுத்தி யுத்தத்துக்குத் தயார்செய்தது; தனக்குக் போராத காலமென்பதை நன்குணர்ந்து வெகு ஜாக்ரதையாக வேலை செய்து வந்தது மேலரங்கத்தில் வேலைசெய்வது அசாத்தியமான காரியமென்றும், ஆயத்தப்படாத ருஷியரை, அவர் அவ்வாறு ஆகும் முன்பே அழித்துவிட வேண்டுமென்றும் வேலை செய்தது. தமக்கு ஜயம் கிடைக்க வேண்டுமென்றால், காலம் அதுதான் என்று உழைத்தது. இந்த ஏற்பாடு ஆழ்ந்த யோசனையால் ஏற்பட்டதுதான்; ஆனல் முழுதும் பயனடைய முடியாததாயிற்று.

மேலும், இதற்குப் பிரபலமான காரணங்களுமுண்டு. பிரான்ஸில் குளிர்நாள்போரில் ஷேம்பேன், வோயர், வாஸ்ஜஸ் என்னுமிடங்களிலும், நாவ்ஷாபேல், ஆர்டாய் என்னுமிடங்களில் நடந்த போரில், நேசத் துருப்புகள் ஜயமடைந்து வந்தாலும், அவரது வெடிகுண்டு சரக்குக் குறைவை ஜர்மானியர் அறிந்தனர். பால்கன் சிற்றரசுகள் எல்லாம் நேசத் துருப்புகளிடம் நல்ல அபிப்பிராயங் கொண்டிருந்தன; டார்டனல்ஸ் செயல்கள் துருக்கிக்குத் தலைவலியாகவே இருந்தன. இதற்காகத் தனது பலத்தை அச்சிறு நாடுகள் கண்டு மதிக்கும்படியாக வேலை செய்யவேண்டுமென்ற எண்ணத்துடன் ருஷியர்மேல் ஜர்மனி படையெடுத்தது. இந்தச் செயல்,முழுதும் பலிக்காவிடினும், பல்கேரியாவை அதனுடன் சேரும்படியாகச் செய்தது. ஆனுலும், ஆள்சேதம் சொல்லியடங்காது. அவ்வாறு ஜர்மனியரால் நெடுங்காலஞ் சண்டையிட முடியாது.

1916-ம் வருஷ ஆரம்பம், நம்நேசத் துருப்புகளுக்குச் சங்கற்ப பங்கமாக விருப்பினும், நாம் பயப்படுவதற்குச் சிறிதும் இடமில்லை. காலஞ் செல்லச்செல்லத்தான் நமக்கு ஜயம். இந்த யுத்தம், எவ்வளவுக்கெவ்வளவு நாள் இழுக்குமோ, அவ்வளவும் நமக்கு நல்லது. வெளித் தோற்றங்கள் எப்படியிருப்பினும், உள்நாட்டம் எல்லாம் நமக்கே நல்லது முக்கியமாக வேண்டிய அம்சங்கள் சில உண்டு: இராஜாங்க நிர்வாஹசத்தியில் திடநம்பிக்கை வேண்டும். நம்பிக்கையில்லாமைக்குக் காரணமுங் கிடையாது. ஆங்கிலேயரது நாவாய்ப் படையே இந்த யுத்தத்தை முடிக்கப்போவது. அதுஇருக்கும்வரை பயத்திற்குச் சிறிது மிடமில்லை. சண்டையிற் கலவாத நாட்டார் பக்ஷபாத மில்லாமல் சொல்லுவதால், வரவர நமது துருப்பின் சங்கியை ஜர்மானிய நாட்டாரது சங்கியையைக் காட்டிலும் விருத்தியாகிக்கொண்டே வருகிறதாகத் தெரிகிறது. அவரது சேனைக்குச் சண்டைசெய்ய நாட்டிலிருந்தே ஆட்களைத் தேர்ந்தெடுக்க வேண்டியிருக்கிறது. நமது துருப்பிற்கோ, போர்க்களங்கள் அல்லாத நாடுகளிடமிருந்தும் ஆட்கள் சேகரிக்கப்படுகின்றன. ஆனகயினல் 1916-ம் வருஷ முழுதும் சண்டை செய்யும்படி நேர்ந்தால், ஜர்மனி இருக்குமிடந்தெரியா தழிந்துபோகும்; ஜயம் நமதுதான். ஆனல், முன்போல் எதிரியின் பலத்தை அலக்ஷயஞ் செய்யாமல், அதையும் எண்ணிக் கருமம் துணியவேண்டும். அவ்வாறு நடக்க, எம்பெருமான் அருள் புரிவா ரென்பது நிச்சயம். இராவணதியர் கொலையுண்ட கதை நமக்குப் புதிதல்லவே! கொடுமையை யழித்தல், அவ்வளவு ஸுலபமான வேலையல்லத்தான். அடியடியாகத்தான் தொலைக்கவேண்டும். நம்பிக்கையுடனும், வைராக்யத்துடனும், உத்ஸாகத்துடனும் முயற்சிசெய்தால் பலன் நம்மதே. அதற்குத் தக்கவாறு நாமும் நம்மால் எவ்வளவு செய்ய வேண்டுமோ அவ்வளவும் செய்வோமாக!

***

அலுவல்மிக்க டிஸம்பர் மாதம் அகன்று விட்டது! வழக்கம்போலிருக்க வேண்டிய சென்னை பார்க வேடிக்கை, எப்போதைக் காட்டிலும் சிறந்து ஓங்கியது. அதன் வரும்படியை யுத்தநிதிக்குச்சேர்க்கச்செய்த ஏற்பாடுகள் அத்யத்புதமானவை. அதனுடன் ஏற்படுத்தப்பட்ட சென்னைப் பெரும் பொருட்காட்சி மிகச் சிறந்தது; யாவருங்

கண்டிருக்க வேண்டியது. வீடு கட்டவேண்டிய முறை, சாகுபடியின் விஷயங்கள், பட்டுப்பூச்சியை வளர்த்தல், துணி நெய்தல், சோப் செய்தல், இது முதலிய விஷயங்களைப்பற்றிய விபரங்கள் நன்கு காட்டப்பட்டதுடன் எதிருக்கெதிராகக் கண்டுணரும்படி போதனையுடன் விளங்கின. நெல் அறைக்கும் எந்திரம், தேக்கமரத்தால் செய்த சிறுவீடு, தந்தத்தால் செய்யப்பட்ட விஜயநகரத்தரசரது வாஸனைப்பெட்டி இவைகளெல்லாம் அத்யத்புதமானவை என்று நாம் சொல்லவேண்டாம். உத்ஸாகத்துடனும், உண்மை மனத்தோடும் ஏற்படுத்திய ஏற்பாடுகள் மிகச் சிறந்தவை. அதிலும், தாமாகவே வந்து, வாலண்டியர்களாக உழைத்த கவர்ன்மெண்ட் உத்யோகஸ்தர்களின் பெருமையையும் நாமெடுத்துரைக்க வேண்டியதில்லை. மதராஸ் பார்க் வேடிக்கை, பெரும் பொருட்காட்சி, இரண்டிலுமாக ஒரு லக்ஷரூபா சேர்த்து யுத்த நிதிக்குச் சேர்ப்பிக்க வேண்டுமென ஏற்பாடு செய்தவர்களுடைய அபிப்பிராயம் நடந்தேறியிருக்குமென நம்புகிறோம்.

***

ஏழாவது ஆயுர்வேத மஹாநாடு நமது நகரத்தில் வெகு விமரிசையாக நடந்தேறியது. அநீதி என்றெண்ணும்படியாக, மதராஸ் மெடிகல் போர்டாரால், வைத்யர் பட்டியிலிருந்து டாக்டர் கிருஷ்ணஸ்வாமி அய்யரவர்களுடைய பேர் ஆறுமாதம் வரை நீக்கப்பட்டது, இதற்கின்னும் பெருமியக்கம் கொடுத்ததுபோலும். டாக்டர் ஸர் ஸுப்ரஹ்மண்ய அய்யர் அவர்களுடைய வரவேற்பு மொழிகள், ஆயுர்வேதத்தின் முற்காலப் பெருமையைப்பற்றியே யிருந்தன. அக்ராஸநாதிபதியாகிய கவிராஜ ஜேய்மினி பூஷணராய், ஆங்கில, ஆரிய வைத்யமிரண்டையு முணர்ந்தவர். அவர் ஆயுர்வேத மஹிமையை விரித்துரைத்து, அது நமது கவனமின்மையாலும், ராஜபோஷணையின்மையாலும் குன்றி விளங்குகிறதென்றும், இப்பொழுது பலவிதங்களாகக் கருதப்படும் மேல்நாட்டாரது வைத்ய வழிகள் முழுதும் நமது ஆயுர்வேதத்திலிருந்தே எடுக்கப்பட்டன வென்றும், உலகத்தில் வழிபடும் வைத்யமுறை யாவும் ஆயுர்வேதத்தில் அடக்கம் என்றும் சொன்னார். மங்கி விளங்கும் நமது வைத்ய முறையைப் பொலியும்படிச் செய்ய, நாம் உழைக்க வேண்டுமென்றும், நமது அஜாக்ரதையால் இடை இடையே உண்டாகிய தவறுகளை நீக்கி எங்கும் வைத்யசாலைகள் வைத்துப் படிப்பித்து வைத்தியஞ்செய்யும்படிச் செய்ய வேண்டுமென்றும், அதற்குத் தக்கவாறு நமது ஜனங்கள் உத்ஸாகத்துடன் நடந்து கொள்ளவேண்டுமென்றும், ஆயுர்வேத புத்தகசாலைகளும், பத்திரிகைகளும் தோன்றி விளங்க வேண்டுமென்றும் எடுத்துரைத்தார். மேலும், கிருஷ்ணஸ்வாமீ அய்யர் விஷயமாக நடந்த தவறை ரத்துசெய்யும்படிச் செய்யவேண்டுமென்றுந் தூண்டினார். கவர்ன்மெண்டார் இதற்கு உதவி செய்வாரென்பதற்குக் கனம் கார்டியூ அவர்களின் அபிப்பிராயமே சாட்சி.

வீண்பேச்சுக்களோடு போகாமல், ஆயுர்வேதக்காட்சியொன்று இதனுடன் ஏற்பட்டது யாவர்க்கும் ஸந்தோஷமாயிருக்கும். அதில் வைத்திய ஆயுதங்களும், மற்றும் வேறு வைத்திய விஷயமான பொருள்களும் காட்டப்பட்டன; வைத்தியவிஷயமாக எழுதப்பட்ட வியாஸங்களைப் பரிசீலனஞ்செய்து பரிசுகளும் அளிக்கப்பட்டன. இதில் பெண்பாலார் ஒருத்தி பரிசுபெற்றது எமக்குச் சந்தோஷம்.

***

இந்திய மஹா நாட்டின் முப்பதாவது பெருங்கூட்டம், இவ்வருஷம், பம்பாய் நகரத்தில் கூடியது. எந்த வருஷத்தைக் காட்டிலும் தேர்ந்தெடுக்கப்பட்டவர் வரவு அதிகம்; விமரிசையுஞ் சிறந்தது. உபசார முறைக்க வந்த கனம் வாச்சா அவர்கள், போர்முனைக்கு நம்மாட்களைத் தாராளமாக அனுப்ப வேண்டுமென்று பேசியதோடு, சுய ஆட்சி, இந்திய சீர்திருத்தங்கள் இவைகளைப்பற்றிப்பேசி, வந்தவர்களை வரவேற்றனர். அக்கிராஸனாதிபதியாகிய கனம் ஸர் ஸத்யேந்த்ர பிரஸந்ந ஸிமஹா அவர்கள், வெகு ஆழத்துடன் கூறிய புத்திகள் யாவரும் கொள்வார்கள் என்பது நிச்சயம். சுய ஆட்சியைப் பற்றி அவர் பேசியது பின்வருமாறு:—

"யூனைடெட்ஸ்டேட்ஸ் தேசத்துக் குடியரசின் தலைவராயிருந்தலிங்கன் என்பவர் கூறிய வாறு ஜனங்கள் ஜனங்களால் ஜனங்களுக்காக ஆளப்படுவதாகிய சுய ஆட்சியே, நமது லக்ஷ்யம். இப்படிச் சொல்வதால் நம்மைப் பலநாளாக ஆண்டுவரும் ஆங்கிலேயராஜாங்கமே சிறந்ததென்பதை யறியாதவனல்ல. சற்று ஆலோசித்தால், ஆங்கிலேய ராஜாங்கத்தால் நமக்குண்டான நன்மைகள் விளங்கும். ஆனாலும், 'எவ்வளவு நல்ல ராஜாங்கமாக விருந்தாலும், அந்நிய ஆட்சி சுயஆட்சிக்கு ஈடாகாது' என்று நமது முதல்மந்திரியார் கூறியுள்ளார். 'சுவர்க்கத்திலிருந்து தெய்வம் வந்தாண்டாலும் தன் தேசச்சட்டங்களைச்செய்யத் தனக்குள்ள பாத்யதையை எந்த ஆங்கிலேயனும் விடமாட்டான்; அப்படி ஸம்மதிக்கவு மாட்டான். அவ்வாறு விட்டுவிட்டுப் பின் வயலையும் வாய்க்காலையுங் காண அவன்மனமெழும்புமா?' தம்மையடக்க ஆளில்லாமல் ஆளுமரசர் எத்தனையோ பேர்கள் நன்மையுண்டாகும்படி ஆண்டிருக்கின்றனர். ஆயினும், பிரஜாபத்தியத்திலுண்டாகும்புத்திகூர்மையும் நன்னடக்கையும், அபிவிருத்தியும் அவர்கள் ஆண்ட காலத்தில் உண்டானதில்லை. தனக்குத்தானே விழுந்து எழுவதைக் காட்டிலும் மேலான உதவி மனிதனுக்குச் சாஸ்திரங்களாலும் பெறமுடியாது. ஆகையால் சுய ஆட்சியை விரும்புவது அபிமானத்தை மேற் கொண்டல்ல; தேச சரித்திரங்களைப் படித்தறிந்த ஞானத்தின் பயனே ஆகும்".

இவ்வாறு பேசியதன்றி, இராஜாங்கத்தாருக்கும் நோக்கமதுவேதான் என்றும் சித்தாந்தஞ் செய்த பிறகு, மேற்சொல்லிய லக்ஷியத்தை மூன்று வழியிலடையலாம் என்றார். அவையாவன:— (1) அந்த லக்ஷியத்தை இராஜாங்கத்தார் தாமாகவே கொடுத்தல்; (2) மேற்படி லக்ஷியத்தை நாம் கவர்ந்துகொள்ளல்; அல்லது (3) நம்முடைய புத்தி, நடை, செயல் இவைகளால் மேலோங்கி, சுய ஆட்சிக்குத் தக்க பாத்திரமாகி இனி கொடுக்காம லிருக்கமுடியாதென்ற எண்ணத்தை ஆள்பவர் மனத்தில் மூட்டிப்பெறல் தத்காலம் நமக்குச் சுய ஆட்சி கொடுப்பது, பிஞ்சில் பழுத்துப் பழுதாவதாகும், எட்டுச் சுரைக்காய்போல் உதவாது போகும்; இரண்டாவது வழி, முடியாததாகும்; மூன்றாவது வழி, அனுபவ ஞானத்தை ஒட்டியிருப்பதால் நன்மைக் கிடந்தரும்; அதற்குத்தக்கவாறு நாம் இந்திய சீர்திருத்தங்களை விரும்ப வேண்டுமென்றும் கூறினர். ஆனால் அதி அவசரமாகச் செய்யப்பட வேண்டிய சீர்திருத்தங்கள் மூன்றுள்ளன வென்று வற்புறுத்தினர். அவைகளாவன:—

(1) ராணுவத்தில் நம்மவர் உத்தியோகப் பதவிகளைப் பெறல்; ஜனங்களை ராணுவப் பயிற்சியிற் பயிற்றல்:

(2) ஸ்தல ஆட்சியை விசாலப்படுத்தல்:

(3) நம்முடைய வியாபாரம், கைத்தொழில், விவசாயம் இவற்றை விருத்திசெய்தல்.

பிறகு வழக்கம்போல் செய்யவேண்டிய ஒழுக்கங்களைப்பற்றிப் பேசினர். இந்த மஹாநாட்டின் முடிவில், முன் ஸூரத்தில் பிரிந்த மஹாநாட்டை ஒன்றுபடுத்த ஏற்பாடுகள் செய்யப்பட்டன; வரும் வருஷம் லக்ஷ்மணபுரத்தில் (Lucknow) பொதுஜன சங்கமாக, ஒன்றுகூடிய அபிப்பிராய மந்திரமாக அது கூடும் என ஸந்தோஷப்படுகிறோம்.

* * *

இந்தியத் தொழில் ஆலோசனை சங்கம்.—இதன் பதினோராவது கூட்டம் பம்பாயில் கூடியது. சிறிய கைத்தொழில்கள் பல ஏற்படுத்தப்படவேண்டுமென்றும், ஆங்கில வியாபாரிகள் இருக்குமிடங்களில் இந்திய வியாபாரத்தைக் கவனிக்கக் கமிட்டிகள் நியமிக்கப்படவேண்டியதென்றும், ராஜாங்கத்திற்கு வேண்டிய பொருள் யாவும் கூடியவரை இந்நாட்டிலிருந்தே வாங்கும்படி வற்புறுத்த வேண்டுமென்றும், இராஜதானிப் பட்டணங்களில் வியாபார இலாகாத் தலைவர்களால் பொருட்காட்சிகளை ஏற்படுத்தும்படி ராஜாங்கத்தாரை கேட்டுக்கொள்ள வேண்டு மென்றும், தொழில் விஷயமான பாங்கிகளை ஏற்படுத்தி, ஐக்கிய நாணய நிதிகள்போல், அவை கைத்தொழில் விஷயங்களிற் குதவிசெய்ய வேண்டுமென்றும் தீர்மானிக்கப்பட்டன. அக்கிராஸனதிபதியார் ஸக்சி என்ற ஊரில்

ஏற்பட்டிருக்கும் டாடா தொழிற்சாலையின் மேல்பார்வை பார்ப்பவர்க்கு ராஜப்ரதிநிதியாரின் சம்பளத்தைக் காட்டிலும் அதிகமாகக்கொடுக்கப்படுகிற தென்றும், தொழில் விருத்தியால் அந்த நிலைமைக்கு ஒவ்வொருவரும் வரலாமென்றும் எச்சரித்தார். தொழில் விருத்திக்கேற்ப நடக்க வேண்டுமென்று நமது ஜனங்களுக்குச் சொல்ல வேண்டுமோ?

அநேக ஸபைகள் வழக்கம்போல் கூடினவாயினும், சில புதிதாகத் தோன்றி விளங்குவதெமக்குச் சந்தோஷம். முக்கியமானவை இரண்டு. இந்திய வியாபார ஜன ஸங்கம அதில் ஒன்று. முதல் தடவையாக வியாபாரத் தலைநகராய பம்பாயில் அது கூடியது. இந்தியாவிலுள்ள எல்லா இந்திய வியாபாரச் சங்கங்களும் ஒற்றுமைப்பட்ட சங்கம் ஒன்று ஏற்படுத்தவேண்டுமென்றும் அச்சங்கத்தின் பிரதிநிதிகள் இந்திய வியாபாரத்தை எவ்வாறு உயர்த்தலாமென்று யோசித்து வியாபாரவிஷயங்களைத் தெரியப்படுத்தும்படிக்கும், இந்திய வியாபாரங்களின் குறைகளை ராஜாங்கத்தார்க்குத் தெரிவிக்கவும் இருக்கவேண்டிய தென்றும் தீர்மானிக்கப் பட்டது. ரயில்மார்க்கமாக அனுப்பப்படும் பொருள்களுக்கு விதிக்கப்படும் கட்டணத்தின் தாரதம்மியத்தைராஜாங்கத்தார் கவனிக்க வேண்டுமென்றும், சாராயத்தைக்கொண்டு செய்யப்படும் தொழில்களுக்கு வரி விதித்திருப்பது இந்தியக் கைத்தொழில்களின் விருத்திக்கு மிகத் தடங்கலாய் இருக்கிறதென்றும், வியவசாயிகளுக்குச் செலவு குறைவாயும் ஸௌகர்யமாயுமுள்ள இடங்களில் கிணறுகளின் மூலமாக ஸாகுபடி செய்வதை ராஜாங்கத்தார் மேலோங்கிப் பரவும்படிச் செய்யவேண்டுமென்றும் தீர்மானிக்கப்பட்டன. ஒத்துழைத்தால் பலனில்லாமல் போகுமா? வியாபார விருத்தி தேச விருத்தியல்லவா? இச்சங்கம் என்றும் வாழ்ந்து நமது வியாபார விருத்தி மேலோங்கும்படியான புத்தியைப் புகட்டுமாக!

முதல் முதலாக, இவ்வருஷம் கூடியதாகச் சொல்லப்பட்ட ஸபைகளில் இரண்டாவது, இந்தியப் பத்திராதிபர் சங்கம். இச்சங்கத்தின் காரியங்கள், இந்திய மஹா நாடுப் பந்தலிலேயே நடந்தேறின. கனம் பண்டித ஸ்ரீ மதன் மோஹன மாளவியா அக்கிராஸனம் வகித்தார். இச்சபையில் செய்யப்பட்ட தீர்மானங்கள் பின்வருமாறு:—

(1) கொடுமையான விதிகளிலிருந்து பத்திரிகைகளைக் காக்க ஒருவர்க்கொருவர் உதவவும், முழு இந்தியாவிலுமுள்ள பத்திராதிபர்கள், பத்திரிகைகளின் சொந்தக்காரர்கள், அச்சுக்கூடத்தலைவர்கள், சொந்தக்காரர்கள் கூடிய இந்தியப பத்திராதிபர் சங்கம ஒன்றை ஏற்படுத்தல். (2) சங்கத்தின் விதிகளை ஆலோசித்து முடிவுசெய்ய 40 பேர் அடங்கிய கமிட்டி ஒன்று தயாரிக்கப்பட்டது. (3) 1910-ம் வருஷத்திய அச்சுச்சட்டத்தை ரத்துசெய்ய ஒரு வேண்டுகோளை மேற்சொன்ன கமிட்டியார் தயாரித்தல். இவ்வியக்கம் இந்தியப் பத்திரிகைகளின் கஷ்டங்களைப் போக்க ஒரு நல்ல வழி என்றே நம்புகிறோம்.

இந்திய ஆசார சீர்திருத்த சங்கமென உலாவும் மஹாநாடு, 29-ம் முறை பம்பாயில் காங்கிரஸ் பந்தலிலேயே கூடிற்று. ஸர் நாராயண சந்த்ரவர்க்கர், வந்தவரை வரவேற்றனர். அப்பொழுது ஜாதிபேதத்தால் வரும் தீங்குகளைப் பற்றிப் பேசி அவ்வாறு பேதமில்லாமல் சாப்பாடும் கலியாணமும் நடக்கவேண்டுமென்று கூறினர். அக்கிராஸனாதிபதியாகிய ஸ்ரீகார்வே, மேற்சொன்ன விஷயங்களன்றி பெண் கல்வி வேண்டுமென்றும், விதவா விவாஹம், சமைந்தபின் விவாஹம், இவை அவசியம் என்றும், கோஷா ஏற்பாடுகளை வேரறுக்க வேண்டுமென்றும், தாழ்ந்த ஜாதியாரை மதித்துயர்த்த வேண்டுமென்றும், வயது அடையாப் பெண்களைக் காக்க வேண்டுமென்றும், ஆசாரசுத்தம் ஏற்பட வேண்டுமென்றும்,ஒப்பந்தக்கூலிகள் வெளிநாட்டிற்கேகுதலைத் தடுக்கவேண்டுமென்றும் பேசினர். எல்லாம் ஸரிதான். சிலவிஷயங்களில் காலத்தின் போக்கை கவனித்தாரில்லை போலும்! அடித்துப் பழம் பழுத்த தெங்கேனுமுண்டா?

இந்திய மது விலக்கு போது ஸங்கம்.— இது பனிரெண்டாவது முறை சென்ற

மார்கழிமீ 15வ பம்பாயிற் கூடிற்று. அக்கிராஸனம் வஹித்த ஐக்கியமாகாணத்திய கனம் ராய் பஹதூர் முன்ஷி கோகுல் பிரஸாத் அவர்கள் மதுவிலக்கிற் கென்ன வென்ன செய்ய வேண்டுமோ அவ்வளவும் செய்ய வேண்டு மென்றும், சிறுவர்களது பாட புத்தகத்தில் மதுவிலக்கைப்பற்றிய பாடங்களைச் சேர்க்கும்படியும், பட்டணங்களில் இருக்கும் சாராயக்கடைகளை அப்புறப்படுத்தவும், உத்ஸவ முதலிய ஜனஸங்ககாலங்களில் சாராய விற்பனையைத் தடுக்கும்படியும், சாராயக்கடைகளில் குடிக்க இடம் கொடாது, முத்திரித்த ஸீஸாக்களில் சாராயம் விற்கச் செய்யவும், குடிக்குற்றங்களைக் குறைக்கவும், லைஸென்ஸ் கொடுக்குமதிகாரத்தை வருமான இலாகாவிலிருந்து பிரிக்கவும், கடைகளை ஏலத்தில் விடும் வழக்கத்தை நீக்கவும், சாராய விற்பனையைக் குறைக்கவும் ஏற்பாடுகள் செய்ய ராஜாங்கத்தார் கவலைகொள்ள வேண்டுமென்று பேசினர். அவ்வாறே தீர்மானிக்கப்பட்டது. குடியால் வருங்கேட்டை யொழிக்கும் பாக்கியம், ராஜாங்கத்திற்கு லேசாக முடியும்: நாமும் அம்முயற்சியை விடாமல் கைக்கொள்வோமாக!

***

எல்லா இந்திய ஹிந்து மஹா ஸபையின் இரண்டாவது கூட்டம் பம்பாயில் கனம் பண்டித ஸ்ரீமதன் மோஹன் மாளவ்யரின் அக்ராஸனத்தின்கீழ்க் கூடியது. வரவேற்புமொழிகளுரைத்த ஸர்பாலசந்த்ர கிருஷ்ண அவர்கள் ஹிந்து மதஸ்தருக்கும் அன்னிய மதஸ்தருக்கும் மனஸ்தாபமில்லாமையும் ஒற்றுமையும் இன்றியமையாதவென நன்கு விளக்கினர். அக்ராஸனாதிபதியும் ஹிந்து மதத்தைச் சீர்திருத்தி, முன்னிருந்த உந்நத நிலையைப் பெறும்படிச் செய்து, அம்மதத்தை உறுதிப்படுத்த ஒழுகவேண்டியது ஒவ்வொரு ஹிந்துவிற்கும் கடமை என்றார். பின் ஸபையின் வியவகாரங்களில், மாகாணப் பிரிவுகளில் ஹிந்து ஸபைகள் ஏற்பட வேண்டுமென்றும், அவைகளில் ஸநாதன தர்மக்கோட்பாடுகளையாவது, வேறு ஹிந்து ஸித்தாந்தங்களையாவது புகட்டித், தமக்குள் ஒற்றுமையும் ஐக்கியமும் ஓங்கவும், அஜ்ஜாதியின் குறைகளை விசாரிக்கவும் இடமிருக்கும்படித் தீர்மானிக்கப்பட்டன. ஹிந்துக்கள் மற்ற ஜனங்களிடம் நேசத்தோடும் ஐக்கியத்தோடு முழைத்தலே தேசத்திற்கு க்ஷேமம் என்றும் தீர்மானம் செய்யப்பட்டது. தை பிறந்தால் வழிபிறக்குமென்றுவலாய் இருப்பதுபோல், யாவரும் மேல்நோக்கத்தை நடத்தையிற் கொண்டுவர ஆவலாயிருப்பார்களென்னும் நம்பிக்கைக்கு அடிசருக்கவும் காரணமுண்டோ ?

***

எல்லா இந்திய முஸ்லீம் லீக்.—இதன் 8-வது கூட்டம் பம்பாயிற் செவ்வனே நடந்தது. பார்க்கவந்தவர் செய்த அக்ரமம் பொறுக்க முடியாது, தமது பதவியைப் போலீசாரைத் தருவித்துக் குறைத்துக்கொள்ளக் கூடாதென்று, ஷெ லீக்கின் மெம்பர்கள் மாத்திரம் தாஜ்மஹாலில் கூடினர்கள். அக்ராஸனாதிபதியாகிய மஷ்ரல் ஹக் என்பவர் செய்த உபந்யாஸம் மெச்சத்தக்கது. ஹிந்து மஹம்மதிய விவாதம் இருக்கக் கூடாதென்றும், இருப்பனவற்றை ஒழிக்க இடம் பார்க்கவேண்டுமென்றும், இராஜாங்கத்தில் வரவர உயர்ந்த பதவியை ஐரோப்பியர்க்குச் சமமாகத் தமக்குக் கொடுக்க வேண்டுமென்றும், ராணுவப் படைகளில் உத்தியோகம் தம்மவர்க்குக் கொடுக்கவேண்டுமென்றும், அவர் வற்புறுத்தினர். வரி முதலியவைகளைக் குறைக்க வேண்டுமென்றுங் கூறினர்.

***

முஸ்லீம் கல்விச் சபையின் அக்ராஸனாதிபதியாக கனம் அப்துர் ரஹீம் அவர்கள் பேசியமொழிகள் மஹம்மதியர்க்கேயன்றி யாவர்க்கும் சிக்ஷைசெய்ய நற்பலன் தரும். இதைப் பற்றிப் பின் விவரித்தெழுதுவோம். இன்னும் பல ஸபைகள் சென்ற மாதங்கூடி, பம்பாய் நகரத்தைக் குதூகலத்தில் ஆழ்த்தின. தென் இந்தியாவிலும், அகோபில மடத்து சிஷ்யஸபை, தென்னிந்திய தமிழ் வைத்திய சங்கம் முதலியன கூடின. நிற்க, மேற்சொன்ன ஒவ்வொரு ஸபையிலும் ஜனங்கள் நமது இப்போதிய கவர்னர் ஜனரலாகிய லார்ட் ஹார்டிஞ் பிரபுவின் இராஜப்பிரதிநிதித்வ காலத்தை

நீடிக்கும்படிச் செய்யவேண்டுமென்று வெளியிட்ட அபிப்பிராயமெங்குங் கோஷித்துக்கொண்டிருக்க, அவ்வாறின்றி அவர்க்குப் பதிலாக, ஆஸ்ட்ரேலியாவில் ஒரு பாகத்திற்குக் கவர்னராயிருந்த செம்ஸ்போர்ட் பிரபு என்பவர், வரும் எப்ரல்மீ முதல் இந்திய ராஜப் பிரதிநிதியாக ஏற்படுத்தப்பட்டது மனதைச் சிறிது சஞ்சலப்படுத்தலாம். ஆயினும், எங்கும் ஒரே விதமாகவும், இந்தியரிடம் புத்ர வாத்ஸல்யத்துடன், தாய்போல் நடந்துகொண்ட ஹார்டிஞ் பிரபுவின் நெறியைக் கடைப்பிடித்து இனிவரும் இராஜப்பிரதிநிதியார் நடந்துகொள்வார் என்று யார் விரும்பார்? ஹார்டிஞ் பிரபுவின் குணமும் பெருமையும் பல நற்குணமும் அளவிலடங்கா; இவர் உருவம் யாவர் மனத்திலும் அழுந்தியுள்ளது; அவர் தமது நாட்டைச்சேரினும், இந்தியரது மனம் அவரைப் பின்பற்றித் துணையாகும். அவர் நீடூழிவாழ்க! நமது புதிய கவர்னர் ஜனரலவர்கள் ஆதரவுடன் ஆள இந்தியர் வரவேற்கின்றோம். கடவுள் அவர்க்கு நல்ல மனமும், ஸத்யநிலையையும் கொடுத்து, நமது ஆளுகை அவர்க்கோர் ஆநந்தமாகவும் நமக்குப் பேரன்பாகவும் விளங்கச் செய்வாரெனப் பிரார்த்திக்கின்றோம். சுபம்!

---

ஸ்ரீகாசி ஹிந்து யூனிவர்ஸிடி.—இதற்காக கங்காநதிதீரத்திலே கட்டப்படும் கட்டிடத்திற்கு பிப்ரவரிமீ 4உ அஸ்திவாரக்கல் நாட்டும் வைபவச் சிறப்பு, நமதன்பார்ந்த ராஜப் பிரதிநிதியவர்களதாகும். அம்மஹோத்ஸவம் மிகச் சிறப்பாய் நடந்தேறுமென்பதற்கு, அச்சமயம் வரப்போகும் மாகாண கவர்னர்கள், லெப்டினண்ட் கவர்னர்கள், தேச மன்னர்கள், பல இந்திய பிரமுகர்களும், அச்சுபதினத்திற்குப் பின் 4,5 நாட்கள் தக்கவர்களால் நடைபெறப் போகும் அருமைப் பிரசங்கங்களும் சுபசூசகங்களாகவே இருக்கின்றன. நமது ராஜப்பிரதிநிதியவர்களும் அடுத்த மாதத்தில் இந்தியாவை விட்டுப்போகவிருப்பதால், ஷை சுபதினத்தன்று எல்லோரும் ஏகோபித்து அவர்க்கு ஆசிகூறி நம் நன்றியறிதலைத் தெரிவிக்கத் தகுந்த சமயமும் அதுவே யாகும்.

# விசேஷக் குறிப்புகள்

## NEWS AND NOTES

ஸர் சயித் ஆலி இமாம்.—இந்தியா கவர்ன்மெண்டில் சட்ட மெம்பராயிருந்து வந்த இவர், தம் ஸ்தானத்தைவிட்டுவிட்டுச் சீமைக்குச் சென்றிருக்கிறார். இவருக்குப் பதிலாக மிஸ்டர் லௌண்டீஸ் அந்த ஸ்தானத்தை வகித்து வேலை பார்த்து வருகிறார்.

***

பஞ்சாயத்து சபைகள்.—பம்பாய் மாகாணத்திலுள்ள ஆண்டு சமஸ்தானத் தலைவர் தமது சமஸ்தானத்தில் பஞ்சாயத்து சபைகளை ஏற்படுத்துவதற்கு வேண்டிய ஏற்பாடுகளைச் செய்து வருவது தேச நன்மைக்குரிய காரியமே யாகும்.

***

சென்னை அட்வோகேட் ஜனரல்.—மிஸ்டர் F. H. M. கார்பெட் ரஜா வெடுத்துக்கொண்டு தம் ஜன்மதேசம் போயிருக்கிறார். அவர் ஸ்தானத்தில், ஹைகோர்ட் வக்கீல்களுள் ப்ராபல்யஸ்தரும், பொது விஷயங்களில் அக்கரை காட்டிவருபவருமான ஸ்ரீமான் S. சீனிவாஸய்யங்கார் அவர்கள் நியமிக்கப்பட்டிருப்பதைக்கேட்டு மிகவும் சந்தோஷிக்கிறோம்.

***

1913-14-ம் ௵ வெளி நாடுகளிலிருந்து இறக்குமதியான சாமான்கள்:—

| | |
|---|---|
| பெப்பர்மண்ட் தினுசுகள் | 26,33,000 |
| டப்பிகளிலும், சீசாக்களிலும் அடைத்த பதார்த்தங்கள் | 56,69,000 |
| கட்டிப்பால், வகைரா | 41,52,000 |
| பிஸ்கோத்துகள் | 44,81,000 |
| காகிதங்கள், அட்டைகள் | 1,58,77,000 |
| வளையல்கள் | 80,45,000 |
| புட்டிகள் | 21,93,000 |
| தகடுகள், தட்டுகள் | 22,35,000 |
| புனல்களும், குளோப்புகளும் | 17,93,000 |
| சோப் தினுசுகள் | 75,06,000 |
| பூட்ஸுகளும், செருப்புகளும் | 79,26,000 |
| எழுதுவதற்கான சாமான்கள் | 69,98,000 |
| குடைகள் | 53,10,000 |
| விளையாட்டு சாமான்கள் | 44,17,000 |
| கத்தி முதலியன | 28,33,000 |
| பதனிட்ட தோல்கள் | 15,27,000 |

# ராக்ஷஸஹூ மாசிமீ CALENDAR—பஞ்சாங்கம்

| யோ | தஜ | இங் | தமிழ் | வார | ராக்ஷஸஹூ மாசிமு { சாலிசகம் 1837 கலியப்தம் 5016 } பசலி 1325 கோல்லம்-1091 { ஹிஜரி 1334 } 1916 ஹூ பிப்ரவரிமு மார்ச்சுமு |
|---|---|---|---|---|---|
| | 8 | 13 | 1 | ஞா | தச 43-38, ரோ 4-21, வை 32-19, தை 11-7, திவி 19-50, அக 29-6, கும்ப சு தசமிதிதி வை சிரா ஸமார்கம். [விரு. |
| செ | 9 | 14 | 2 | திங் | ஏகா 48-55, மிரு 10-42, விஷ் 33-35, வணி 16-16, ரா 4-47. ஆயி 2 வக்செ 27-18, ப்ரீஷ்மஏகா சர்வ ஏகா திலபத்ம |
| ரபுசு | 10 | 15 | 3 | செ | துவா 54-0, திரு 17-6, பிரி 34-46, பவ 21-27, ரா 20-58, அவி 4 ரவி 47-56, உத்தி 4 ரிசுபுத 7-0, உத்தி 2 சுக் |
| | 11 | 16 | 4 | புத | திர 58-39, புன 23-10, ஆயு 35-39, கௌ 26-19, ரா 15-49, பிரதோ கல்பாதி. [12-24, ப்ரீமத்துவா ஸோபபத. |
| சு | 12 | 17 | 5 | வியா | சது 60-0, பூச 28-36, ஸௌ 35-58, கர 29-19, தியா 0-0, அக 29-10, உத் 3 சுக் 55-36. |
| | 13 | 18 | 6 | வெ | சது 2-21, ஆயி 33-0, சோ 35-31, வணி 2-21, திவி 2-57, ஆ கா மா வை மழை 9-க்குள். |
| ரபு | 14 | 19 | 7 | சனி | ◯ பௌ 4-56, மக 36-24, அதி 34-7, பவ 4-56, திவி 4-42, ரா 27-50, சத 1 ரவி 5-28, திரு 1 புத 50-0, மாக ஸ்கா பூர் இஷ்டி மாசிமகம். |
| சு | 15 | 20 | 8 | ஞா | பிர 6-13, பூர 38-28, சுக 31-44, கௌ 6-13, சே 1-5, ரா 27-28, மாகபகு மீனய 28-54, உத் 4 சுக் 50-25 |
| பு | 16 | 21 | 9 | திங் | துதி 6-12, உத்தி 39-19, திரு 28-23, கர 6-12, சே 0-43, அக 29-15, திரு 2 புத 0-6 |
| ர | 17 | 22 | 10 | செ | திரு 4-59, அஸ் 39-1, சூல 24-7, பத் 4-59, திவி 0-13, ரா 29-16, சத 2 ரவி 23-27, சங் சது. |
| செசு ரா] | 18 | 23 | 11 | புத | சது 2-32, பஞ் 56-33, சித் 37-35, கண் 18-57, பா 2-32, சே 2-32, ரா 21-46, ஆயி 1 வக்செ 3-32. ரேவ 1 சுக் 30-30, திரு 1 ராகு பூச 3 கேது 36-46. |
| | 19 | 24 | 12 | வியா | சஷ் 51-53, சுவா 35-19, விர் 12-59, கர 25-59, ரா 19-18, மழை 4-க்குள். [60-0, உத்தி 3 குரு 10-0. |
| ரபுகு | 20 | 25 | 13 | வெ | சப் 48-50, விசா 32-16, துரு 6-27, வியா 52-55 பத் 21-51, ரா 12-22, அக 29-20, சத 3 ரவி 41-51, திரு 3 புத |
| சு | 21 | 26 | 14 | சனி | அஷ் 44-28, அனு 28-42, ஹர் 51-53, பா 16-36, ரா 12-28, ரேவ 2 சுக் 25-28, காளாஷ்டமி திஸ்ரோஷ்டகா. |
| | 22 | 27 | 15 | ஞா | நவ 38-38, கேட் 24-49, வஜ் 44-10, தை 11-30, ரா 14-6, கரிநாள். |
| பு | 23 | 28 | 16 | திங் | தச 32-49, மூல 20-44, ஸித் 36-33, வணி 5-42, திவி 16-44, ரா 13-41, திரு 4 புத 32-0, கரிநாள். |
| ரசு | 24 | 29 | 17 | செ | ஏகா 26-57, பூரா 16-40, விய 28-40, பா 26-57, ரா 5-58, அக 29-25, சத 4 ரவி 0-14, ரேவ 3 சுக் 3-24, ஏகாதிதி சர்வ ஏகா விய சிரா கரிநாள். |
| | 25 | 1 | 18 | புத | துவா 21-24, உத்தி 12-50, வரி 21-12, தை 21-24, திவி 22-16, திதித்வயம் பிரதோ சிர உப சிரவணத்துவா. |
| புசு | 26 | 2 | 19 | வியா | திர 16-23, திரு 9-29, பரி 14-13, வணி 16-23, திவி 19-4, அவி 1 புத 2-1, ரேவ 4 சுக் 56-30, சதுர்தசிதிதி மகாசிவராத்திரி. [பரயுகாதிதி. |
| ர | 27 | 3 | 20 | வெ | சது 12-2, அவி 7-0, சிவ 7-38, சகு 12-2, திவி 24-21, பூரட் 1 ரவி 19-54, சர்வ அமா துவா |
| பு | 28 | 4 | 21 | சனி | ● அமா 8-28, சத 4-51, சித் 1-43, சா 54-48, நா 8-28, திவி 20-35, அக 29-30, அவி 2 புத 16-8, பிண்டபிய இஷ்டி. |
| சு | 29 | 5 | 22 | ஞா | பிர 5-52, பூரட் 3-51, சுப 52-20, பவ 5-52, திவி 27-55, பால்கு சுத் மேஷசுக் 48-0, சங் தரி. |
| ரபு | 1 | 6 | 23 | திங் | துதி 4-29, உத்தி 4-2, சுப் 49-9, கௌ 4-29, ரா 5-5, பூரட் 2 ரவி 38-40, கும்பபுத 30-20. |
| | 2 | 7 | 24 | செ | திரு 4-22, ரே 5-27, பிரா 45-52, கர 4-22, ரா 28-4, சது விரு மழை 8-க்குள். |
| செபு சு] | 3 | 8 | 25 | புத | சது 5-26, அசு 8-3, மா 45-38, பத் 5-28, சே 1-37, ரா 4-1, அக 29-35, பூச 4 வக்செ 60-0, அவி 4 புத 38-1, அசு 2 சுக் 39-28. |
| ரச | 4 | 9 | 26 | வியா | பஞ் 7-50, பர-11-56 வை 45-20, பா 7-50, ரா 13-50, பூரட் 3 ரவி, 58-48, சனிவக்ர நிவர்தி 2-38, சஷ் உப கார் உப வை சிரா. |
| பு | 5 | 10 | 27 | வெ | சஷ் 11-25 ✳ கார் 15-54, விஷ் 45-46, தை 11-25, தியா 0-0, சத 1 புத 36-32, சப் விரு. |
| சு | 6 | 11 | 28 | சனி | சப் 15-50 ரோ 22-44 பிரி 46-45, வணி 15-50, திவி 0-47, ரா 8-33, அசு 3 சுக் 30-45, அஷ்டமிதிதி. |
| | 7 | 12 | 29 | ஞா | அஷ் 20-49 மிரு 28-55 ஆயு 48-2, பவ 20-49, ரா 22-30, அக 29-43, சத 2 புத 34-28, உத்தி 4 குரு 14-34, அதிதி. |

| | | | |
|---|---|---|---|
| குரு சுக் | | | சனி |
| ரவி | 22 மே சு | | கே செ |
| ரா பு | 23 கும் பு | | |
| | | | |

# விவேக போதினி அநுபந்தம்



சென்னைப் பொருட்காட்சியில் இந்திய சிற்பி ஒருவரால் நிர்மாணிக்கப்பட்ட
குடும்ப பொக்கிஷம் என்னும் பிரதிமையின் படம்

# Our Viceroy—Elect and his Consort



லேடி செம்ஸ்போர்ட் லார்ட் செம்ஸ்போர்ட்